உ

சுந்தரகணேசர் துணை.

# வீணாகானனன்

# ஞானேந்திரி.

இஃது

மதுரைமாநகரம்,

சுந்தர ஜெய வீர சூர தீர

கவிராஜ கந்தசாமி பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு.

நாகவேடு - ஏ. நாராயணசாமி முதலியார்

குமாரர்

N. துரைசாமி முதலியார்

அவர்களால்

சென்னை.

திரிபுரசுந்தரி விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பட்டது.

1910.

இதன் விலை அணா 8.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REJISTERED
2 K SEP 1910
MADRAS.

உ

ஓம் சுந்தரகணேசர் துணை.

# வீணைகானன் ஞானேந்திரி.

ACT I. Scene I.

தேசம் ஞானபுரி.

**கதாநாயகர்கள்.**

இராஜன் மணிப்ரவாகன்.
மந்திரி சுரேந்திரன்.
இராஜகுமாரன் வீணைகானன்.
தபசிரேஷ்டன், இல்லறவாசி, யோகானந்தன்.

திரைகடல்சூழுலகிற் செழிப்புற்றோங்கிய ஞானபுரி,யென்னும் பட்டணத்தை அரசாக்ஷிசெய்யும் மணிப்ரவாக மஹாராஜன் தனது மந்திரி பிரதானியருடன் கொலுவமர்ந்து செங்கோற் கரந்தாங்கி சிற்றரசர் திறைசெலுத்த தீரவீரப்ரகாசமாய் துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனென் றவனியோர் புகழ்ந்துரைக்கக் குடிகண்மீது கருணை வாய்ந்து அஞ்ஞான விருளகன்ற மெய்ஞ்ஞன சொரூபியாய் சதா தெய்வபக்தியிற் சிறந்தவனாய் இராஜரீகம் செய்துக்கொண்டு தனது பத்தினியுடன் இல்லற நீதி வழுவுறாமல் பகவத் பக்தியானந்தமாயிருந்தனன். இப்படி யிருக்கையில் மஹாராணி கர்ப்பவதியாகி தசமதியும் நிறைந்த ஓர் சுபதினத்தில் ஓர் ஆண்குழவியை ஈன்றனள். அருகிலிருந்த சேடியர் அதிவேகமாய்ச்சென்று அரசன் சமுகத்திலுறைத்தனர். அவ்வேந்தன் தனக்கு மைந்தன் பிறந்தானெனும் மனக்களிப்பினால் சந்தோஷமடைந்து சுபசெய்தி பகன்ற சேடியர்

கட்கு வேண்டிய வெகுமதி கொடுத்து, அருகிலிருந்த மந்திரியினால் நகரத்தோரனைவருக்கும் சர்க்கரை வழங்கி, ஏழைகளுக்கெல்லாம் அன்ன தானம், வஸ்திர தானம், சொர்ன தானம் முதலாகியவை யனைத்தும் வழங்கச்செய்தனன்.

அப்பால், இராஜஸ்திரீகள் குழந்தைக்கும் தாய்க்கும் மங்கள ஸ்நானஞ்செய்வித்தனர். மஹாராணி தனது புத்திரனை அரசன் கரத்திற்றந்து பணிந்தனள். அம்மன்னன் புத்திரனைக் கரத்திலேந்தி முத்தமிட்டு தனது சிம்மாதனத்தில் வீற்றிருந்தபடியே மைந்தனை மடியின்மீது வைத்துக்கொண்டிருக்கையில் இராஜசபையில் யாசகம் பெருவதற்காக ஜோகி, ஜங்கமர், ஆதுலர், அந்தணர் முதலானவரும், பாடகர், புலவர், வித்வான்கள் முதலானவரும் வந்து தமது சமர்த்திற் கிசைந்தபடி இராஜனை ஆசிர்வதித்து புகழ்ந்து பாடிக்கொண்டிருக்கையில் அந்தக் குழந்தையானது விஞ்ஞான சப்தத்தின்மீது செவிசாய்த்து மிகவும் இனிமையாய்க் கேட்டு சந்தோஷித்து சிரித்துக்கொண்டிருப்பதைக்கண்ட அரண்மனையிலுள்ளோரனைவரும் இந்தக்குழந்தை வீணையின்மீது ஆவலுற்றிருப்பதினால் விஞ்ஞானனெனபெயரிட்டழைத்தனர் அரசனுமவ்விதமே தனது மைந்தனைநோக்கி அப்பா! விஞ்ஞானவித்வசிரோன்மணியே யென்றழைத்து மனமகிழ் வெய்தினன். கொலு கலைந்து அந்திப் பொழுதானவுடனே மணிப்ரவாக மஹாராஜன் குழந்தையை எடுத்து முத்தமிட்டு மஹாராணியாகிய மனைவியின்கரத்திற் றந்தனன். மஹாராணியும் தனது புத்திரன்மீது அன்புவைத்து மிகவும் வாஞ்சையாய் பாலூட்டி சீராட்டி அதி மேன்மையாய் வளர்த்து வருகலாயினள். விஞ்ஞானனும் கவிழ்ந்து, தவழ்ந்து, நாளுக்கு நாள் மிகவும் மேன்மையாய் வளர்ந்து ஐந்துவயதானபிறகு மணிப்ரவாக மஹாராஜன் தனது புத்திரனாகிய விஞ்ஞானனை வித்தியாசாலையில் விடுத்துக் கல்வி கற்பிக்கச்செய்தனன்.

இராஜகுமாரனாகிய விஞ்ஞானன் வித்தியாசாலையில் அனுதினமும் சென்று ஆசிரியன் சொற்படியே எழுத்து அசை, சீர், தளை, இலக்கண, இலக்கிய சாராம்ஸம் அனைத்தும் தெளிவாய்க் கற்றுணர்ந்து சங்கீத, சாஹித்ய, கீதாமிர்த சாரானுபவத்தில் தேர்ந்தவனாயினும் தமது குலாசாரவிதிப்படியே இராஜாங்கத்திற்குரிய ஆனையேற்றம், குதிரையேற்றமும், அஸ்திர சஸ்திர வித்தையும

வேழமீதமர்ந்து வெஞ்சமர்புரியும் மார்க்கமும், அஸ்வமீதமர்ந்து அருஞ்சமர் புரியும் மார்க்கமும், தெளிவாய்க் கற்றுணர்ந்து இ[illegible]ச்சித்தனாயிருக்கையில் ஓர் நாள் தனது தந்தையானவர் மைந்தனுடைய சமர்த்தைக் கவனிக்க வேண்டுமென ஆவலுற்றதினால் ஆசிரியனால் அரண்மனையில் சிலம்பக்கூடம் ஏற்படுத்தி வித்யாசாலையில் வாசித்துணர்ந்தவை யனைத்தும் பரிசோதித்தனர். அச்சமயம் வீணாகானன் தான் கற்றுணர்ந்த வில்வித்தையின் திறமை யனைத்தும் சபையோரறியக் காண்பித்தனன். அப்போது சபையோ ரனைவரும் இவனுடைய வில்வித்தையின் திறத்தைக் கண்ணுற்று மனமகிழ்ந்தனர். அரசனாகிய மணிப்ரவாகனும் தன்னுடைய புத்திரன் சமர்த்தை மெச்சி அவனுக்கு வித்தை கற்பித்த ஆசிரியன்மீது சந்தோஷமுற்றவனாய் வேண்டிய திரவியங்களை வெகுமதியாகத் தந்தனுப்பினன்.

அப்பால் சிலவித்தை அரங்கேற்றத்திற்காக சபையில் வந்திருந்தவ ரனைவரும் அரசனால் உபசரிக்கப்பட்டு விருந்தமுதருந்தி அவரவ ரிருப்பிடமேகினர். அ[illegible]ரு வீணாகானன் தனது வித்யா கர்வத்தினால் யாதொருவரை[illegible]ம்திக்காமல் மந்திரி பிரதானியர் சேனாதிபதிகளையும் அணுவா[illegible] மதித்துத் தன[illegible]கிதர்களாகிய அற்பநேயருடன் நட்பெய்தி[illegible] ஆனந்தமாய்த்திரிந்து தனக்கிஷ்டமான போது வனவேட்டை யாடிக்கொண்டும், சிலசமயம் நாலைந்து நாள் வரையிலும் அரண்மனைக்கு வராமல் கானகத்திற்றானே திரிந்து மிருகவேட்டை யாடிக்கொண்டு வனபோஜனம் செய்துக்கொண்டிருப்பதும் வழக்கமா யிருக்கையில், அரசனாகிய மணிப்பிரவாகனுக்குத் தனது புத்திரனுடைய துர்வழக்கம் எவ்விதமாய் நீங்குமென்று விசனமுற்றவனாயிருக்கையில் ஓர்நாள் தனது புத்திரன் விஷயமாய் அரண்மனையில் வந்திருக்கும் சபையோர்முன் புகல்வதாயினன்.

மணிப்பிரவாகன்:—அறிவிற்சிறந்த சபையோர்காள்! எனதுமைந்தனாகிய வீணாகானன் தினந்தோறும் இவ்விதமாய் வீட்டுக்கியாபகமில்லாது காட்டைசுற்றிக்கொண்டு காலங்கழிக்கின்றானே ஈதென்ன விபரீதம்? இதைக்குறித்து என்மனம் பலவிதமாய் சிந்திக்கின்றனவே!

சுரேந்திரன்:—அரசே! நீர் இவற்றைக்குறித்து யோசிக்கவேண்டாம். உமது புத்திரனுக்கு இத்ததி ஓர் அழகானந்த முகவஜீகர பெண்ணைத்தேடிக் கலியாணஞ் செய்துவைத்தால் அந்தப் பெண்ணின் அழகினால் மனமயங்கி எங்கும்போகாமல் மாளிகையிற்றானே இருப்பான்.

மணிப்பிரவாகன்:—மந்திரி நீ சொல்வது ஆச்சரியமாகவே இருக்கின்றதே. எவ்விதமெனில் என்புத்திரனுக்கு இத்ததி பத்து வயதாயிருக்கின்றதே, அவனுக் கெத்தனைவயதுடைய கன்னிகையைத்தேடிக் கலியாணஞ்செய்துவைப்போம்

சுரேந்திரன்:—அரசே! தாங்கள் யோசிப்பதை யான் கவனித்துக் கொண்டேன், ஆனால் வயதைப்பற்றி யோசிக்கவேண்டிய அவஸ்யமில்லை. பத்துவயது பிள்ளைக்கு ஐந்துவயதமைந்த அழகானந்த முகவஜீகரப் பெண்ணைக் கலியாணஞ் செய்தால் அந்தப் பெண்ணின் ரூபசுந்தரத்தைக் கண்ணுற்றப் பிள்ளை ஆசைமேலிட்டு சிறு குழந்தைகளைப்போல் வேடிக்கையாக விளையாடிக்கொண்டு மாளிகையிற்றானே யிருப்பான்.

மணிப்பிரவாகன்:—மந்திரி! தனக்குச் சமானமாகிய சிநேகிதருடன் சேர்ந்து கானில் மிருகவேட்டையாடிக் களிப்புறும் பிள்ளைக்கு ஐந்துவயதுடைய பெண்குழந்தையைக் கலியாணஞ் செய்து வைத்தால் தன்னுடன் பழக்கமாய் விளையாடிக்கொண்டிருக்கும் சிநேகிதச் சிறுபிள்ளைகளை மறந்திருக்கமுடியுமோ?

சுரேந்திரன்:—அரசே! அவ்விதமாய்நினையாதீர்? கடவுள் உலகைச் சிருஷ்டித்தவுடனே ஜீவராசிகளையும்படைத்தனர். அச்சமயம் மிருகம், பக்ஷிகள் முதலானவைகளில் ஆணைக்கண்டு பெட்டைகள் ஆசைப்படும்படியாய் ஆணை அழகாய் விளங்கும்படி சிருஷ்டித்தனர். அதனால், அவைகள் ஒன்றுக்கொன்று வசியமாயிருக்கின்றது. ஆனால், மனிதர்களில்மாத்திரம் பெண்களை மிகவும் அழகாய் சிருஷ்டித்திருக்கின்றனர். அதனால், எத்தகைய உத்தமகுணமமைந்த ஆண்பிள்ளைகளும் பெண்களின் அழகானந்த முகவஜீகரத்தினால் மதிமயங்கி தனது பிராண சிநேகிதர்களையும் கொன்றுவிடும்படியான காரணத்தைத் தேடு

கின்றார்கள். இவ்விதமே வித்திரோசனென்னும் இராஜகுமாரன் தனது உயிரும் உடலும் ஒன்றாயமைந்த நட்பாயிருந்த மந்திரிக்குமாரனைப் பிரிந்ததுமன்றி அவனை எவ்விதமாயினும் கொன்று விடுவோமென தீர்மானித்து விட்டானே. அப்படியிருக்க நமது விஞ்ஞானனுக்கும் ஓர் கன்னிகையைத்தேடிக் கலியாணஞ்செய்துவிட்டால் அவன் தனது அற்ப நேயருடன் சேராமல் அரண்மனையிற்றானே யிருப்பான்.

மணிப்பிரவாகன்:—மந்திரி! மனையாளால் சிநேகிதரை வெறுப்பதெனின் ஆச்சரியந்தான். என்றாலும் நீ புகன்ற வித்திரோசன் யாது காரணத்தினால் தனக்குப் பிராண சிநேகிதனாயிருந்த மந்திரிமகனைக்கொன்றுவிடத்தீர்மானித்தனன். அதனை யான் கவனிக்க விபரமாய்ப் புகல்வாய்.

சுரேந்திரன்:—அரசே! அவ்விதமே புகல்கின்றேன் கவனிப்பீர்.

## பெண் மாய்கையால் மதியழிந்த வித்திரோசன் கதை.

பூதலம் புகலரும் கீர்த்திவாய்ந்த இராஜ ராஜேஸ்வரா! முற்காலத்தில் நியாயபுரி என்னும் பட்டணத்தைப் பரிபாலனஞ் செய்திருந்த நியாயகேசரி யென்னும் அரசன் தனது புத்திரன் எத்தகியும் புத்தியில்லாதவனைப்போல் மந்திரிகுமாரனுடனே கூடிக்கொண்டு திரிகின்றானே யென்னும்மனவிருத்தமுடையவனாயிருக்கையில் ஓர்நாள் தனது மந்திரியை நோக்கி உனது புத்திரனால் எனது மைந்தன் விளையாட்டு விஷயமாய்க் கெட்டுப்போகின்றான். ஆகையால், இன்று முதற்கொண்டு உன்னுடைய புத்திரன் என் மைந்தனுடன் சேரவொட்டாமல் தடுத்துவிட வேண்டுமென்று ஆக்யாபித்தான். அரசன் கட்டளையைச் சிரமேற்வகித்த மந்திரியானவன் தனது புத்திரனை வரவழைத்து, அப்பா! இன்றுமுதல் நீ! இராஜ

குமாரனுடன்சேர்ந்தால் உன்னை என்முன்வரவழைக்கேன் அன்றியும், அந்த இராஜகுமாரனுடன் சிநேகிதமாயிருப்பாயாகில் உன்னை வீட்டிற்சேர்க்காமல் அடித்துத் துறத்திவிடுவே னென்று பலவிதமாய்ப் பயங்கரப்படுத்தி திட்டஞ்செய்துவிட்டுமறுதினத்தில் அரண்மனையில்வந்து அரசே! தாமும் உமது புத்திரனை எனது குமாரனுடனே சேரவேண்டாமென்று தடுத்து விடுவீரென்று மிகவும் தாழ்மையாய்ப் புகன்றனன்.

மந்திரியானவன் மனவிசாரமாய்ப் புகன்றதையுணர்ந்த நியாயகேசரியானவன் பரிதாபமடைந்தவனாய் மந்திரி நீ யாதொன்றுக்கும் மனச் சஞ்சல முறாதே உனது புத்திரனைமாத்திரம் என் மைந்தனுடன் சேராதவிதமாய்ச் செய்து விடுவீராகில் அதுவே போதுமானதென்று சொல்லிவிட்டுத் தனது மைந்தனை வரவழைத்து, அப்பா வித்திரேசா! நீயோ இராஜகுமாரனாயிருப்பதினால் நீ வெகு கவுரவமா யிருக்கவேண்டும். அவ்விதமிருந்தால் யாவரும் உன்னை இராஜனென்று மதிப்பார்கள். அப்படி யில்லாமல் நீ அற்பசிநேகிதம் பிராண சங்கடமென்னும் தன்மையாய துஷ்ட பிள்ளைகளுடன் சேர்ந்து திரியாதே யென்று பலவிதமாகிய நீதிவாக்கிய மனைத்தும் விபரமாய்ப்புகன்றலும் கேளாமல் தந்தையே! தாங்கள் சொல்வதும் உண்மையே. யானும் அவ்விதமே நமது நகரவாசிகளிடத்தில் சிநேகம்செய்வதில்லை ஆனால், துணையோடல்லது தனிவழி போகேலென்னும் தன்மையாய் யான்போகிற தேசங்களிலெல்லாம் மந்திரிகுமாரனை யழைத்துக்கொண்டு போகின்றேன். ஆனால், அவனும் துணை யில்லாவிட்டால் யான் தனிமையாய்த் திரிவதற்காகுமோவென்று சொல்லிவிட்டு மறுபடியும் போய்விட்டான்.

ஆனால் மந்திரிகுமாரன் மாத்திரம் தனது தகப்பன் சொன்ன வார்த்தைக்கிணங்கி எவனாயிருந்தாலும் சிநேகித தோஷத்தினால் வந்தது வரட்டும் தாய்தந்தையர் சேர்க்காவிட்டாலும் அரசகுமாரனிருக்கும்வரையிலும் நமக்கு பயமில்லையென்று மனம் துணிந்தவனாய்ப் பிரயாணமாயினன். அச்சமயம், சமயம் எத்தறி வாய்க்குமென்று எதிர்ப்பார்த்திருந்த அரசகுமாரனும் வந்துவிட்டான். இருவருமாய்ப் பழையபடியே ஊரைச் சுற்றித் திரிந்துக்கொண்டு விளையாட்டு விஷயமாய்க் காலங் கழித்துக்கொண்டு பசிவேளைக்கு

பக்ஷணம் புசியாமலும் ஏழைக் குடியானவனுடைய பிள்ளைகள் வறுமையா லிளைத்துக் களையுறுவதுபோற் காலங்கழித்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்விருவரும் இவ்விதமாய்த் திரிந்துக்கொண்டிருப்பதைக் கவனித்த அரசனுக்கு மனந்தாளாமல், மந்திரியை நோக்கி இவ்விருவரையும் யென்ன செய்யலாமென்று விசாரித்தனன் அச்சமயம் மந்திரிக்கு யாதொன்றுந் தோற்றாமல் அரசே! இன்றைய தினத்திலிருந்து எனது புத்திரனை யான் எனது வீட்டில் அடைத்துவைத்து பசிவேளைக்கு பக்ஷணங்கொடுத்துக்கொண்டு வெளியிற் போகாமற்படிக்குக் காவலாளிகளை போட்டுவைக்கிறேனென்று சொல்லிவிட்டுத் தனது புத்திரனை வரவழைத்து, அவனை யாதொன்றும் விசாரியாமலே தனது மாளிகையின் ஓர்விடுதியில் அவனை விடுத்து, அங்குதானே இருக்கவேண்டுமென்றாக்ஞாபித்து இரண்டு கொலையாளிகளை அங்கு காவல்வைத்து, இவன் இந்தவிடுதியைவிட்டு வெளியிற்சென்றால் முன்பின் பாராமல் இரண்டு துண்டமாய் வெட்டிப் போடுவீரென்றாக்யாபித்துவிட்டு, அவனுக்கு அன்னாகாரமுதலானவையும் அந்தவிடுதியிற்றானே கொடுத்துப் புசிக்கும்படியாய்க் கொடிய சிறையாக்கி வைத்திருந்தான்.

இங்ஙனம் இவனுடையநிலை இத்தகையதா யிருக்கையில், இராஜகுமாரனாகியவித்திரேசன் தனது உயிர்த்தோழனாகிய மந்திரிகுமாரன் தன்னைப்பிரிந்து தனிச்சிறையாயிருப்பதைக் கேள்வியுற்று மனம் சலித்தவனாய், பசுவைப்பிரிந்த கன்றுபோல், திடீரென்று மந்திரியின் மாளிகையிற்போய் தனது சிநேகிதனாகிய மந்திரிகுமாரனிருக்கும் பயங்கரமான சிறையைப்பார்த்து, ஆ! எனதன்பிற்கினிய நேயா! என்னால் உனக்கித்தகைய ஆபத்துண்டாச்சுதேயென கண்ணீர் சொரிந்துக்கதறியழுது பூமியிற்சோர்ந்து வீழ்ந்தனன். அந்த பரிதாபநிலையைக்கண்டவர்களனைவரும் இராஜபுத்திரனை தேற்றி அநேகவிதமாகிய தைரியவார்த்தை யுரைத்து அரண்மனைக்கு வருகுவீரென் றழைத்தனர். அவர்கள் யாதுரைத் திடினும் யான் எனது உயிர்த்தோழனை இவ்விடத்தில்விடுத்துயானெங்கும்போகேனென்று சொல்லிவிட்டான். மந்திரி குமாரனும் அரசகுமாரனைப் பார்த்தவுடனே அவனும் விசனமுற்று அன்றைய தினத்திலிருந்து அன்னாகாரம் புசிப்பதில்லை, இவ்விசேஷ மனைத்தும் அங்கிருப்பவர்

கள் அரசனுக்குத் தெரிவித்தார்கள். அவ்வேந்தன் அதிசயித்து
சகி! அப்படியானால் எத்தனை நாளைக்கு வித்திரேசன் அங்கிருக்கின்
றானோ அதுவரையில் மந்திரிமாளிகையிற்றானே அவனுக்கு அன்ன
வஸ்திரம் கொடுத்துக் காப்பாற்றும்படி ஆக்ஞாபித்தனன். அவர்க
ளும் அவ்விதமே நன்றென்று சம்மதித்து இராஜகுமாரனுக்குப் பல
கார பக்ஷணங்களும், அன்னாகாரமும் கொடுத்தாலும் அவன்புசியா
மலும், என்னுடைய பிராணசிநேகிதன் சிறையிருக்க யான் சுகபோ
ஜனம் புசித்து மனமகிழ்வதா யான் ஒருபோதும் சம்மதியேன் என்
பிராணம்போனாலும் சகியேன் அன்ன ஆகாரம் புசியேன், இவை
களை யெல்லாம் எடுத்துக் கொண்டுபோய் உமது அரசனுக்குக்
கொடுத்துப் புசிக்கச்சொல்லுமெனப்புகன்று, அங்ஙனமே உட்கார
ந்துக் கொண்டிருந்தான்.

இவ்விபரீத கன்காக்ஷியைக் கண்ணுற்றவர்கள் அரசனிடம்
சென்று இராஜகுமாரன் புகன்றவையனைத்தும் ஒன்றேனும் விடா
மல் விபரமாயுரைத்தனன். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற அர
சன் மந்திரியைநோக்கி இனி இவ்விபரீதத்திற்கியாதுசெய்வதென்ற
பரிதாபமாய் வினவினான். அப்போது சபையிலிருந்த மந்திரி பிர
தானியர்கள் ஆலோசனைபுரிந்து மஹாப் பிரபு அவ்விருவருக்குப்
யாதேனும் ஓர் தந்திரத்தினால் பகை நேரிடச் செய்துவிட்டால்தான்
நலமாயிருக்கும் அவ்விதமின்றி அவர்களை எவ[illegible]மாகிய தொ
தரைச் செய்தாலும் முடியாதுயென்று தெரிவித்தார்கள். அவ்
வார்த்தையைக்கேள்வியுற்ற அரசனும் மெய்தானென்றுணர்ந்து
சரி அப்படியானால் அவ்விதமாகிய நட்புவாய்ந்த நேயர்களை பகை
படுத்துவதற்கு யாவராலாகுமென்று விசாரிக்க அதற்கு யாதொ
ருவராலு முடியாதென்று சொல்லிவிட்டார்கள். இச்சங்கதியை
யுணர்ந்த ஓர் தாய்க்கிழவி தந்திரமாய் அரண்மனை வாசற்படியில்
அந்திப்பொழுதுவரையில் காத்திருந்து கொலு கலைந்தவுடனே யா
வரும் அவரவ ரிருப்பிடத்திற்குப் போய்விட்ட பிறகு அரசனும்
வெளியிற்செல்ல புறப்படுகையில் வாசற்படியில்காத்திருந்த தாய்க்
கிழவியானவள் அரசனைப்பணிந்தனள். அரசன்யாதுகாரணமென்ற
வினவ அவள் அரசனுக்கு நமஸ்காரம்புரிந்து மஹாப் பிரபு உமது
புத்திரனுக்கும், மந்திரிகுமாரனுக்கும் பகைமூட்டி விடுகின்றேன்
எனக்கு செலவு கொடுப்பீரென்றனள். அரசனும் சம்மதித்து அவ்

ளுக்குவேண்டிய திரவியந்தந்து நீ எவ்விதமாயினும் அவ்விருவருக்கும் பகைமூட்டிவிட்டால் உனக்கு ஆயிரம் விராகன் இனாமாகக் கொடுப்பேனென்று உறுதியாய்ச் சொல்லிவிட்டான். அவ்வார்த்தையையுணர்ந்த கிழவி மனமகிழ்ந்து அரசே! இத்தினமே இராஜகுமாரனையும், மந்திரி குமாரனையும் விடுதலைசெய்து அவர்களிஷ்டப்படியே திரியும்படி ஆக்ஞாபித்துவிடுமென்று சொல்லிவிட்டுத் தனது வீட்டுக்குப் போய்விட்டாள்.

அப்பால் அரசன் மந்திரிகுமாரனை விடுதலைசெய்து அவனுடனே அரசகுமாரனையும் வரவழைத்து, அவ்விருவரையும் பார்த்து அப்பா! நீங்கள் இருவரும்வேளைவேளைக்குத் தவறாமல் அரண்மனையில் வந்து என்னுடன் அன்னம் புசித்துவிட்டு பகல் முழுவதும் இந்நகரத்திற்றானே விளையாடிக்கொண் டிருப்பீர்களென்று ஆக்ஞாபித்துவிட்டான். அவ்வார்த்தையை யுணர்ந்த இராஜகுமாரனும், மந்திரிகுமாரனும் மனோல்லாசத்துடன் சந்தோஷித்தவர்களாய் முன்னினும் விசேஷ வாஞ்சை யுடையவர்களாய் ஒருவரை யொருவர் விட்டுப்பிரியாமல் வேளைவேளைக்குத் தவறாமல் அரண்மனையிற் சென்று அரசனுடனே அறுசுவைபதார்த்த திவ்யான்ன சுகபோஜனம் புசித்து விடுவதும், மற்றவேளையில் அருகிலிருக்கும் நந்தவனத்திற்சென்று விளையாடிக் கொண்டிருப்பதுமா யிருந்தார்கள்.

அந்தசமயத்தில் முன்னம் இவ்விருவரையும் பகையாக்க அரசனிடத்தில் உத்திரவு பெற்றுச்சென்ற தாய்க்கிழவியானவள் தன்னிடமிருக்கும் தாசிப்பெண்களில் மிகவும் அழகானந்த முக வசீகரமுடைய ஓர் கன்னியை நவரத்ன கசிதமயமாய்த் துலங்கும் ஆடை ஆபரணங்களாற் சிங்காரித்துத் தன்னுடனே அழைத்துக்கொண்டு அந்திப்பொழுதில் நந்தவனமார்க்கமாய் வந்து அங்ஙனம் உலாவிக்கொண்டிருந்தனள். அப்போது மந்திரிகுமாரன் அந்தக் கிழவியிடத்திற்சென்று, நீங்கள் ஆண் துணையின்றி இந்நந்தவனத்தில் வந்து அந்திப்பொழுதாகும் வரையில் உலாவித்திரிகின்றீர்களே உங்களுக்குக் கொஞ்சமும் பயமில்லையோ வெனக் கேட்டான். அவ்வார்த்தையை யுணர்ந்த அந்தக்கிழவி அந்தப்பெண்ணை இடது கையிற் பிடித்துக்கொண்டு, அப்பா! மருமகனே! தாங்களிருக்கும்போது எனக்கு வேறொருதுணை என்னத்திற்கென்று சொல்லிக்கொண்டே அந்தப்பெண்ணை அவன்முன் விடுத்தனள். அவனும் தமது வழக்

கத்திற் கியன்றவிதமாய் மந்திரிகுமாரன்மீது கடைக்கண் பார்வை செலுத்தி முல்லையரும்பெனத் துலங்கும் பல்வரிசை பளபளவென ஜொலிக்கும்படியாய்ப் புன்னகைபுரிந்துகொண்டே மந்திரிகுமாரன் வலதுகையைப் பிடித்துக்கொண்டு வீட்டுக்குப் போவோம் வருவீரென்றழைத்தனள். அச்சமயம் மந்திரிகுமாரன் மனமயங்கி தனது உயிர்த்தோழனாயிருந்த இராஜகுமாரனையும் கவனியாமல் அந்த தாசிப்பெண்ணுடனே போய்க்கொண்டிருந்தான். அந்தசமயத்தில் இராஜகுமாரன் அதிசயித்து, ஈதென்ன ஆச்சரியம்? எப்போதும் நம்மைவிட்டுப்பிரியாத நமது சிநேகிதனாகிய மந்திரிகுமாரன் இப்போது நம்முடனே பேசாமல் தனியாய்ப் போகின்றானேயென்று சந்தேகமுற்றவனாய் அருகில் வருகலாயினன். அச்சமயம் தாய்க்கிழவி இராஜகுமாரனுக்கு முன்பாகவந்து, ஆ! எனது ஆசைமருமகனே யான் உமக்காக இந்தப்பெண்ணை அழைத்துக்கொண்டு வந்தேன். மந்திரிகுமாரன் உமக்குமுன் ஓடிவந்து அந்தப்பெண்ணை கைவசப்படுத்திக்கொண்டு அழைத்துக்கொண்டு போகிறார், இனி யானென்னசெய்வேன்? யென்று பரிதாபமாய்ச் சொன்னாள். அப்போது இராஜகுமாரன் அவர்களருகில் வந்தவுடனே. அந்தப்பெண்ணின் அழகைக்கண்டு மதிமயங்கி சோர்ந்து யாதொன்று பேசுதற்கும் நாவெழாதவனாய் அவர்களுடனே தாசிவீட்டுக்குப்போயினன் அச்சமயம் தாய்க்கிழவி இராஜகுமாரனுக்கும், மந்திரிகுமாரனுக்கும் பலகாரபக்ஷணங்கொடுத்து பசியாறச்செய்து, தாம்பூலங்கொடுத்து, நீங்கள் நாளையதினம் வந்தால் உங்களில் எவர்களுக்காகினும் ஒருவருக்கு இந்தப்பெண்ணை சம்மதிக்கச் செய்கின்றேன் போய்வாருங்களென்று அனுப்பிவிட்டாள். அப்போது அவ்விருவரும் அந்தப்பெண்ணின் மீதிருக்கும் ஆசையினால் ஒருவருக்கொருவர் பேசாமல் தனித்தனியே அவரவர்கள் வீட்டுக்குப்போயினர்.

இவர்கள் இப்படியிருக்கையில் அரசன் தனது புத்திரனைப் பார்த்து மைந்தா உனது சிநேகிதன் எங்கு சென்றான் என்று கேட்கையில் இவன் யாதொன்றும் சொல்லாமல் மவுனமாயிருந்தனன். மறுபடியும் இராணி தனது புத்திரனைப்பார்த்து, அப்பா! வித்திரோசா இத்தினம் நீ யாது காரணமாய் இத்தகைய மனவிசாரமுற்றிருக்கின்றாய்? உனது சிநேகிதனாகிய மந்திரிகுமாரன் எங்கு சென்றிருக்கின்றான்? அவன் இன்றையதினம் யாது காரணமாய்

உன்னுடனே வரவில்லை? யென்று கேட்டாள். இராஜகுமாரன் மிகவும் கோபமுடையவனாய் அம்மணி! அந்தத் துன்மார்க்கனைக் கொன்றுவிட்டால் என் மனவருத்தம் தீருமென்றனன், அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற இராணி மனந்திகைத்து, அடா! மகனே நீங்களிருவரும் இணைபிரியாதிருந்தீர்களே உங்களுக்கு நேர்ந்தகஷ்டமென்னவென்று கேட்டாள். அச்சமயம் இராஜகுமாரன் மனவிசாரமுற்றவனாய் அம்மணி நமது தேசத்திலிருக்கும் ஓர் தாசியானவள் தன்னிடத்திலிருக்கும் ஓர் கன்னியை எனக்காக அழைத்துவந்தனள். அதை அவன் கவனித்து என்னென்னவிதமாகவோ தந்திரவார்த்தைகள் பேசி தனது வசம் செய்துக்கொண்டு என்னை மோசஞ்செய்தனனென்றுசொன்னான். இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற மஹாராணி தனது மணாளனுக்குத் தெரிவித்தனள் அரசன் தாசியின் தந்திரத்திற்கு மெச்சியவனாய் அவளை வரவழைத்து அவளுக்கு வேண்டிய வெகுமதியளித்து அந்தப்பெண்ணை தனது அரண்மனைத் தோழிப்பெண்களில் ஒருத்தியா யமைத்துக்கொண்டான். அன்றைய முதற்கொண்டு இராஜகுமாரன் அந்தப்பெண்ணுடனே விளையாடிக்கொண்டிருக்கும் வழக்கத்தினால் தனது உயிர்த் தோழனா யமைந்திருந்த மந்திரிகுமாரனையும் மறந்துவிட்டான்.

ஆகையால், உமது புத்திரனாகிய வீணாகானன் சிறுவயதினால் சிநேகிதருடன் சேர்ந்து விளையாடிக்கொண்டிருக்கின்றான். அவனுக்கு அழகானந்தமாயிருக்கும் ஓர் பெண்ணைக் கலியாணஞ்செய்து வைத்துவிட்டால் அந்தக்கன்னியின் மீதுற்ற காதலால் தனது நேயர்களையெல்லாம் மறந்துவிடுவானென் றுரைத்தான். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அரசனும் சம்மதித்து! சரி! அவ்விதமே செய்வோம் ஆனால் இவன் வயதிற்கிளைய பெண்கள் எந்தேசத்திலிருப்பார்கள்? எங்குகண்டு தேடுவதுயென்று ஆலோசனைசெய்துக்கொண்டிருந்தனன். இப்படியிருக்கும் நாளையில் ஓர்நாள் சிந்துதேசத்தரசனாகிய சித்ரவீரிய மஹாராஜன் யாதோ ஓர் காரியமாய் ஞானபுரிக்கு வருவதற்காக யோசித்திருக்கையில் எழுவயதுடைய தனது குமாரத்தியாகிய ஞானேந்திரியையும் தன்னுடனே யழைத்துக்கொண்டு வந்தான். அவன் வருகையைக்கண்ணுற்ற மணிப்பிரவாகன் மனமகிழ்ந்து வாரும் வாரும் மைத்துனரே ஏதேது எங்கு சென்றாலும் புத்திரியைத் துணைபற்றி செல்கின்றீரேயென பரிகாச

மாய்ப் புகன்றனன். அவ்விரண்டு வேந்தரும் மைத்துனன் முறையாகிய ஒற்றுமைச் சிநேகிதராகையால், ஒருவர்க்கொருவர் வாலிப நட்பின் வார்த்தைகளால் சிலநேரம் தமாஷாய்ப்பாஷித்துக்கொண்டிருந்தபின் அரசன் தனது மைத்துனர் வந்தாரென்னும் மனமகிழவெய்தியவனாய் அன்றையதினத்தில் சீக்கிரமாய்க் கொலுகலைந்து யாவரையும் அவரவரிருப்பிட மனுப்பிவிட்டு, சிந்துதேச மன்னனாகிய சித்திரவீரியனை அழைத்துக்கொண்டு தனது மாளிகையில் வந்தனன், மஹாராணிபார்த்தவுடனே மனமகிழ்ந்து வருவீர் அண்ணாவென்று உபசரித்து ஒருவர்க்கொருவர் க்ஷேமலாபத்தை விசாரித்துக்கொண்டிருக்கையில் ஞானேந்திரியைப்பார்த்து அண்ணா உமது குமாரத்தியை எனதுமைந்தனாகிய வீணாகானனுக்கு மணஞ்செய்து வைத்து கண்ணுற்றகமகிழ்வோமென்றாவலுற்றேன். ஆனால், இளவயதாயிருக்கின்றாளே யென்றனள், அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற சித்திரவீரியன் சொல்லுகின்றான், தங்கா! நீர் புகல்வது உண்மையே யாயினும் எனது குமாரத்திக்கு தற்சமயம் ஏழுவயதாயிற்று, குழந்தையாச்சுதேயென்றான். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற ஞானேந்திரி கலகலவெனச் சிரித்தனள். மஹாராணி சந்தோஷித்து ஆ! எனதருமை மருமகளே! ஏன் சிரித்தாயென்று வினவ அந்தப்பெண் சொல்வதாயினள்.

ஞானேந்திரி:—மாமி! தாங்கள் சொல்வதும் என் தந்தை சொல்வதும் எனக்கு ஆச்சரியமாயிருக்கின்றது, அஃதெவ்விதமெனின் எனக்கு ஏழுவயதோ? என் சரீரத்திற்கு ஏழுவயதோவென, எனக்கு பெருநகை யுண்டாயிற்று.

மணிப்பிரவாகன்:—சரி! சரி!! மைத்துனா! இது நல்ல கேள்வியாயிருக்கின்றனளே! இவையனைத்தும் நம்மைப் போன்றவர்கட்கு தெரியுமோ? ஞானிகளைப்போற் பாஷிக்கின்றனளே!

சித்ரவீரியன்:—ஆம் அதற்கென்ன சந்தேகமா எப்படிப்பட்ட ஞானவானும் என்குமாரத்தியின் முன் ஞானார்த்த தத்துவ வேதாந்த விசாரணையைப் பேசுவதற்கியலாதெனின் நாம் எவ்வளவு?

மணிப்பிரவாகன்:—சரி! அப்படியானால்ஞானரகஸ்யத்தன்மையை நாம் கொஞ்சங்கவனிப்போம். அம்மணி! நீ! தற்சமயம் புகன்

றவை கவனிக்கில், நீவேறு உன்னுடைய சரீரம் வேருகவா யிருக்கின்றது?

ஞானேந்திரி:—ஆம் அதற்கென்ன சந்தேகமா? கடவுள் உலகைப் படைத்தவுடனே ஆன்மாவையும் படைத்தனர். ஆனால் வானத்திலிருக்கும் சந்திரனை மேகம் மறைப்பதுபோல் அஞ்ஞான இருட் சூழ்ந்து அறிவை மயக்கி பாபகிர்த்தியங்களைச் செய்ய தூண்டும்போது நினைத்துச் செய்யுந் தொழிலே ஊழ்வினை. அந்த ஊழ்வினையினாலே சரீரம் வாய்ந்து பிராரத்வ கர்மானுசாரத்தை யனுபவிக்கும்போது ஊழ்வினையா லெய்திய பாப புண்ணியம் நீங்கினால், பாம்பு சட்டையை கழட்டுவதுபோற் சரீரம் ஆன்மாவை விடுத்துப் பிரிந்துபோகும், ஆனால் சரீரமாத்திரம் பிறப்பதும் இறப்பதுமா யிருக்கின்றன. ஆன்மா இறப்பதுமில்லை பிறப்பதுமில்லையே அப்படியிருக்க எனக்கு ஏழு வயதென்னச் சொன்னால் அறிவுடையோர் சம்மதிப்பார்களோ? ஒருமனிதன் மே[illegible]ஸ்திரம் அழுக்கானவுடனே அதைகளைந்து விட்டு மறுவஸ்திரந் தரித்துக்கொள்வதுபோல் ஆன்மாவுக்கு சரீரமெனும் சட்டை அடிக்கடி மேற் போர்வையா யமைந்து கழன்றுபோனால் நானென்பது ஆன்மாதானே சரீரத்தை எப்படிச் சொல்லுகின்றீர்? ஈதென்ன ஆச்சரியம்?

என, ஞானானந்தமாய்ப் பாஷித்துக்கொண்டிருக்கையில் மணிப்ரவாகன் ஆச்சரியமடைந்து சித்ரவீரியனைப்பார்த்து, மைத்துனா! உமது புத்திரியின் ஞான பிரசங்கத்திற்கு பதில்சொல்ல நம்மால் முடியாது, ஆனால், நாளையதினம் நமது அரண்மனையில் வித்வ பிரசங்கிகள் அநேகர் வந்திருப்பார்கள். அவர்கள் முன் பிரசங்கிக்கும்படி செய்வோமாகில் நலமாயிருக்கு மென்றனன். சித்ரவீரியனும் அப்படியே செய்வோமென்றனன். அப்பால் அன்றிரவு போஜனமானபிறகு அவரவர்க் கிசைந்த விடத்தில் அரண்மனைத் தோழிப் பெண்களால் அலங்காரஞ் செய்துவைத் திருந்தபடியால் யாவரும் தனித்தனியே சயனித்து அருணோதயமான பிறகு எழுந்து ஸ்நானபான நேமநிஷ்டை யாவும்புரிந்து, பலகாரபக்ஷணம் புசித்துவிட்டு, தாம்பூலம் தரித்துக் கொண்டு அரண்மனைக்கு வருவ தாயினர். பிறகு அங்கராத் தரசனாகிய மணிப்பிரவாகனும் ஆடை ஆபரண

சிங்கார அலங்கிர்தனாய் மணி மகுடம் சிரசிற்சூடி கரத்திற்செங்கோலேந்தி மந்திரி பிரதானியர்சூழ சிம்மாசனத் தமர்ந்தனன்.

அச்சமயம், இராஜ குமாரனாகிய வீணாகானனும் வீணையைக் கரத்திலேந்தி அவற்றிற்குரிய துணைக்கருவிகளேந்திய தனது நேயர்களுடனே இராஜசபையில் வந்தமர்ந்து முதலில் சபைரமிக்கும்படியாய் தாளம் மத்தளம் முதலானவை யனைத்தும் சரிப்படுத்தி சுதிமீட்டி இராக ஆலாபரணை செய்து, ச, ரி, க, ம, ப, த, நி, ச, வென்னும் அக்ஷர காலங்களையும் சேர்த்து மனோல்லாசமாய்ப் பாடினான். அத்தருணம் சபையோரனைவரும் மெய்மறந்து ஆனந்தபாவசமடைந்தவராயிருந்தனர். ஆனால் ஞானேந்திரி சிறுவயதமைந்த கன்னியாகையால், தானும் தனது தந்தையுடனே இராஜ சமுகத்தில் வந்திருந்தபடியால், வீணாகானன் மீட்டிய வீணையினிசைக்கு மனமகிழ்ந்திருந்தனள்.

இவ்விநோத கச்சேரிகாலக்ஷேபத்தில் வந்திருந்தவர்களில் ஒருவராகிய ஓர் மஹான் தமது செய்கைக்கு அவையனைத்தும் மனவெறுப்பா யிருந்தபடியால் சபையோர்களுக்குச் சொல்வதாயினர்.

**யோகானந்தன்:**—சங்கிதங்கேட்டு சந்தோஷமெய்திய சபையோர்களே உலகினிலுதித்த மாந்தர்கள் மவுனமுற்று சுயம்புவாகிய ஜோதியைக் காண்பது மஹாபிரயாசையாகும், அப்படி மவுனமுற்று நமசிவயவென்னும் பஞ்சாக்ஷரத்தை ஜெபித்துக்கொண்டிருப்பதுதான் மறுமைக்குப்பயன்தரும் ஆத்மலாபமாகும், அஃதன்றி வீணிற் கூச்சலிட்டுச் சந்தடிசெய்வது நலமல்ல.

**இல்லறவாசி:**—சுவாமி! தாங்களுரைப்பது சாஸ்திர சந்தேகமாயிருக்கின்றதே, மனிதர்களாய்ப்பிறந்தோர் பத்திவிஷயத்தை நாடுவதற்காக சாஸ்திரப்புராண இதிகாச முறைப்படியே பகவானுடைய திருநாமத்தையும், அவர் நம்மைக் காக்கும் தயாளத்தையும் பாடலாய்ப்பாடி பஜனை செய்துக்கொண்டு பூஜாவிதி வழுவுறாமல் சுப கர்மம் புரிந்துகொண்டிருந்தால் மறுஜனனத்தில் நல்ல சம்பத்துடையவர் வயற்றில் பிறந்து சுகானந்தமாயிருப்பதற்காகும். அஃதன்றி, செத்தவீட்டில் தூக்கங்காப்பதுபோல யாதொரு சந்தடியும் செய்யாமல் சும்மாயிருந்தால் நமது குறையை பகவான் அறிவாரோ?

யோகானந்தன்:—ஈதென்ன ஆச்சரியம் பகவான் நம்மைப்போன்ற மனிதனோ? அவர் எங்கும் நிறைந்த ஜோதி சொரூபமாயிருக்கின்றவர்கட்குக் கத்திக்கதறி கூச்ச லிட்டால் தான் தெரியுமோ? ஈதனைத்தும் அறிவுடையோர்கட்கு சம்மதமாகாது.

தபசிரேஷ்டன்:—அப்படியல்ல பகவானை தபத்தின் பெருமையால் கண்டுகளித்து சுகமடையக்கூடும். அதற்காகவே யாகாதிகள் செய்து தேவர்களுக்கு அவிர்ப்பாகங்கொடுத்து, அத்தேவர்களின் சகாயத்தினல் பகவானைக்கண்டு நமக்கு வேண்டுமான வரம் பெறுவதற்காகும். அஃதன்றி வேறுவிதமாய் சிந்திப்பதனல் மோக்ஷவழியை நாடுவதற்கியலாது.

என, இம்மூவரும் அவரவர்கொள்கைக் கிசைந்த விதமாய்ப் பாஷித்துக்கொண்டிருக்கையில் ஞானேந்திரி யென்னும் பெண் எழுந்து நின்று சொல்வதாயினள்.

ஞானேந்திரி:—சர்வ கலாவல்ல சாஸ்திர புராண நான்மறையுணர்ந்த பெரியோர்களே! பகவானை எவ்விதமாயாவது தியானஞ்செய்து முத்தியடையக்கூடும். அஃதெவ்விதமெனின், ஞானியானவன் தானே சிவமெனத் தெளிந்தால் மோக்ஷமடையக்கூடும். இதற்கு சாக்ஷி சுகர். யோகியானவன் நினைவற்று நிர்ச்சிந்தையாகி சுயம்புவாகிய ஜோதிப்ரகாசத்தை நாடியிருந்தால் மோக்ஷமடையக்கூடும். இதற்கு சாக்ஷி அகஸ்தியர். பக்தனனவன் "குழந்தையானது தாயைக்காண அழுதழுது தேடிப்பார்த்தால் அந்தத் தாயானவள் குழந்தையின்மீது பக்ஷம் வைத்திருப்பதுபோல்" பகவானைக் காணும்படிக்கு பிரயாசையெடுத்து அவருடைய தயாள குணத்தையும், தன்னுடைய பரிதாப குணத்தையும் பாடியாடி மனமகிழ்ந்திருந்தால் மோக்ஷமடையக்கூடும். இதற்கு சாக்ஷி பிரகலாதனன். கர்மியானவன் சுபகர்மகைங்கரியங்களுடனே தானதருமபரோபகாரம்புரிந்துக்கொண்டிருந்தால் அநித்யமாகிய சரீரத்தைவிட்டு நித்ய ஜீவனைப்பெற்று மோக்ஷமடையக்கூடும். இதற்கு சாக்ஷி வல்லாளமஹாராஜன். ஆகையால் அவரவர்கொள்கைபோல் பக்தி செலுத்தி மோக்ஷமடையக்கூடும்.

என, ஞானேந்திரி புகன்றதை வினவிய யாவரும் சரிதானென்றொப்புக்கொண்டிருந்தனர், என்றாலும் மணிப்ரவாகனுக்குத்தனது புத்திரன் வீணாகானனாயிருக்கையில் மருமகளும் ஞானவதியா யிருப்பது நமது பாக்கியவசந்தானென்று, சித்ரவீரியனைப் பார்த்து உமது புத்திரியை எனது புத்திரனுக்கு விவாகஞ்செய்தால் நலமென யோசிக்கின்றேனென்றான் அம்மன்னனும், அவ்விதமே நன்கெனச் சம்மதித்தனன். அப்பால் மணிப்பிரவாகன் தனது மந்திரியைநோக்கி மனோல்லாசமாய்ப் புகல்வதாயினன்.

மணிப்பிரவாகன்:—மந்திரி! சிலசேனைகளை யனுப்பி நமது நகரமுழுதும் சிங்காரஞ் செய்யும்படியாகவும், சில தூதுவரையனுப்பி சகல தேசத்தரசரையும் அழைத்துக்கொண்டு வரும்படியாகவும் செய்வாய்.

என, திட்டப்படுத்தினன் அமைச்சனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து யாவும் சித்தப்படுத்தினன். அரண்மனை ஜோதிடனும் அரசன் வாக்கியப்படியே ஓர் சுபதினமேற்படுத்தி விவாகமுகூர்த்தத்திற் கிசைந்த இராசி லக்கினாதி சுபதினத்தைக் கணித்துக் கொடுத்தனன். அப்பால் மணவரைப்பந்தல் ஜோடித்து, வீணாகானனுக்கும், ஞானேந்திரிக்கும் சுமங்கிலிய ஸ்திரீகளால் நலங்கணிந்து மங்களஸ்தானஞ்செய்வித்து நவரத்தின கசிதமயமாய்த் துலங்கும் ஆடை ஆபரணாதிகளணிந்து மணவரையில் உட்காரவைத்து வேதவேதியர் மந்திரோச்சாடன வேள்வியனைத்தும் வழுவுறாமற்செய்து கலியாண சடங்கனைத்தும் நடத்தி சுகிபவாவென்றாசீர்வதித்திடவும், வீணாகானன் ஞானேந்திரியின்கழுத்தில் மங்கிலியம்சூட்டி மனமகிழ்ந்தனன். வாத்தியகோஷ்டங்களும் வெகுவிமரிசையாய் முழங்கியது. சபையோரனைவரும் சதிபதி மனமகிழ்வாய் வாழ்ந்திருக்கும்படி ஆசீர்வதித்தார்கள்.

அப்பால் வந்த விருந்தினரனைவரும் அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுக போஜனம் புசித்துவிட்டு மணிப்ரவாகனிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு அவரவரிருப்பிட மேகினர். அப்பால் வீணாகானன், தனது ஜன்மத்திற் பிறந்தது சரியாயமையுமென்பதுபோல, தனது கரத்தில் வீணையை எடுத்துக்கொண்டு வெளியேபுறப்பட்டுவந்து ஓர் மலையடிவாரத்திற்போய் அங்கிருக்குஞ் சோலையிற்

சென்று, தனது கரத்திலிருக்கும் வீணையைமீட்டி வாசித்தனன். அச்சமயத்தில் ஓர் இராக்ஷஸ ஸ்திரீ அங்ஙனம் வந்து, அந்தசங்கீதத்தைக்கேட்டு ஆனந்தமடைந்து, அவனை தின்னாமல் தனது வாசஸ்தானமாகிய குகையில் கொண்டுபோய் வைத்துக்கொண்டாள்.

---

Scene 2.

இடம். வனம்.

**கதாநாயகர்கள்.**

வீணாகானன் வைஷ்ணவன் மாயராக்ஷசி.

---

இங்ஙனம் நிற்க, ஆறாத்துயராற்கலங்கி ஆபத்தடைந்த வீணாகானன் விதிவசமே இனி எவ்விதம் பிழைப்பதென மனமிரண்டு, அடடா, ஈதென்ன நாம் இந்த இராக்ஷசியினிடம் அகப்பட்டுக்கொண்டோமேயென்று மனவிசாரமுடையவனாய் அவளுக்குத் தெரியாமல் மறைந்து, அடுத்தகானின் வழியாய்ப்போய்க்கொண் டிருக்கையில் ஓர் கிளைவழிதோன்றியது, அங்ஙனம் விதவிதமான விருக்ஷங்களடர்ந்து, அந்தவிருக்ஷங்களின் கிளைகளில் விதவிதமான பக்ஷிகள் வந்துட்கார்ந்து பாடிக்கொண் டிருப்பதாயின. இவையனைத்தும் கவனித்துணர்ந்த வீணாகானன் ஆச்சரியமுற்றவனாய் 'நாம் பூமியிற் பிறந்து இத்தனை நாளாய் இத்தகைய அழகமைந்த பக்ஷிகளைப் பார்த்தறியோம். இத்தகி நமது அதிர்ஷ்டானுகூலத்தினால் அந்த இராக்ஷசி நம்மை இங்ஙனம் எடுத்துக்கொண்டு வந்துவிட்டபடியினாலல்லவோ இத்தவைபவக் கண்காக்ஷியைக் கண்டோமென்று மனக்களிப்பாய் வருகையில் பசியின் கொடுமை வெகுவாய்த் தொந்தரைசெய்வதாயின. அந்தமார்க்கமாய் வருகையில் ஓர் சிற்றூர் காணப்பட்டது. அங்கிருக்கும் ஓர்கிழவியிடத்தில் "தனது ஆபரணங்களில் ஒன்றை விற்கிரயஞ்செய்து" நாலுவிராகன் கொடுத்து, சில நாள் அங்ஙனமே இருந்தான். அந்தக்கிழவியும் தனக்குயாதொரு துணையுமில்லாதிருக்க அகஸ்மாத்தாய் வீணாகானன்வந்து நாலுவிராகன் கையிலகொடுக்கவே! இவன்தான் தனக்குபிள்ளையென மன

த்து, அவன் பசிவேளையறிந்து அறுசுவைபதார்த்த திவ்யான்ன சுகபோஜன பலகாரபக்ஷணாதிகள் தந்து காப்பாற்றினாள். வீணாகானனும் பசிவேளைக்குவந்து சாப்பிடுவதும் மற்றவேளையில் அங்கிருக்கும் நந்தவனத்திற் சென்று சங்கீதசாஹித்ய இசைவழுவுறாமற் பாடுவதுமாய்த் தனது கரத்திலிருக்கும் வீணையைமீட்டிக்கொண்டிருப்பான். அச்சமயம் அங்ஙனம் சிலவழிப்போக்கரும் சந்நியாசிகளும் வந்து அவன்பாடும் சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

இவ்விதமாய்ச் சிலநாட்சென்றபின் ஓர்நாள் ஓர் சந்நியாசி கண்களில் ஜலம்விடுத்தழுதனன். அப்போது வீணாகானன் தனது பாடலை நிறுத்தி, ஐயா! சந்நியாசியே யான் வாசிக்கும் வீணாகானத்தைக்கேட்கும் யாவரும் மனமகிழ்ந்திருக்கையில், தாங்கள் ஏன் இத்தகையதாய்ச் சித்த ப்ரமையுற்றவராய் அழுகின்றீரென்று விசாரித்தனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அந்த சந்நியாசி தனது மனவருத்த மனைத்தும் புகல்வதாயினன்.

## சஞ்சலமடைந்த சந்நியாசியின் கதை

ஐயா! சங்கீதவித்வானே! சுந்தரபுரியில் கப்பல் வியாபாரியாயிருந்த சுகானந்தசெட்டியார் எனது தந்தை அவருக்கு யாங்கள் ஐந்துபிள்ளைகளிருந்தோம். ஆனால் எனது தாய்தந்தைய ரிருவரும் என்மீது மிகவும் ஆசையாயிருப்பார்கள். ஏனெனில் யான் கடைசி பிள்ளையாகையால், என்மீது அவ்வளவு அன்பும் பிரியமும் வைத்து தங்களுடைய கண்களைப்போல் காப்பாற்றினார்கள். ஆனால் எனது தமயன்மார் நால்வரும் எனது தகப்பனைப்போலவே ஆழிசஞ்சாரியாய்ச்சென்று நாலாதீவிலுஞ்சென்று பணம்சம்பாதிக்கும் திறமையுடையவர்களாயிருந்தனர். யான் மாத்திரம் அப்படியல்ல உண்பதும் உடுத்துவதும் ஊரைச்சுற்றிவருவதுமாயிருப்பேன், எனது தந்தை எனக்கு வித்யாப்பியாசஞ் செய்விக்கும்படியாய் வெகுபிரயாசையடைந்து வையகமெங்கும் கீர்த்தியடைந்த வித்வான்களால் பற்பலவித்தையும் கற்பித்துக்கொடுத்து சங்கீதசாஹித்யமனைத்தும் இசைவழுவுறாமற் பாடும்படியாய் செய்துவிட்டனர். யானும், அன்றையதினத்திலிருந்து வீண்காலம்போக்காமல் தினந்தோறும் அங் [illegible]ப்பொழுதான்விட்டேன் என்னுடைய சிநேகிதர்களுடனே சேர்ந்து

சங்கீதசாஹித்ய இசைவழுவுறாமற் பாடிக்கொண்டிருப்பேன். அச்சமயம் அநேகம்பேர் அங்ஙனம் வந்து வேடிக்கைபார்த்து கொண்டிருப்பார்கள். அப்படியிருக்கையில் சிலநாட்சென்றபின் எனது சிநேகிதர்கள் என்னை சந்தோஷப்படுத்தி புதிதாய் ஓர் நந்தவனமேற்படுத்தும்படியுரைத்தார்கள். அச்சமயம் யான் அவர்கள்சொற்படியே நன்கெனச்சம்மதித்து, எனது தகப்பன் தேடிவைத்த திரவியங்களையும், எனது தமையன்மார்கள் ஆழிசஞ்சாரியாய் சகலதீவுகளிலும் திரிந்து சம்பாதித்த திரவியங்களையும் என்னிடத்தில் ஒப்பித்துவிட்டுப் போயிருந்தபடியால், யான் அவர்கள் வருவதற்குள் சிநேகிதருடனே சேர்ந்து இலக்ஷக்கணக்கான பொருள்களை வீண்செலவுசெய்து எனது தேசத்திற் கருகாமையிலுள்ள நந்தவனத்தை சீர்திருத்தம் செய்து, தெய்வலோகத்தைப்போல நவரத்தினங்களிழைத்த பொன்றூண்களும் சித்ரவேலைசெய்த சுவர்களுமாயமைத்து இராஜ அரண்மனைபோற் சிங்காரித்து, ஆங்காங்கு ஜலவசதிக்கான நீராழி மண்டபங்களும், நிலைக்கண்ணாடிகளும் அமைத்து யான் உட்கார்ந்து வீணைவாசிப்பதற்காக நவரத்னமிழைத்த பசும்பொன்னாலமைத்த ஸ்தானமேற்படுத்தி, சுற்றிலும் விதவிதமான புஷ்பச்செடிகளமைத்து, அவைகட்கு அலங்காரமாய் அவைகளின் அருகில் பலவிதமான இனிமைசேர் கனிதரும் விருக்ஷங்களமைத்து பார்ப்போர்களின் மனது மயங்கும்படியான விநோத கண்காக்ஷிகளனைத்தும் விநோதமாய் ஜோடித்துவைத்திருந்தேன். அச்சமயம் எனது சிநேகிதர்கள் கண்டு, இவ்வளவு வைபவக் கண்காக்ஷியாயிருப்பதற்கு அனுதினமும் இங்ஙனம் அழகானந்த முகவஜீகர தேஜஸமைந்த தாசிகளின் நடனகச்சேரி நடந்தால் தேவேந்திர பதவியைப்போல் சுகானந்தமா யிருக்குமென்றுரைத்தார்கள். யானும் அவர்கள் சொற்படியே பொருள்களை வீண்செலவுசெய்து யாவும் சித்தப்படுத்திவிட்டேன். சிநேகிதர்களும் தெய்வரம்பைகளைப்போலவும், கந்தர்வ ஸ்திரீகளைப்போலவும் அழகமைந்த ரூபசுந்தரிகளாகிய பெண்களை சகலதேசங்களிலிருந்தும் வரவழைத்துவிட்டனர்.

அச்சமயம் எனது மனமயங்கி, யாதொன்றும் தோற்றாமல் வீட்டிலிருந்த திரவியங்களையெல்லாம் காற்றிற்பறக்கும் தூசுபோல் மதித்து வந்தவர்களுக்கும் போனவர்களுக்கும் செலவுசெய்துக் கொண்டு, யான் வீணாகானஞ் செய்துக்கொண்டு சங்கீதசாஹித்ய

மாய்ப்பாடுவதும், அந்த நடனமாதர்கள் நாட்டியஞ்செய்வதுமாய் என்னிடத்தில் மிகவும் அன்புபாராட்டி சரசசல்லாபமாய் விளையாடிக்கொண்டிருப்பார்கள். இவ்விதமே யான் அற்பசிநேகிதம் பிராணசங்கடமென் றுணராமல் ஒருவருஷத்திற்குள் என்னிடமிருந்த பொருள்களனைத்தும் செலவாக்கிவிட்டுக் கடன்வாங்கியும் செலவழித்துவிட்டேன். அப்பால், எனக்கும் அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமாய்விட்டது, அச்சமயும் சிநேகிதர்களும் நடனதாசிகளும் என்மேல் மனம்வெறுத்து அவரவ ரிருப்பிடத்திற்கு ஓடிப்போயினர். யான் இவையனைத்தும் கவனித்து அடடா! ஈதென்ன ஆச்சரியம்

விருத்தம்.

ஆலிலைபூவுங்காயும் அளிதருபழமுமுண்டேல்
சாலவேபக்ஷியெல்லாம் தன்குடியென்றேவாழும்
வாலிபர்வந்துதேடி வந்திப்பார்கோடிகோடி
ஆலிலையாதிபோனல் அங்குவந்திருப்பாருண்டோ.

என்னும் தன்மையாய் யாவரும் ஓடிப்போய்விட்டனர். இனி சனியன்விட்டது சங்கடந்தீர்ந்தது சஞ்சலம் ஒழிந்ததென்று சிவத்தியானமாய் வீணகானஞ் செய்துகொண்டிருந்தேன், இவ்விதமாயிருக்கையில் ஆறிசஞ்சாரியாய்ச் சென்றிருந்த என்னுடைய தகப்பனும் தமயன்மார்களும் தேசத்தில் என்னைக்கண்டார்கள். ஆனல் யான் அவர்களைக்காண நாணமுற்றவனாய் தலைமறைவாயிருந்தேன். அச்சமயம் அருகிலிருப்பவர் என்னுடைய சமாச்சார மனைத்தும் அவர்களிடத்தில் விபரம் விபரமாய்ப் புகன்றனர்.

அவ்வார்த்தையை கேள்வியுற்ற அவர்கள்மனம் வெறுத்து விசனமாயிருந்தனர். அவர்கள் மனக்குறிப்பையுணர்ந்த யான் எனது காலவித்தியாசத்தை நினைந்து இனிசந்நியாசியாய் போய்விடுவதே உத்தமமெனக் கருதியவனாய் காவிவேஷ்டியணிந்து கானகமார்க்கமாய்வந்து கடவுளை தியானித்துக்கொண்டிருக்கின்றேன். இந்த வீணகானத்தினால் தானே யான் வீட்டைவிட்டு காட்டுக்குப்போகலாயிற்று, ஆகையினால் நீயும் எந்த தனவர்தனுடைய பிள்ளையோ இந்தவீணகானத்தினால் இவ்விதமாய்வருகலாயினையென்று விசனப்படுகிறேனென் றுரைத்தான். இவ்வார்த்தையைக்கேள்வியுற்று

வீணைகானன் சிரித்து, ஐயா! என்னுடைய சரித்திரத்தைக்கேட்டால் மண்ணும் மரமும் கண்ணீர்த் ததும்பிக்கதறியழுதிடுமென்று தானடைந்த சஞ்சலமனைத்தும் விபரமாய்ப் புகன்றனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்றவர்களனைவரும் ஆச்சரியமுற்றவர்களாயிருந்தனர்.

அப்பால், அந்திப்பொழுதானவுடனே யாவரும் அவரவரிருப்பிடமேகினர். வீணைகானனும் வீட்டுக்குவந்து இராப்போஜனம் புசித்துவிட்டு திண்ணையின்மீதுட்கார்ந்து சற்றுநேரம் வீணையைமீட்டி சங்கீதசாஹித்யமாய்ப் பாடிக்கொண்டிருந்தனன். அப்போது அங்கிருப்பவர்களிற் சிலர் நாளையதினம் நமது இராஜசமஸ்தானத்தில் சகலருக்கும் விருந்தமைக்கப்படுமென்றனர்கள், வீணைகானன் இராஜபோஜனம் புசித்து வெகுநாளானபடியால் நாளையதினம் தானும் அரண்மனைக்குப்போவதற்கு சித்தமாயிருந்தான். அன்றிரவில் யாவரும் நித்திரைபுரிந்து விழித்தெழுந்து அதிகாலையில் அரண்மனையிற்சென்று அறுசுவைபதார்த்த திவ்யான்ன சுகபோஜனம் புசித்துவிட்டு வந்தனர். அவர்களுடனே வீணைகானனும் போயிருந்தவனானபடியினால் இராஜபோஜனம் புசித்தவுடனே தனது மனது ஓர்விதமாய்மாறி தனது தேசத்திற்குப்போய் விடுவோமெனக் கருதியவனாய் கிழவியைப்பார்த்து அம்மா! எனக்குக்கொஞ்சம் கட்டுசாதம் கட்டிக்கொடுப்பாயென்றனன். அவளும் சரிதானெனச்சம்மதித்து இரண்டுவேளைக்காகும்படி நல்லபதார்த்தத்துடனே கட்டுசாதம் கட்டிக்கொடுத் தனுப்பினாள்.

அப்பால் வீணைகானன், கட்டுசாதமூட்டையைத் தோளில் எடுத்துக்கொண்டு, வீணையைக்கரத்திலேந்தி வனத்தைநாடி சென்றனன். அப்போது வழியிலெதிருற்ற ஓர்நந்தவனத்தைக்கண்டு, அங்ஙனம்சென்று கட்டுசாதமூட்டையை ஓர் பக்கத்தில் வைத்துவிட்டு அங்கிருக்கும் உன்னத தாமரைப்பொய்கையிலிறங்கி ஸ்நானபான நேமநிஷ்டை முடித்துக்கொண்டு கரையின்மீதுவந்து வஸ்திரமணிந்துக்கொண்டு அந்நந்தவனத்தில் சற்றுநேரம் உலாவித்திரிந்து அங்கிருக்கும் மணமலர்களைப் பறித்துக்கொண்டு மாலையாய்ப்புனைந்து வாசனைமுகர்ந்துக்கொண்டு, அங்கு அடர்ந்து செழிப்புற்றிருக்கும் விருக்ஷங்களிற் காய்த்துக் கனிந்திருக்கும் இனிமைசேர் கனிவர்க்க

ங்களைப்பறித்துப் புசித்து நன்னீரருந்திக் களையாறினபின் ம
யும் வசந்தமண்டபத்தில் வந்துட்கார்ந்து வீணையைக்கரத்தி
தனது சஞ்சலத்தை பாடலாகச்செய்து ஆகிரிராகத்தில் மிகவும்
ணமாய்ப் பாடிக்கொண்டிருந்தனன். அச்சமயம் அவ்வனத்தில்
கும் மிருகங்களும், பக்ஷிகளுங்கேட்டு மனமயங்கி இருந்தவிட
ருனே சோகமாயிருந்ததுகள். ஓர் வைஷ்ணவன் அவ்விடம்
அந்தபாடலின் பரிதாபத்தையும் வீணையினுடைய சுதியையு
ட்டு மனமகிழ்ந்தவனாயினும் அந்த ஆகிரிராகத்தை மாத்திரம்
லாகா தென்றனன்.

வைஷ்ணவன்:—அப்பா! உன்னைப்பார்த்தால் மிகவும் பரிதா
யிருக்கின்றது. ஆனாலும் நீ என்னென்ன கஷ்டநிஷ்டூர ப
ந்தாயோ? அவ்விதமாயிருக்க மறுபடியும் ஆகிரிராகத்
பாடுகின்றாயே, இனிமேலாகிலும் அந்தராகத்தைவிட்டு வே
ராகத்தைப் பாடிக்கொண்டிருப்பாய்

வீணைகானன்:—என்ன ஆச்சரியம்? எல்லாவிதராகமும் ஆண்
னால் விளைந்திருக்க ஆகிரிராகம் என்ன பாபத்தைச்செய்
டது. அதை என் பாடக்கூடாது?

வைஷ்ணவன்:—அப்பா! சகலமும் ஆண்டவனால் உற்பத்தியா
தான். ஆனாலும் அந்த ஆகிரிராகத்தைப் பாடவும் கூட
அதனை கேட்கவுங்கூடாது. யான் முன்னமே தெரிந்திரு
இவ்வழியில் பிரவேசிக்கமாட்டேன். சங்கீத சப்தங்கேட்
தேயென்று சற்றுகேட்கவந்தேன் இதனைக்கேட்டதினால்
யானும் * பட்டினியாயிருக்க நேரிட்டது.

வீணைகானன்:—ஆ! அப்படியா? யான் பிறந்து இத்தனைநாளா
இதுவரையில் இந்த ஆகிரிராகத்தின்மீது பழிசொன்ன
ளில்லை, தாங்களென்னமோ நூதனமாய்ச் சொல்லுகின்
இந்த ஆகிரிராகம் உன்னை என்னசெய்தது?

வைஷ்ணவன்:—அந்தராகம் நல்லராகந்தான் அது என்னை
தொரு துன்பமும் செய்யவில்லை. நன்மையேவிளைத்தது

* பட்டினி — அன்னமில்லாமல் பசியாயிருப்பது.

லும் சகலராகங்களையும்பாடினாலும் அந்த ஆகிரிராகத்தைமாத்திரம் பாடினவனுக்கும் அதைக்கேட்டவனுக்கும் அன்றைய தினத்திற்குமாத்திரம் அன்னமகப்படாது.

வீணாகானன்:—சரி! அப்படியானால் இப்போது அந்த ஆகிரிராகத்தையே மறுபடியும் பாடுகின்றேன். ஏதோ எனக்கு அன்னம் கிடைக்காதா பார்ப்போம்.

என, தன்னிடமிருக்கும் கட்டுசாதமூட்டையைப் பார்த்துக் கொண்டு இன்றைய தினம் முழுமையும் நம்து பசிதணியும் பக்ஷணம் அதோ நமது எதிரிலிருக்கின்றதே இவன் எவ்விதமாய் நம்மைபட்டினியா யிருப்பாயென்று சொன்னானென அதையே பாடலாய்த் தொகுத்துப் பாடிக்கொண்டிருந்தனன். அச்சமயம் ஓர் பருந்து திடீரென பறந்துவந்து அந்தகட்டுசாதத்தைக் கவ்விக்கொண்டோடிப்போய்விட்டது. அச்சமயம் அருகிலிருந்த வைஷ்ணவன் வீணாகானனைப்பார்த்து ஐயா! தாங்கள் என்சொல்லைத்தடுத்து அந்த ஆகிரிராகத்தைப்பாடியதினாலல்லவோ கட்டுசாதத்தைப் பறிகொடுத்தீரென்று சொல்லிவிட்டுத் தனது வாசஸ்தானத்திற்குப் போய்விட்டான்.

அப்பால் வீணாகானன் மனமெலிந்து அங்கிருந்து புறப்பட்டு வருகையில் ஓர் கிளைவழிதோன்றியது அம்மார்க்கமேசென்று அடுத்த நகரின் சத்திரத்திற்போய் சயனித்துக்கொண்டான். அன்றையப்பகலில் புசிக்க அவனுக்கு அன்னமகப்படாமல் மனஞ்சோர்ந்திருந்தனன். என்றாலும், அன்றையதினம் பகல் இருபதுநாழிகையில் அந்நகரத்தரண்மனையில் யாசகருக்கு அன்னதானம் செய்தபடியால் அந்தசத்திரத்திலிருந்த அனைவரும் அரண்மனையில் நடக்கும் விருந்துக்குப் போயினர். அவர்களுடனே வீணாகானனும் போய் உட்கார்ந்தனன். ஆனால் அன்றைய தினத்தில் இராஜபத்தினி அனுஷ்டித்துக் கொண்டிருந்த கௌரீவிரதம் முடிந்துவிட்டபடியால் சாஸ்திரவிதிப்படி தன்கையினாலேயே யாசகருக்கு அன்னம் படைத்தனள், பிறகு சுயம்பாகிகள் அடிக்கடிகொண்டுவந்து கொடுக்கும் பதார்த்தங்களையும் இலையில் வைத்துக்கொண் டிருக்கையில் வீணாகானனுக்கு தேள் கொட்டினவருக்கு விஷமேறுவதுபோல் சரசரவென்று சந்தோஷசாரம் பெருகிக்கொண்டு நாவில் நந்நீர்சுரந்துகொண்டிருக்கையில், சாதத்தில் பருப்பும்நெய்யும்போட்டு சாப்

பிடுவீர்களென்று சொன்னவுடனே வீணாகானன் பசியின்கொடுமையினால் அன்னங்கிடைத்த சந்தோஷத்தினால் சிச்சி! ஆகிரியே சாகும்வரையில் உன்னை நினைக்கக்கூடாதென்று சாதத்தைக்கையிலெடுத்தவுடனே. அந்த இராஜபத்தினியின் பெயர் ஆகிரியானபடியால் அருகிலிருந்த சாப்பாட்டுராமன்களுக்கு கோபம்பெருகி வீணாகானனையடித்து உதைத்து அடடா துன்மார்க்கா கிஞ்சித்தேனும் விஸ்வாசமில்லாமல் மஹாராணியை தூஷிக்கின்றாயோவென அடித்தனர். அவன் குய்யோமுறையோவெனக் கூச்சலிட்டுக் கதறியழுதனன். அச்சமயம் காவலாளிகள் யாவரையும் கையமர்த்தி கலகஞ்செய்தவர்களைமாத்திரம் அழைத்துக்கொண்டு அரண்மனைக்குப்போய் சங்கதியை விசாரிக்க வீணாகானன் விளைந்த சமாச்சாரமனைத்தும் விபரம் விபரமாய்ப்புகன்று ஐயா! அந்த ஆகிரிராகத்தைப்பாடியதினால் அடி உதைபடலாச்சுது அன்னம் கிடையாமற்போச்சுது அதனால் அந்த ஆகிரிராகத்தை சாகும்வரையில் நினைக்கலாகாதென்று சொன்னேன்.

அச்சமயம் இவர்கள் என்னை அநியாயமா யடித்தார்களென்றழுதனன். அவன் மொழிந்தவையனைத்தும் வினவிய அரசன் சிரித்து, அடடா! நீயொன்று நினைந்தால் இவர்களொன்று நினைந்தார்கள், அஃதெவ்விதமெனில் நீ ஆகிரிராகத்தின்மீது கோபித்துதூஷித்தாய், இவர்கள் இராஜபத்தினியின் பெயர் ஆகிரியாச்சுதே இவன் அன்னமிட்டவர்வீட்டில் கன்னமிட்டவிதமாய் அன்னம்படைத்த அரசபத்தினியைதூஷித்தானேயென்று அடித்தனர். இதைப்பற்றி நீ விசனப்படவேண்டாமென்று அவனை அன்னபதார்த்தம் புசிக்கச்செய்து ஆடை, ஆபரணாதிகளும், வழிச்செலவுக்கு வேண்டியதிரவியமும் கொடுத்து, அன்றையதினம் அந்தசபைகளிக்க வீணாகானஞ்செய்யும்படியாய சொன்னார். அவனும் அவ்விதமே நன்கெனச்சம்மதித்து, இராவணனுக்குற்ற ஆபத்தை தவிர்த்த சங்கராபரணராகத்தை சபையோர் மகிழும்படியாய்பாடிவிட்டு, தனக்கு கிடைத்த வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு, இனி நமக்கு நற்காலம் வாய்த்ததென்றெண்ணியவனாய் அரண்மனையைவிட்டு ஆரண்யமார்க்கமாய் வருகையில் ஓர்கிளைவழிதோன்றியது, அம்மார்க்கத்தில் ஓர் குகைகாணப்பட்டது அங்கு ஓரழகமைந்த தேவகன்னிகையைப்போன்று எதிரில்வந்த பெண்ணைப்பார்த்து விசாரிப்பதாயினன்.

வீணாகானன்:—பெண்ணே நீயார்? நீ இந்த பயங்கரமான கானகத்தில் வந்திருக்கும் காரணமென்ன?

மாயராக்ஷசி:—ஐயா! யான் இருப்பது இதற்கருகாமையிலுள்ள சிறு கிராமம், இங்கு காற்றுவாடைக்காகவந்து உம்மைக்கண்டு மனமகிழ்ந்தேன்.

வீணாகானன்:—அடடா! ஈதென்ன அற்புதம்? இவளைப்பார்க்கும்போதே இவ்வளவு அழகானந்த முகவஜீகரமுடைய தேவஸ்திரீயைப்போ லிருக்கின்றாளே! இவள் வசிக்கும் தேசம் எவ்வளவு விநோதமயமாயிருக்குமோ? இவ்விதமும் பெண்கள் பிறந்திருப்பார்களோ? இவளென்ன உண்மையான ஸ்திரீயோ? அல்லது தங்கப்பதுமையோ? பதுமையாகில் இவ்விதமாய் நம்முடன் பேசுமோ? காளமேகத்தை நிகர்த்த கருங்கூந்தலில் பருதி, மதி பிரகாசிக்குந் தன்மையாய் விளங்கும் நவரத்தினங்களிழைத்த சந்திரபிறை சூரியபிறை யணிந்திருக்கும் சிங்காரமும், பூரணச்சந்திரோதயம்போற்பிரகாசிக்கும் நெற்றிக்கலங்காரமாயமைந்துள்ள குமிழமலர்ப்போன்ற நாசியில் நத்து புலாக்கணிந்து, வள்ளைக்கொடியில் மின்மினிப்பூச்சு பிரகாசிக்குந்தன்மையாய் விளங்கும் இருசெவிகளுக் கலங்காரமாய் நவரத்தின கசிதமயமாய்த் துலங்கும் பொன்னாபரணங்களும், பிரகாசிக்க, தங்கப்பதுமைக்கு சிங்காரித் திருப்பதுபோற்காணக் கண்கூசுந் தன்மையாய் எதிரில் பிரகாசமாய் உலாவுகின்றனளே.

என்று பெருமூச்சுவிடுத்து திடீரெனபூமியிற்சோர்ந்து மயங்கி வீழ்ந்துவிட்டான். உடனே அந்த மாயராக்ஷசி அவனையெடுத்துக் கொண்டு தனது வாசஸ்தானத்திற்குகொண்டுபோய்த் தனது எஜமானியிடம் கொடுத்தனள். அவள் வீணாகானனை சமைத்துத்தின்பதற்குமனமில்லாமல் அவனைத் தனது குமாரத்திக்குக் கலியாணஞ்செய்துவைத்து க்ஷேத்திராநந்தமாய்ப் பார்த்துக்கொண் டிருப்போமென்று வீணாகானனை மலரணைமஞ்சத்திற் படுக்கவைத்து அவனுடைய மனமயக்கந்தீரும் விதமாய் பன்னீர்தெளித்து குளிர்ந்தகாற்று வீசும்படியாய் விசிறிக்கொண் டிருந்தனர்கள்.

அப்பால் வீணகானன் மூர்ச்சைதெளிந்து கண்விழித்துப்பார்த்தனன். அச்சமயம் அங்ஙனம் விதவிதமானநவரத்னகசிதமயமாய் விளங்கும் பொற்றூண்களமைந்து அந்த தூண்களில் விதவிதமான நவரத்தின செடிகளும் கொடிகளும் படர்ந்து மாயாவினோதபக்ஷிகள் அமர்ந்து சங்கீதகாயனங்களைப் பாடிக்கொண் டிருக்கவும் அதைசூழ்ந்த நீராழிமண்டபங்களில் பலவிதமாகிய அழகமைந்த மச்சங்களும் முதலை முதலாகிய ஜலராசிகளும் அமைந்திருக்கவும் அந்த தடாகங்களில் ராக்ஷசஸ்திரீகள் தமது ரூபம் மாறுதலாய் தேவகன்னியர்போற் பிரகாசித்து ஸ்நானஞ்செய்து விளையாடிக் கொண்டிருக்கவும், எங்குபார்த்தாலும் நவரத்தினங்கள் குவியல்குவியலாய் குவித்திருக்கவுங்கண்டு வீணகானன் பிரமித்து, அடடா! யாமென்ன தூங்குகின்றோமோ? விழித்திருக்கின்றோமோ? ஈதென்னகனவோ? நினைவோ? வென்று சந்தேகமுடையவனாய் வெகுநேரம் யோசித்தும் யாதும் தெரியாமல் தனது கையைக்கடித்துக்கொண்டு பார்த்தான். நோயதிகரித்தது சரி! சரி!! நாம்விழித்திருக்கின்றோம். ஆனால் யாம் முன்பு இருந்தஸ்தானம் யாதொன்றுமில்லாத ஆரண்யமாயிருந்து இப்போது இவ்வளவு சிங்காரமாயிருக்கும் காரணமென்னவென்று யோசித்துத் தனது கரத்திற்றாங்கிய வீணையைமீட்டி சற்றுநேரம் சங்கீத சாஹித்யமாய்ப்பாடினான். அந்த வீணைகச்சேரியைக் கேள்வியுற்ற மாயராக்ஷசிக ளனைவரும் வந்து சூழ்ந்து அருகிலுட்கார்ந்துவேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தனர். வீணகானனுக்கு முன்னிலும் விசேஷமனமயக்கமுண்டாகி மூர்ச்சித்து வீழ்ந்து விட்டான். மாயராக்ஷசிகள் களை தெளிவித்து அவனுடைய பசியாறும் பலகார பக்ஷணங்கொடுத்து புசிக்கச் செய்தனர். அவனதிக பசியோடிருந்தபடியால் அவர்கள் படைத்த பக்ஷணம் புசித்துப் பசியாறி களைதெளிந்தவுடனே சற்று நிதானித்து, சரி! சரி!! நாம் தேவலோகத்தில் வந்துவிட்டோம். இவர்க ளனைவரும் தேவஸ்திரீகளென தீர்மானித்து யிருந்தனன்.

இவன் நினைவு இவ்விதமாயிருக்கையில் அந்திப்பொழுதானவுடனே ஓர் பேரிரைச்சல் கிளம்பியது அச்சமயம் வீணகானனும் கண்விழித்துப் பார்த்துக்கொண் டிருக்கும்போதே சகலமும் பலவிதமாய்மாறி தேவஸ்திரீகளைப்போ லிருந்தவர்களெல்லாம் விகாரரூபமுடைய ராக்ஷசஸ்திரீகளைப்போலும் பொற்றூண்களாயிருக்கு

வையனைத்தும் பூமியிற் சாய்ந்து மேஜைகளாகவும், தடாகங்களாயிருந்தவை யனைத்தும் புஷ்பச்செடிகள் நிறைந்த நந்தவனமாகவும் மாறிவிட்டது. எங்குபார்த்தாலும் பலவிதமாகிய விளக்குகளின் வெளிச்சம் தோற்றவும் பார்த்த வீணாகானன் தனது தலைவிதியை நினைந்து நினைந்து விசனமடைவதும் சிரிப்பதுமா யிருந்தனனேயன்றி கிஞ்சிற்றும் அஞ்சவில்லை, இவ்விதமா யிருக்கையில், மாயராக்ஷசிகளில் சிலர் தங்களுடைய மாயஜாலசமர்த்தினால் விதவிதமான ரூபமமைந்து விளையாடுவதும் நடனஞ்செய்வதும், ஆட்டகச்சேரி, பாட்டுகச்சேரி செய்வதுமா யிருந்தனர். இவையனைத்தும் கவனித்த வீணாகானன் ஆச்சரியமாய் வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருக்கையில், சிலராக்ஷசிகள் மனிதர்களை உயிருடனே பிடித்துக்கொண்டுவந்து, அவர்களை அறுத்துச் சமைத்துப் பாத்திரங்களில் கொண்டுவந்து வைத்தார்கள். உடனே அவர்களெல்லாம் ஆட்டகச்சேரி பாட்டுக்ச்சேரி முதலானவை யாவையும் நிறுத்திவிட்டனர். அச்சமயம், ராக்ஷசிகள் அந்த நரமாம்ஸ பக்ஷணத்தைபுசித்துவிட்டு அவரவர் மஞ்சத்திற்போய்ச் சயனித்துக்கொண்டார்கள். அப்போது இந்த விபரீதமனைத்தும் கவனித்த வீணாகானன் மனந்திகிலுற்றவனாய் அன்றிரவு முழுதும் நித்திரையின்றியவனாயிருந்து, இரவு பதினைந்து நாழிகையில் யாவரும் நித்திரை செய்தானபின்பு மெல்லென எழுந்து, இனிநாம் தாமதித்திடில் நம்மையும் இவர்கள் பக்ஷணஞ்செய்து விடுவார்களென்று பயந்து, அவ்விரவிற்றானே வனசஞ்சாரியாய் ஓடிப்போய் விட்டான், பொழுது விடிந்தவுடனே இராக்ஷசிகள் விழித்தெழுந்து வீணாகானனைக்காணாமல் யாவரோ கொன்று தின்றுவிட்டாரெனக்கருதி விசனமுற்றவர்களாய் ஒருவர்மீதொருவர் சந்தேகமுற்றிருந்தனரேயன்றி வீணாகானன் ஓடிப்போயின சங்கதியை கவனிக்கவில்லை. ஆனால், வீணாகானன் மாத்திரம் தப்பிப்பிழைத்தது தாய்வயறு பாக்கியந்தானென்று ஓடிவருகையில் மனிதசஞ்சாரமில்லாத ஆரண்யமார்க்கமாய்ப் பிரயாணமாய்ச்சென்று நாலைந்து நாளாய்ச் சுற்றியலைந்தும் மனிதர் காலடியை காணாமல் எங்குபார்த்தாலும் நாலுகஜம், ஐந்துகஜமுடைய ராக்ஷதர் காலடிகளாகவே இருந்தது, வீணாகானன் விதிவசமேயென்று நடந்துகொண் டிருந்தனன்.

Scene 3.

இடம். வனம்.

**கதாநாயகர்கள்.**

ஞானேந்திரி வனதேவதை.

இங்ஙனம், நிற்க முன்னம் வீணுகானன் தனது சுயதேசமாகிய ஞானபுரியை விடுத்து, ஆரண்யமார்க்கமாய அலைந்துகொண்டிருக்கையில், அவனுடைய பத்தினியாகிய ஞானேந்திரியென்னும் பெண் தனது மணுளன் வனவாசியாய்ப் போனதைக்குறித்து விசனமடைந்தவளாய் துயருற்றுக்கொண்டிருந்து ஓர்நாள் தனது நாயகனைத் தேடும்பொருட்டு யாருடனும் புகலாமலரண்மனையைவிடுத்து, ஆரண்யமார்க்கமாய்ச்சென்றனள். அச்சமயம், அவள் ஏழுவயதுடைய கன்னிகையானதினுல் ஆபத்தில்லாவிட்டாலும் ஆரண்யத்தில் தனியாய்ச் செல்வதினுல் பயங்கரமடைந்து, பகற்காலத்தில் வழிநடப்பதும் இராக்காலத்தில் விருக்ஷங்களின் கிளைமேலிருந்து சயனிப்பதும், பசிவேளைக்கு காய்கனிகளைப் பறித்து புசித்துக் களைதெளிந்து வழிநடப்பதுமா யிருக்கையில், ஓர்நாள் பகற்காலத்தில் நடக்கச்சக்தியற்று ஓர் ஆலவிருக்ஷத்தின் நிழலில் சயனித்து அப்படியே நித்திரைசெய்துவிட்டு இரவு பதினைந்து நாழிகையில் விழித்தெழுந்து பார்க்கையில் வனமுழுதும் இருளடைந்திருந்தது, அச்சமயம், ஞானேந்திரி விசனமடைந்து ஆ! விதிவசமேயென கதறியழுதனள். அப்போது அவ்வனதேவதை மனந்தாளாமல் எதிரில் வந்து அம்மணி நீ யாதுகாரணமாய் அழுதிட்டாயினையென்றுகேட்க, ஞானேந்திரியானவள் கொஞ்சம் மனதைரியமுற்றுச் சொல்லுகின்றாள்.

ஞானேந்திரி:—அம்மணி! யான்தான் யாருமற்றபரதேசியைப்போற் சஞ்சலத்துடன் இந்தக் காட்டில் வந்து அழுதுக்கொண்டிருக்கின்றேன். நீயும் என்னைப்போல்தானே பதியையிழந்து, வனவாசியாயலைந்து துயரப்படலானுய்? நீ என் துயரைதீர்க்க முடியுமோ அஞ்சாதேயென்று ஆதரிக்கமுடியுமோ?

வனதேவதை:—அம்மா! யான் உங்களைப்போன்ற நரஸ்திரீயல்ல யான் வனதேவதையாகும், நீ துக்கித்தழுகின்றுயே யென்று

என்மனந்தாளாமல் உன்முன் வந்து விசாரிப்பதாயினேன். ஆகையால், உனக்கு யாது மனவருத்தமோ உண்மையைப் புகல்வாயாகில் யான் உனக்குற்ற ஆபத்தையகற்றி உனது மனசஞ்சலத்தையும் நீக்கிவிடுவேன்?

ஞானேந்திரி:—ஆ! அப்படியா! ஆனல் யான் உண்மையை கவனிப்பதற்கு யாதேனும் ஓர் காரணமகத்வத்தைக் காண்பித்தால் யான் நம்புவேன்.

வனதேவதை:—சரி! அவ்விதமானல் நீ! உனது கண்களை மூடிக் கொள்வாய்.

என, புகன்றவை யுணர்ந்த ஞானேந்திரியும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, ஐந்து நிமிஷம் வரையிலும் தனது கண்களை மூடிக்கொண்டிருந்து திறந்து பார்த்தவுடனே முன்பு பயங்கரமான இருள்சூழ்ந்து, மாமும், மலைகளும், குன்றுகளும் நிறைந்திருந்த அந்தவனமானது மாறி தெய்வலோகமாய்க் காணப்படுவதாயின. ஞானேந்திரி ஆச்சரியமடைந்து ஈதென்ன விபரீத கண்காக்ஷியாயிருக்கின்றதே! எங்குபார்த்தாலும் நவரத்தின பாதைகளும், பொன்மயமான பக்ஷிகளும் தங்கவிருக்ஷங்களும் காணுதேயென்று யாதொன்றுந் தோற்ருமல் நின்றிருந்தனள். அச்சமயம், அநேக தேவதாஸ்திரீகள் மனேல்லாசமாய் ஆடுவதும் பாடுவதுமாயிருக்கையில், சிலர் ஆகாயமார்க்கமாய்ப்பறப்பதும் ஒருவர்க்கொருவர் வேதாந்த விசாரணையாக தர்க்கப்பிரசங்கஞ் செய்வதும், சிலர் யோகானந்த இயல்பிற்கிசைந்த விதமானவைகளனைத்தும் வெகுவிமரிசையாய்ச் சம்பாஷிப்பதுமா யிருந்தனர். இவையனைத்தும் ஞானேந்திரிக்கு நிஜரூபமாய்த் தெரிந்திருந்தாலும், இவையனைத்தும் கனவோ நினைவோவென் றதிசயித்துக் கண்ணை சிமிட்டாமல் நேத்திரானந்தமாய்ப் பார்த்துக்கொண் டிருந்தனள்.

இவையனைத்தும் இவ்விதமா யிருக்கையில் ஞானேந்திரியானவள் வறுமையாளன் இராஜகினவுகண்டு அற்பசந்தோஷமெய்தும் ஆச்சரியகாக்ஷியா யிருக்கையில், திடீரென ஓர் சுழல்காற்றுண்டாயிற்று. அச்சமயம் ஞானேந்திரியானவள் மனமிரண்டு பூமியிற் சோர்ந்துவிழ்ந்து தனது இரண்டுகண்ணையும் மூடிக்கொண்டிருந்து

சற்றுநேரம் பொறுத்து விழித்தெழுந்து பார்க்கையில் யாதொன்றுந் தோற்றுமல் பழையபடியே கானகமாயிருக்கக்கண்டு, ஆச்சரியமடைந்தவளாய் யாம் முன்புகண்டவை கனவோ நினைவோ! வெனதிப்பிரமையடைந்திருந்தனள். இவ்விதமாய்த்தோற்ற மனைத்தும் மறைவதுபோலாயிற்றே இனி இதன் மர்மத்தை கவனித்துதான் சந்தேகம் தீரவேண்டும் என்றெண்ணியவளா யிருக்கையில் வனதேவதை ஞானேந்திரியின் முன்வந்து விசாரிப்பதாயினள்.

வனதேவதை:—ஏனம்மா? யாது விசேஷம்? என்னென்னமோயோசிக்கின்றனையே!

ஞானேந்திரி:—அம்மணி! இன்னும் சற்றுநேரத்திற்குமுன் இங்கனம் தேவலோகம்போற் காணப்பட்டன. இச்சமயம் அவையனைத்தும் மாறிபழையபடியா யமைந்திருப்பதாயினவே. ஈதென்ன ஆச்சரிய காக்ஷியென சந்தேகிக்கின்றேன்.

வனதேவதை:—அம்மணி! நீ என்னை இன்னளென் றுணர்வதற்காகவே யான் அவ்விதமாய் மகத்வங்களை விளைத்தேன். இனியாகிலும் உன் மனச்சஞ்சலமற்று உனக்குற்றவை யனைத்தும் உண்மையாய்ப் புகல்வாயாகில், யானவற்றிற்கிசைந்த யாதேனும் ஓர் நன்முயற்சி அனுக்கிரகஞ்செய்து உன்மனக்குறையை யகற்றுவேன்.

ஞானேந்திரி:—அம்மணி! எனக்குற்ற சஞ்சலத்தைப் புகன்றிடில் மண்ணும் மரமுங் கண்ணீர் விடுத்துக் கதறியழுதிடுமெனின் என்சஞ்சல மெத்தகையதா யகலும். அஃதெவ்வா றெனின் யான் ஞானபுரி யரசகுமாரனாகிய வீணாகானனை மணந்து, இன்பசுகத்தை யனுபவிக்குமுன் காலவிபரீதம் எங்களை இத்தகைய கோலமாய்ப் பிரித்துவிட்டது.

வனதேவதை:—அம்மணி! நீ இதைப்பற்றி வருத்தமெய்தவேண்டாம் இன்னும் சிறிதுநாளில் உன்மணாளனுடனே சுகானந்தமாய் வாழ்ந்துக்கொண்டிருப்பாய் இனி உனது மனையனுங்கி மனசஞ்சல மற்றிருப்பாய்.

ஞானேந்திரி:—அம்மணி! சதிபதியும் வனவாசியா யலைந்துதிரிந்தால் மறுபடியும் ஒருவர்முகத்தை யொருவர் பார்ப்பதற்கியலு

மோ? கானில்லையும் மானிடர் மிருகவாய் பக்ஷணமாவதற்கு ஆக்ஷேபணையுளதோ?

வனதேவதை:—அவ்விதமா யாதொன்றும் சந்தேகமெய்தாதே பகவான் தன்னாற் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களனைவரையும் காப்பது கடமையென்றெண்ணியவ ராகையால், கடவுளை நம்பினோர் கைவிடப்படா ரென்பதற்கிசைந்த விதமாய் பகவான் யாவரையும் காப்பாற்றுவதாயினர். ஆகையால் உலகிற் ஜனித்த மாந்தர்கட்குச் சுகதுக்கமெய்திடின் அவரவர்களே யனுபவித்திடவேண்டும். ஆனால் உன்னிலும் அதிகமாய்ச் சஞ்சலமெய்தியவர்பலருளர். என்றாலும் சாந்தையென்னும்பெண் அனுபவித்த துயரத்தில் பத்திலொரு பங்காயினும் நீ அனுபவித்திருப்பாயோ? அந்த உத்தமி அவ்வளவு சஞ்சலத்திலும் மனதைரியத்தைவிடாம லிருந்தபடியால் சிறிதுநாளைக்குப் பிறகு சுகானந்தமாய்த் தனது மணாளனுடன் வாழ்ந்திருந்தனள்.

ஞானேந்திரி:—அம்மா! அந்த சாந்தையின் சரிதையைச் சற்றுதெரிவிப்பீரேல் யானதனைக் கவனித்து எனது சஞ்சலத்தையும் தீர்த்துக்கொள்வேன்.

என, ஞானேந்திரி வினவியதை யுணர்ந்த வனதேவதை அவ்விதமே தெரிவிக்கின்றேன் கவனிப்பாயென்று சொல்வதாயினள்.

### சதாசஞ்சலமடைந்த பதிவிரதையாகிய

## சாந்தையின் சரித்திரம்.

கூர்ஜ்ஜரதேசத்தில் மிகவும் கீர்த்திபிரகாசமாய் வியாபாரஞ் செய்துக்கொண்டிருந்த சுந்தர தர்மனென்னும் வர்த்தகன் ஓர்நாள் தனது மனையாளுடனே மனோல்லாசமாய் நந்தவனத்தி லுலாவித்திரிகையில் சாந்தையானவள் அங்கிருக்கும் பூங்காவனத்தைச்சுற்றிப் பார்த்துக்கொண்டு போகும்போது, அங்ஙனமிருக்கும் கொடிவழியிற் பிரவேசித்து தெற்கு, வடக்கு, கிழக்கு மேற்கெனும் நாற்பாங்கெல்லையும் தெரியாமல் தனது மணாளனிருக்கும் ஸ்தானத்திற்குச்

செல்வோமென் றெண்ணியவளாய் மற்றோர் கொடிவழியாய்ப் பிர
வேசித்து அன்றையதின முழுவதும்போய்க் கொண்டிருக்கையில்,
ஓர் பிரமாண்டமான பாலைவனந் தோற்றக் கண்ணுற்று பயங்கர
மடைந்தவளாய், ஈதென்ன ஆச்சரியம்? இனி எவ்விதமாய் நமது
நாயகனைக் காண்பது, அறியாதனத்தினால் ஆரண்யத்தில் வந்து
வழிதெரியாமலலைகின்றேனேயென்று மனவருத்த முற்றவளாய்த்
துக்கித்துக்கொண்டு கானின்மானைப்போல் வனமெங்கணும் அலை
ந்து தேடிக்கொண்டிருக்கையில் ஓர் கிளைவழிதோன்றிற்று அப்
பாதையைநாடிச் செல்கையில் ஓர் சோலைதோன்றிற்று, அங்ஙனம்
சென்று சற்றுநேரம் வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கையில் ஓர்
மின்னல் தோன்றியது அச்சமயம்சாந்தை மனந்திகைத்துத் தன
திருகண்களையும் மூடிக்கொண்டாள்.

அச்சமயம் அவ்விடத்தில் ஓர் புகைதோன்றியது அந்தபுகை
யுடனே செங்கிறமுடைய ஓர்மாயராக்ஷதன்தோன்றி சாந்தையைக்
காணாதவனாய் தனது பசிதணிவதற் கிசைந்த மிருகபக்ஷணம் செய்
வதற்காக கானகமார்க்கமாய்ப் போய்விட்டான். இந்தவிபரீத கண்
காக்ஷியைக் கண்ணுற்ற சாந்தைமனமிரண்டு இனி இங்ஙனமிருந்
தால் ஆபத்தெய்துமென திகிலுற்றவளாய் அருகிலிருந்த ஆலவிரு
க்ஷத்தின் மீதேறிக்கொண்டு இராவும்பகலும் விருக்ஷத்தைவிட்டிறங்
காமல் ஆலமரத்தின் கனியைப் புசித்துக்கொண்டே பத்துநாள்வ
ரையினும் காலங்கழித்துக்கொண்டிருந்தாள். அச்சமயம் ஓர் பஞ்ச
வர்ணக்கிளியானது; அவ்விருக்ஷத்தின் கிளையில் வந்துட்கார்ந்தது,
அது சாந்தை வளர்த்த கிளியாகையினால் இவள் அதனை உற்றுப்
பார்த்து, ஆ! ஹா!! இந்தக்கிளிப்பிள்ளை நாம் வளர்த்ததைப்போ
லிருக்கின்றதே. ஐயோ! நாம் இவ்விதமாய் வழிதெரியாமல் அலைந்
துக்கொண்டு ஆரண்யவாசியாய்த் திரியலானோம். ஆனால் நாம் வள
ர்த்த கிளிப்பிள்ளை எவ்விதமா யிருக்கின்றதோ? அதற்கு யார்
தீனிகொடுத்து வளர்ப்பார்கள் யென்று தனது கஷ்டத்தையும் கரு
தாமல் கிளியை நினைந்து அழுதுக்கொண்டிருந்தாள். இவளுடைய
பரிதாப நிலையைக்கண்ணுற்ற அந்தப்பஞ்சவர்ணக்கிளி சாந்தையின்
கையில்வந் துட்கார்ந்து யான்தான் நீவளர்த்த பஞ்சவர்ணக்கிளி நீ!
இவ்விதமாய் மணாளனைப்பிரிந்து வனவாசியாய்ப்போய்விடவே உன்
மணாளனும் மதிமயங்கி உன்னை எந்த மிருகங்களாயினும் பக்ஷித்து

விட்டதோவென்று விசனமுற்றவரா யிருந்தனர். யான் அவர்மனதைத்தேற்றி எவ்விதமாயினும் உன்னையான் தேடி அழைத்துவருவதாய்ச் சொல்லிவிட்டுக் கானகமெங்ஙனும் அலைந்துதிரிந்து தெய்வாதீனமாயானுன்னை இங்குகண்டு மனமகிழ்ந்தேன். இனி என்னுடன் வருவாயென்றழைத்தது.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற சாந்தை அதிகமனமகிழ்ந்தவளாயினும், அந்தக்கானகத்தில் எவ்விதமாய் வழிகண்டு நடப்பதுவென்று பரிதாபமாய்ச் சொன்னாள். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற பஞ்சவர்ணக்கிளி அம்மா! நீ யாதொருபயமுமின்றி வருவாயம்மாவென்று, சாந்தையின் கரத்திலமர்ந்துகொண்டு அவளுக்கு வழிகாட்டிக்கொண்டே தனது தேசத்தை நாடிச்சென்றது. அச்சமயம் சாந்தையானவள் தன்கணவனைவிட்டுப் பிரிந்த மூன்றுமாதங்களாய் அன்னாகாரம் புசியாமல் காய்கனிகளைப் பறித்துப் புசித்துக்கொண்டிருந்த வழக்கமா யிருந்தபடியால் பகற்காலமுழுதும் கிளியைக் கரத்திலேந்தி நடப்பதும், பசிவேளைக்குக் காய்கனிகளைப்பறித்துப் புசித்து ஜலனீரருந்தி பசிதணியச்செய்து கொள்ளுகிறதும் இரவில் வனமிருகங்களுக்குப் பயந்து விருக்ஷங்களின் மீதேறி கிளியைக் கிளையின்மீதில் விடுத்து தான் வெகுஜாக்கிரதையாய்ச் சயனித்து அருணோதயத்திலெழுந்து கிளியைக் கரத்திலேந்தி வழிநடப்பதுமாய்வருகையில் அந்தக்கிளியானது வழிகாட்டியைப்போல் சாந்தைக்கு வழிகாட்டிக்கொண்டே தனதுவீட்டிற்கழைத்துக்கொண்டுபோனது.

அப்போது வர்த்தகன் தனது மனைவியையும் பஞ்சவர்ணக்கிளியையும் பார்த்து மனோல்லாசமெய்தியவனாய், நடந்தவிஷயமனைத்தும் சாந்தையினாற்கேள்வியுற்று சந்தோஷமடைந்தவனாய்க் கிளிப்பிள்ளையைத் தனது பிள்ளையைப்போல் வளர்த்துக்கொண்டிருந்தனன். இவ்விதமாய் ஒவ்வொருவருஞ் சுகதுக்கமனைத்தும் சமமாய் அனுபவிப்பது உலக இயற்கையாகையால் நீ இதனைக்குறித்து யாதும் மனவருத்தப்படவேண்டாமென்று தைரியவார்த்தைபுகன்று, அம்மா! ஞானேந்திரி இன்னும் சிறிதுநாளில் உனது மணாளனும் நீயும் ஒருவரையொருவர்கண்டு சுகானந்தமாய் வாழ்ந்துகொண்டிருப்பீரென்று ஆசீர்வாதஞ் செய்துவிட்டு மறைந்துபோயினள். அப்பால் ஞானேந்திரியானவள் அந்தக் கானகமார்க்கமாகவே போ

ய்க்கொண்டிருக்கையில், ஓர்நாள் வழியிலெதிருற்ற பாதையின்மார்க்கமாய்ச் சென்றுகொண்டிருக்கையில் மறுபடியும் வனதேவதை வந்து விசாரிப்பதாயினள்.

வனதேவதை:—அம்மா! ஞானேந்திரி! உனது கணவனைத் தேடிக் கண்டுபிடிக்கும் விருப்பமுற்றிருக்கின்றாயோ? அல்லது உனது தேசத்திற்குப்போய் விடுகின்றனையோ தெரிவிப்பாய்?

ஞானேந்திரி:—அம்மணி! யான் இறந்தாலும் இவ்வனத்தி லிறப்பேனேயல்லாமல் இருந்தாலும் எனதுமணாளனை தேடிப்பார்த்து அவருடன் வாழ்ந்திருப்பேன். ஆனால் இந்தக்கானகத்தில் மிருகங்களின் பயங்கரம் பெரிதாயிருக்கின்றது. அதற்காக கையில் ஓர் தனுசும், அஸ்திரங்களுமிருந்தால் நலமாகும்.

என, பகர்ந்தவையுணர்ந்த வனதேவதை அவ்விதமே யான் தருகிறேனென்று, அந்தக்கானகத்திலிருந்த ஓர் குகையிற்சென்று அழியாதவில்லும், குறையாத அஸ்திரங்களும் நிறைந்த ஓர் அம்புருத்தூணியையும் கொண்டுவந்து ஞானேந்திரியின் கரத்திற்கொடுத்து, அம்மணி! இதனை நீபெற்றுக்கொண்டுசெல்வாயாகில் எப்படிப்பட்ட இராக்ஷதர்களையும் வென்று ஜெயம்பெறுவாய் துஷ்டமிருகங்களும் உனக்கெதிரில் வராது, இந்த அஸ்திரத்தினால் உனக்கு வெகுமேன்மையான கீர்த்தியனைத்தும் வாய்க்கும், ஆனால் யானுனக்கு இரண்டுமந்திரம் உபதேசிக்கின்றேன். அதில் ஒன்றை உச்சரித்தால் ஆண்பிள்ளையைப்போலாக ஆய்விடுவாய், மற்றொன்றை உச்சரித்தால் பழையபடியே ஸ்திரீரூபமாய் மாறிவிடுவாயென்று அவ்விரண்டு மந்திரங்களையும் அந்தப்பெண்ணுக்கு உபதேசித்துவிட்டு மறைந்துபோயினள்.

அப்பால், ஞானேந்திரியானவள் அதனை பரீக்ஷைசெய்துபார்க்கவேண்டுமென நினைந்தவளாய் ஆண்மந்திரத்தை உச்சரித்தாள் உடனே இருபதுவயதுடைய புருஷரூபமாய்விட்டாள். இதனைக் கண்டவுடனே ஆச்சரியமடைந்து, மறுபடியும் பெண்மந்திரத்தை உச்சரித்தனள். பழையபடியே ஸ்திரீரூபமாய்விட்டாள் இனி நமக்கு யாதொரு பயங்கரமுமில்லை யெனக்கருதி ஆண்மந்திரத்தை உச்சரித்து புருஷரூபமாய் மாறி வனதேவதைகொடுத்ததனுசைக் காத்திலேந்தி அம்புருத்தூணியை முதுகிலணிந்து, வீரப்ராக்கிரம விஜயகேசரியைப்போல் கானகமார்க்கமாய்ச் செல்வதாயினள்.

ACT 2 Scene 1.

இடம். ஆரண்யம்.

## கதாநாயகர்கள்.

ஞானேந்திரி. மாயராக்ஷதன். சமலநாயகி.
கண்டபேரண்டபக்ஷி.

---

அப்பால் ஞானேந்திரி வனதேவதைக்கொடுத்த வரப்பிரசாதமாகிய அம்பையும் வில்லையும் துணைக்கருவியா யெடுத்துக்கொண்டு கானகமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் மறுபடியும் வனதேவதைவந்து ஞானேந்திரியை விசாரிக்கையில் அவள் வனதேவதையைப்பணிந்து அம்மணி உமது கிருபா வீக்ஷண்யத்தால் யான்மனதைரியத்துடன் வனசஞ்சாரம்செய்கின்றேன் யென்றாலும் என்னுடன்பேசிக்கொண் டிருப்பதற்குத் துணையாய் யாதொருவரையும் காண்கிலேன் யென்றனள். வனதேவதைசிரித்து அம்மணி இதற்காக நீ விசனப்படவேண்டாமென்று ஞானேந்திரியின் நாவில் பஞ்சாக்ஷரமெழுதி இன்றுமுதற்கொண்டு பக்ஷிகள் பாஷையும் மிருகங்களின் பாஷையும் உனக்கு நன்றாய் தெரியுமென்று அனுக்கிரகஞ்செய்து விட்டுப்போயினள். அப்போது ஞானேந்திரியானவள் அவ்வனத்தின் பக்ஷிகள் பேசுவதைக் கேள்வியுற்று மனோல்லாசமெய்தியவளாய்த் தானும் அவைகளுடனே பாஷித்துக்கொண்டிருப்பாள். அன்றையதினம் முதற்கொண்டு பக்ஷிகளெல்லாம் ஞானேந்திரியைத் தமது இனத்தைப்போலவே மதித்துக்கொண்டு அவளுடனே பேசிக்கொண்டிருக்கும், ஞானேந்திரியும் அவைகளுக்கு யாதொரு துன்பமும் செய்யாமலிருப்பாள்.

இவ்விதமாயிருக்கையில், ஓர்நாள் அவ்வனத்திலிருக்கும் ஓர் மிருகேந்திரனாகிய சிங்கம் தனது ஆண்மையினால் புலி, சிறுத்தை, முதலானவை யனைத்தையும் சேனாதிபதியாக்கிக்கொண்டு, ஓர் நரியை மந்திரியாயமைத்துக்கொண்டு வெகுசாமர்த்தியமுடன் அக்கானகத்தில் வாசஞ்செய்துக் கொண்டிருந்தது, ஆனால் அந்த சிங்கமா

னது தன்னைப்போன்ற மிருகங்களையெல்லாம் சேனாதிபதியாக்கிக்கொண்டு நாயைக்கண்டாலும் நடுங்கியோடும் நரியை மந்திரியாக்கிக்கொண்ட காரணமென்னவெனில் மற்றமிருகங்கள் தன்னால் சாமர்த்தியமில்லாவிட்டாலும் மனிதர்களைக்கண்டால் வீண்பயங்காப்படுத்தி மிரண்டோடச் செய்துவிடும். ஆனால், நரிகளின் இனம் அப்படியல்ல எவ்விதமாகிய பயங்கரமுடைய மனிதர்களாயிருந்தாலும் அவர்களுடனே மிகவும் வாஞ்சையான தாயைப்போல அருகிற்சென்றே விளையாடிக்கொண்டே அவர்கள் அதைபிடிப்பதற்கிசைந்தவர்களாய் சம்மதிக்கும் செய்யும் விதமாய் சோலைக்குள் நுழைந்துவிடுவதும் அங்கு சமயமெப்போதென சேனாதிபதியைப்போல் காத்திருக்கும் புலி சிறுத்தைகள் அவர்களை அடித்துக்கொன்று எடுத்துக்கொண்டுபோய் தமது மிருகேந்திரனாகிய சிங்கத்தினிடத்திற்கொண்டுபோய் போட்டுவிடும். அது அந்த பிரேதங்களைத்தின்று மிகுதியானதில் மந்திரியாகிய நரிக்குக்கொடுத்து பிறகு சேனைகளாகிய புலி சிறுத்தைகளுக்கு கொடுப்பது. இவ்விதமே அநேகநாட்களாய் அந்தக்கானகத்தில் அந்த துஷ்டமிருகங்கள் வழிப்போக்கரையெல்லாம் தப்பித்தவறிப் போகவிடாமல் கொன்று புசித்துக்கொண்டிருப்பதாயின.

இவ்விதமாய் நடந்துகொண்டிருக்கையில், கணவனைப் பிரிந்து கானக மார்க்கமாய்ப் போய்க்கொண்டிருந்த ஞானேந்திரியானவள் அம்மிருகவனத்தின் அருகாமையிற் செல்லுந்தருணம் நரி மந்திரியானது தனது வழக்கம்போல் வந்து ஆண்பிள்ளை வேஷமாய்க் கரத்தில் தனுசையெடுத்துக்கொண்டு வருகின்றதைக் கண்ணுற்று, அருகிற்சென்றால் ஆபத்துண்டாகுமென நினைத்து தூரத்திலிருந்தபடியே பார்த்துவிட்டு நின்றுகொண்டிருந்தது. அச்சமயம் மற்றோர் நரி வந்து ,ஏனையா! மந்திரியாரே மவுனமுற்றிருக்கின்றீரென்று வினவியது. அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற நரி மந்திரி சொல்லுகிறது இத்தனை நாளாய் வழிப்போக்கரையெல்லாம் ஏமாற்றிக்கொண்டுவந்தேன், இத்தினம் இவனைக்காணில் எனக்கேபயங்கரமாயிருக்கின்றதே கையில் தனுசேந்திக்கொண்டு வருகின்றானே இவன் முன் எவ்விதமாய் போவதென்று சொன்னது, ஞானேந்திரிக்கு வனதேவதையின் அனுக்கிரகத்தினால் மிருகபாஷை தெரிந்திருக்கின்றபடியினால் அந்த நரி சொன்னதை யுணர்ந்து யாதொன்றுந் தெரியாதபடியாகவே நரியிருக்கும் சோலையின் வழியாகவே

செல்லும்போது அந்நரியானது மிகவும் மனமகிழ்ந்து தேடப்போன பொருள் காலில் அகப்பட்டதுபோல இந்த மனிதன் தானகவே வருகின்றனென ஞானேந்திரியுடனே மெதுவாய்ப் போய்க்கொண்டிருக்கையில் அருகிலிருந்த மற்றோர் நரியைப்பார்த்து நீபோய் நமது சேனாதிபதிகளைத் தயாராயிருக்கும்படி சொல்லிவிட்டு வருவாயென்றனுப்ப அது அதிவேகமாய்ப்போய் அங்கிருக்கும் புலி சிறுத்தை, கழுதைக்குடத்தி, ஓநாய் முதலான மிருகங்களையெல்லாம் உஷார்ப்படுத்திவிட்டு வந்துவிட்டது. அதற்குள் அவைகளனைத்தும் என்னமோ ஏதோ அதிக ஜனத்திரள் வருகிறப்போலிருக்கின்றதென மதித்து தமது மிருகேந்திரனாகிய சிங்கத்திற்குத் தெரிவித்தவுடனே அதுவும் தனது வசமிருக்கப்பட்ட மிருகங்களனைத்தையும் ஒன்றாய் வரவழைத்துக்கொண்டு யாவும் ஒன்றாய்த்திரண்டு ஓரிடத்திலிருக்கலாயின. இச்சங்கதியனைத்தும் அருகிலிருந்த மிருகங்கட்குத் தெரிந்திருக்கின்றபடியால் ஒன்றோடொன்று மஹாசந்தோஷமடைந்து இன்றையதினம் நமக்கு நல்ல விருந்தகப்படுமென்று வாயையசைத்துக்கொண்டிருந்ததுகள்.

இவையனைத்தும் இவ்விதமா யிருக்கையில் நரி மந்திரியானது ஞானேந்திரியைப் பக்குவமாயழைத்துக்கொண்டு மிருகங்களிருக்கும் ஸ்தானத்திற்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டது, அச்சமயம் வைக்கோற் குடிசைக்கு அக்கினிகொண்டுவருவதுபோல மிருகங்களிருக்கும் ஸ்தானத்திற்கு ஞானேந்திரியை அழைத்துக்கொண்டுபோய் விடவே அவள் அவைகளனைத்தையும்பார்த்து வனதேவதையை தியானஞ்செய்து அஸ்திரங்களையெடுத்து அபிமந்திரித்து தனுசிற்றொடுத்து மிருகங்கள் எங்கும் சிதறவொட்டாமல் படிக்கு சரக்கூடம்தொடுத்துவிட்டு அக்கினியாஸ்திரத்தையெடுத்து மந்திர உச்சாடனஞ்செய்து தனுசிற்றொடுத்து விட்டாள். அந்த அஸ்திரங்களானது ஒன்று, பத்து, ஆயிரமாய்ப்புறப்பட்டு அந்தமிருகங்களின் மீது பாய்ந்துகொல்லுந் தருணம் சிங்கமானது நரியின்மேற் கோபித்து ஐயோ! இந்த மிருகங்களுக்கு எமனை அழைத்துக்கொண்டுவந்தனையேயென முன்னதாய் அதனைக் கடித்துபோட்டு ஞானேந்திரியைக்கொல்ல எதிர்வருகையில் தனுசிலிருந்து வருகின்ற அஸ்திரங்களானது சிங்கத்தின் சரீரமுழுதும் பாய்ந்து சுற்றிலுமிருக்கின்ற மிருகங்களையும் வதைத்துக்கொல்லுவதாயின. அப்போது மிருகங்

கள் நிர்வகிக்கமாட்டாமல் சிதறி ஓடுவதற்குச் செல்கையில் நாற்புறமும் சுவர்வைத்ததுபோல் சாக்கூடம் போட்டிருந்தபடியால், அங்கு இத்தனை நாளாய் மனிதர்களை யெல்லாங்கொன்று தின்று கொழுத்திருந்த சிங்கம் புலி, கரடி, சிறுத்தை, ஓநாய், கழுதைக்குடத்தி, செந்நாய், மறநாய் முதலாகிய துஷ்டமிருகங்களெல்லாம் நெருப்பனலிற் சிக்கிய கொசுக்கூட்டங்களைப்போற் சுருண்டு மாணமடைந்துவிட்டது.

அப்பால், ஞானேந்திரியானவள் மிருகங்களனைத்தும் ஒன்றேனும் தப்பியோடாமல் மரணமடைந்தபிறகு இடியாஸ்திரம் தொடுத்து சாக்கூடத்தை உடைத்துவிட்டு அந்த மிருகங்கள் வசித்திருந்த குகையருகிற்சென்று பார்க்கையில் மனிதர்களணிந்திருந்த அநேகவிதமான ஆபரணதிகளும் அகப்பட்டது அவையனைத்தும் எடுத்து மூட்டை கட்டிக்கொண்டு அவ்வனத்தை நோக்கிச்செல்கையில் அருகிற்றேன்றும் நந்தவனத்திற்சென்று வசந்தமண்டபத்திலுட்கார்ந்து இளைப்பாறிக்கொண்டிருக்கையில் அங்ஙனமிருக்கும் சோலையில் ஆண்பெண்ணாகிய இரண்டு கண்டபேரண்ட பக்ஷிகளில் ஆண்பக்ஷியானது பெண்பக்ஷியைப்பார்த்து சொல்லுகிறது.

கண்டபேரண்டபக்ஷி.—பெண்ணே! இதோபார்த்தனையா! இந்த இராஜகுமாரன் தான் அடுத்த வனத்திலிருந்த மிருகங்களை யெல்லாம் கொன்றவன். அந்தவனத்தின் மிருகங்கள் மனிதரையேகொன்று தின்று பிழைத்துக்கொண்டிருந்தன. அப்படியிருக்கையில் இவன் அந்த மிருகங்களையெல்லாம் கொன்றுவிட்டான். இனிமேல் வழிப்போக்கர்களுக்கு யாதொரு அபாயமுமில்லை.

என்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஞானேந்திரியானவள் தனக்கு வனதேவதையின் அனுக்கிரகத்தினால் பக்ஷிகளின் பாஷையும் தெரிந்திருக்கின்றபடியால் அந்த கண்டபேரண்ட பக்ஷியைப்பார்த்து பக்ஷியின் பாஷையால் விசாரிப்பதாயினள்.

ஞானேந்திரி:—பக்ஷிநாயகமே! நீபுகன்றவை வினவிய என்மனம் சந்தோஷப்படுவதாயின, என்றாலும் அந்தமிருகங்க ளெல்லாம் மனிதரையே புசிப்பதெனின் இந்தவனத்தில் அவ்வளவு மனி

தர்கள் பிரவேசிப்பதில்லையே அவ்விதமாய்ப் பிரவேசித்தாலும் மிருகங்களைக்கண்டால் மனமிரண்டு பயந்தோடிவிடமாட்டார்களா? எவ்விதமாய் இவர்கள்போய் அகப்பட்டுக்கொள்வார்கள்?

கண்டபேரண்டபக்ஷி.—ஐயா! யான் இத்தனைநாளாய் அநேககானகமெங்கணும் அலைந்து திரிந்தேன். இவ்விதமாய் மனிதர்கள் பக்ஷிகளின் பாஷையைப் பேசுவதில்லையே! நீ! இவ்விதமாய பக்ஷிபாஷை பாஷிப்பதினால் உனக்கு மிருகங்களின் மோசதந்திரத்தைச் சொல்லுகின்றேன் கவனிப்பாய் அஃதெவ்விதமெனில் அந்த மிருகங்களுக் கதிபதியாயிருந்த சிங்கத்திற்கு மந்திரியாக ஓர் நரியிருந்தது அது தந்திரோபாயமாய் வழிப்போக்கராகிய மனிதர்கள் போகும் பாதையிற்போயிருந்து விசுவாசமுள்ள நாயைப்போல் அவர்கள்முன்சென்று விளையாடிக்கொண்டிருந்து அவர்கள் பிடிக்கவருவதுபோல் நெருங்கினால் பயந்து ஓடுவதைப்போல் அருகிலிருக்கும் சோலைக்குள் போகுந்தருணம் அங்கு முன்னமேகாவலாயிருக்கும் சேனாதிபதிகளாயமைந்திருக்கும் புலி, சிறுத்தை, ஓநாய்முதலாகிய துஷ்டமிருகங்கள் அவர்கள் மேல்விழுந்து கடித்துக்கொன்று தமது மிருகேந்திரனாகிய சிங்கத்தின்முன் கொண்டுபோய் போட்டால் அது அந்த மனிதர்களின் சரீரத்தைப்புசித்து மீதியானதை மற்ற மிருகங்கள் புசித்துவிடும். இவ்விதமே அவைகள் செய்யும் அக்கிரமங்களனைத்தும் உம்மால் ஒழிந்துவிட்டது. ஆனால் தாங்கள் இன்னோர் உபகாரஞ் செய்யவேண்டும். இவ்வனத்தின் மேற்றிசையில் நூறுகாதவழி தலைதூரத்திற்கப்பால் ஓர் தீவிருக்கின்றது, ஆனால் அங்கு மனிதர்கள் போவதற்கு முடியாது யானுனை எடுத்துக்கொண்டு போகின்றேன். அங்கு ஓர் மாயராக்ஷத னிருக்கின்றான். அவனைக்கொன்றுவிட்டு அவன் சிறைவைத்திருக்கும் பெண்ணை எடுத்துக்கொண்டுவந்து அவளுடைய தேசத்திற் கனுப்பிவிட்டால் தர்மமாகும்.

ஞானேந்திரி:—சரி! அப்படியானால் வருவீர்போவோம் என்றுசொன்னவுடனே கண்டபேரண்ட பக்ஷியானது அவ்விதமேயென்கெனச் சம்மதித்து ஞானேந்திரியை எடுத்துக்கொண்டு ஆகாய

மார்க்கமாய்க் கிளம்பி பறந்து அந்த மாயராக்ஷதனிருக்கும் தீவில் கொண்டுபோய் கிளைகளும் இலைகளும் அடர்ந்து செழிப்புற்றிருக்கும் பிர்மாண்டமான ஓர் ஆலவிருக்ஷத்தின் கிளைமேல் இறக்கிவிட்டது. ஞானேந்திரியானவன் ஆச்சரியமடைந்து பக்ஷியே நீ முன்ப மாயராக்ஷதனிருக்கும் ஸ்தானத்திற் கொண்டுபோய் விடுகின்றேனென்று சொல்லிவிட்டு, இச்சமயம் இந்த விருக்ஷத்தின்மேல் கொண்டுவந்து விட்டாயேயென்று கேட்கவும், ஐயா! அந்த மாயராக்ஷதனிருக்கும் இடத்திற்குப்போனுல் அவன் கொன்றுவிடுவான் யென்னும் பயத்தினுல் இந்தவிருக்ஷத்தின்மீது கொண்டுவந்து விட்டேன் என்றுரைத்தது.

ஞானேந்திரி:—பக்ஷியே! அந்தராக்ஷதனை கொல்வதற்காக வந்து செடிமறைவில் மறைந்துக்கொண் டிருப்பது ஆச்சரியமல்லவோ?

கண்டபேரண்டபக்ஷி:—ஐயா! உலகிற்பிறந்த வீரர்கள் சமர்புரிய முயன்றுல் தன்பலம், எதிரிபலம், காலம், பலம், மூன்றையும் அனுசரித்துதான் சண்டை செய்யவேண்டும், அவ்விதமாய்க் கவனியாமற் போர்புரிந்தால் ஜெயிப்பது கஷ்டமாகும் அதற்கிசைந்த விதமாகவே! அந்தமாயராக்ஷதனைநேரிற்போய் எதிர்த்து சண்டைசெய்தால் அவன் சாகமாட்டான். ஏனெனில் அவனுடைய உயிரை எங்கேனும் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு எதிராளிகளுடன் சண்டைசெய்து எதிர்த்தவர்களையெல்லாம் கொன்றுவிடுகின்றுன். ஆகையால் அவனுடைய உயிர் நிலையை அவன் கொண்டுவந்து வைத்திருக்கும் அந்தப் பெண்ணினுல் கேட்டு தெரிந்துக் கொண்டபிறகு, அவனை இலேசாய்க் கொன்றுவிடலாம். தாங்கள் யாதொருசந்தேகமுமெய்தாதீர்.

என, புகன்றதை வினவிய ஞானேந்திரியும் சரிதானென்று சம்மதித்துக் கொண்டாள். அப்பால் பொழுதுவிடிர்தவுடனே மாயராக்ஷதன். கானகத்திற்கு இரைதேடுவதற்காக போனசமயம் பார்த்து, கண்டபேரண்டபக்ஷியானது ஞானேந்திரியை அழைத்துக் கொண்டு குகையருகிற் சென்றவுடனே அங்கிருக்கும் கமலநாயகி

யானவள் ஆண்பிள்ளைவேஷமாய் வந்திருக்கும் ஞானேந்திரியைக்கண்டு ஆச்சரியமடைந்தவளாய், இவரார்? நம்மைத்தேடிக்கொண்டு வந்தாற்போலிருக்கின்றாரென யோசித்தவளாய் வினவுதலாயினள்.

கமலநாயகி:—அழகிற்சிறந்த அங்கஜ சொரூபம் வாய்ந்த அரசே தாங்கள் யார்? யாதுகாரணமாய் இவ்வளவு கஷ்டத்துடன் என்னைத் தேடிக்கொண்டு வருகலாயினீர்?

ஞானேந்திரி:—பெண்ணே! யான் யாத்திரைவாசி! ஓர் காரணத்தினால் யான் வனசஞ்சாரியாய் வருகையில் உன்னுடைய பரிதாப நிலையை இந்த பக்ஷியினால் கேள்வியுற்று, உன்னை எடுத்துக்கொண்டுவந்த அந்த துஷ்டனாகிய மாய ராக்ஷதனைக் கொன்றுவிட்டு உன்னை அழைத்துக்கொண்டு போகவந்தேன்.

கமலநாயகி:—அரசே! நீர் இவ்வளவு உபகாரஞ்செய்தால் எனக்கு பிராணபிக்ஷை தந்தாற்போலாகும். ஆனால் அவனை எவ்விதமாய்க் கொல்லுவீர்?

ஞானேந்திரி:—பெண்ணே! அவனுடைய உயிர்நிலையைக்கேட்டு தெரிந்துகொண்ட பிறகுதான் அவனை கொல்ல முடியும், ஆகையால், நீ! அவனுடைய உயிர் நிலையைக் கவனித்துக் கேட்டு என்னிடம்தெரிவிக்கவேண்டும். யான் இப்போது அதோ எதிரிலிருக்கும் ஆலவிருக்ஷத்தின் கிளைமீதிற்போய் உட்கார்ந்திருந்து நாளைய காலையில் வருவேன். நீ எவ்விதமாயாவது கேட்டு தெரிந்து கொள்ளவேண்டும்.

என, புகன்றவை வினவிய கமலநாயகியும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்துக்கொண்டாள். அச்சமயம் ஆண்பிள்ளைவேஷமாய் வந்திருக்கும்ஞானேந்திரியும், கண்டபேரண்டபக்ஷியும் இராக்ஷதனைக்கொல்ல முயற்சியுடையவராய் அருகிலிருக்கும் ஆலவிருக்ஷத்தின் கிளையின்மீதுபோய் உட்கார்ந்துகொண்டிருந்தனர். இவர்கள் இவ்விதமாய் இராக்ஷதனுயிர்க்கு எமதூதர்களைப்போல வந்துட்கார்ந்திருக்கையில். அசுரனானவன் தனக்கு முடிவுகாலம் வந்துற்றதென்றுணராமல், மஹாசந்தோஷமாய் அன்றையதினமுழுதும் வனமிருகங்களை வதைத்துப்புசித்து அவை ஜீரணிப்பதற்கிசைந்தவிதமாய்

கடல்நீரருந்தி களைதெளிந்து மனக்களிப்புடன் தனது வாசஸ்தானமாகிய குகையருகில் வந்தனன். அச்சமயம் அவன்தனது வழக்கம் போல் கமலநாயகிக்கும் காய்கனி கிழங்குகளைப் பறித்துக்கொண்டு குகையருகில்வந்தனன். அச்சமயம் கமலநாயகி மாயராக்ஷதன் முகத்தை உற்றுப்பார்த்து மஹா விசனமுற்றவள்போல். உதட்டில் உறவும் மனதில் பகையுமாய்ப்பேசும் வஞ்சகத்தினர் பொய்யழுகையைப்போல் மஹா பரிதாபமுற்றவளாய்ப் பாசாங்கு செய்து அழுதுக்கொண்டிருந்தனள். அவள் மனநினைவை இன்னதென்றறியாத. மாய ராக்ஷதன் பரிதாபமடைந்து விசாரிப்பதாயினன்.

மாயராக்ஷதன்:—அன்னக்கிளியே! அமிர்தரத்தினமே சொர்ணப்பதுமையே! துலங்கிடும் நவரத்னபூஷணமே! எத்தினமும் வாடாத நின் திருவதனம் இத்தகியாதுகாரணமாய் பருதியின் வெப்பத்தால் தீய்ந்துலர்ந்த சரகெனவதங்கி முகஞ்சிவந்து துயரப்படும் காரணம் யாது? அழகான ரூபசுந்தரியே யான் நன்குணர நின் கனிவொத்தவாயால் என்மனஞ் சற்றுதேற விவரித்துரைப்பாய்.

கமலநாயகி:—ஐயா! அசுரேந்திரா? யானெனது தாய் தந்தையைப் பிரிந்து உம்மால் ஜீவிக்கலாயினே னென்றாலும், தங்கள் விஷயத்திலும் எனக்குப் பலவிதமாய் சந்தேகமெய்தலாயின் இதைக்குறித்து யான் விசனப்படலாயினேன்.

மாயராக்ஷதன்:—பெண்ணே! என்விஷயத்தில் உனக்கு என்னதுயரெய்தின அவற்றை விவரமாயுரைப்பாய்.

கமலநாயகி:—ஐயா! தாங்களோ? கானகமெல்லாம் சுற்றியலைகின்றீர். அச்சமயம் யாவரேனும் பகைஞர் உம்மை எதிர்த்துக் கொன்றுவிட்டால், அப்பாலெனக்கு யார் துணை? யான் எவ்விதமாய் ஜீவிப்பேன்? என்று விசனப்படுகின்றேன்.

மாயராக்ஷதன்:—பெண்ணே! மூவுலகத்தினரும் ஒன்றுதிரண்டுருண்டு ஏககாலத்தில் என்னைவந்தெதிர்த்தாலும் என்னைவெல்ல முடியாதெனின் என்னையார்தான் ஜெயிப்பார்கள்? ஒருவராலும்முடியாது நீ கிஞ்சிற்றும் அஞ்சவேண்டாம்.

கமலநாயகி:—ஆ! ஈதென்ன ஆச்சரியம்.

விருத்தம்.

அன்புறும் அசுரேந்த்ராநீர் அறைவது உண்மையென்றே
என்மனதினிற் சந்தோஷ மெய்துமோ தரணிதன்னில்
வன்மையாய்ப் பிறந்தோருக்கு வாழ்நாட்கள் குறுகிவிட்டால்
துன்புற்றே பகைஞர்வாளால் தும்ஸமாய்ப் போகின்றாரே.

இவ்வித மிருக்கின்றதே உலகவாழ்வு இதனை உணராமல் தாங்கள் புகல்வது என்மனதை தைரியப்படுத்துமா? வெகுசமர்த்தராய் விளங்கி கரத்தில் தனுசுங் கணைகளும் இடையில் முப்பத்திரண்டு ஆயுதங்களும் தாங்கி பார்க்க பயங்காரமான விகாரரூபத்துடனும் அநேக சேனைகளுடன் இராஜரீகஞ்செய்துக்கொண்டிருந்த இரணியன் இராவணன் முதலான வீரவான்களெல்லாம் போர்க்களத்தில் பகைஞரிடத்திற்சிக்கி ஆவி இழந்து எமபுரிக்கி எகினார்களெனின் தமதுவசம் யாதொரு ஆயுதமின்றி படைத்துணையுமில்லாமல் காட்டைச்சுற்றிக்கொண்டு திரிகின்றீரே எவர்களாகிலும் பகைஞர்வந்தெதிர்த்திடில் உமதுயிர் நிலைக்குமோ?

மாயராக்ஷதன்:—பெண்ணே! அவ்விதமாய் சந்தேகமெய்தாதே இரணியன், இராவணன் முதலான வீராதி வீரராகிய ராக்ஷதர்களெல்லாம் தமது உயிரை தமது சரீரத்தில் வைத்துக்கொண்டிருந்தமையால் பகைஞரெதிர்த்து சமர்புரியும்போது சரீரத்[illegible]ஆவியும் பிரிந்துபோகும், யான் அப்படியல்ல எனது உயிரை மற்றோர் ஸ்தானத்தில் பதனஞ்செய்து வைத்துக்கொண்டு சரீரத்துடன் உலாவிக்கொண்டிருப்பேன். அந்ததினத்தில் எந்த சுத்தவீர[illegible]னாலும் சரியே என்முன் வந்தெதிர்த்திடில் யானவர்களை யெல்லாம் கொன்று தின்றுவிடுவேன். சிலசமயம் என்னிலும் திடகாத்திர சமர்த்தமைந்தவர்களாயின் என்னை அஸ்திராயுதங்களினால் கொல்வதற்காகமுயன்று உதிரஞ்சிந்தச்செய்தால், என்னைப்போலநேக மாயராக்ஷதர் தோன்றி அவர்களை அத்ததியே பிடித்துப்புசித்துக்கொன்று மென்று தின்றுவிடும்படியாய் நேரிடும் அப்படியிருக்க என்னைவெல்வோருமுளரோ? ஆகையால் இனி நீயாதொன்றுக்கும் அஞ்சாதே எனதின்ப கனிரசமே.

கமலநாயகி:—ஈதென்ன நூதனபுதுமையா யிருக்கின்றதே உயிரில்லா உடலிருப்பதெனின் ஆச்சரியம்தான். உமது உயிரை எந்த ஸ்தானத்தில் பந்தனஞ்செய்து வைத்திருக்கின்றீர்?

மாயராக்ஷதன்:—என்தன்பிற்கினிய சரசவதனி! அவ்விதமே
விக்கின்றேன் கவனிப்பாய், இந்த குகைக்கு நேர்வடக்கில்
பயங்கரமான நூறுகாத சுற்றளவமைந்து அநேக ஜல
கள் நிறைந்த ஏரியொன்றிருக்கின்றது. அதில் யானையை
ங்கத்தக்க பெரிய முதலைகள் ஆயிரத்திற்கு அதிகமாயிரு
ன்றது, அந்த ஏரியின் மத்தியில் ஓர் ஆலவிருக்ஷம் ஆகா
தை அளாவியதா யிருக்கின்றது. அந்த விருக்ஷத்தில் என
உயிர் வண்டுரூபமா யிருக்கின்றது, அதனை எவர்களாயினு
பிடித்துக்கொண்டுவந்து இந்தக் குகையின்முன் நசுக்கி
டால் அப்போதுதான் என் உயிர்நீங்கும் அவ்விதமாய்ச்
ய்ய யாராலும் முடியாது யானும் சாகமாட்டேன்.

கமலநாயகி:—சரி! சரி!! உம்மை நேரில் வந்தெதிர்த்தாலும் சில
ரம் யுத்தம்புரிந்து கைசோர்ந்துவிட்டால் காதவழி தூரம
லும் ஓடிப்போய் பிராணனைக் காப்பாற்றிக்கொள்வீர்.
தன்றி சாதாரண வண்டைக்கொன்றால் நீர் இறந்துவிடுவ
னின் உம்மை நம்பி பிழைப்பதற்கு வழியில்லையே, எவ
லும் ஓர் சிறுபையன் அந்த ஏரிக்கரையிற்சென்று ஓர் கட்
ரத்தின்மீது ஏறி ஜலத்தில் மிதந்துக் கொண்டுபோய் ஆல
க்ஷத்தின் கிளையிலிருக்கும் வண்டைப்பிடித்துக் கொண்டுவ
டால் நீர் மாண்டுபோவீர்போ லிருக்கின்றதே அப்போது
னென்னவிதமாய் ஜீவிப்பது?

மாயராக்ஷதன்:—பெண்ணே! நீ அவ்விதமாய் யாதும் சந்தேக
டாதே அந்த ஏரியிலிறங்கினவுடனே எப்படிப்பட்ட வல்ல
சாலியாயிருந்தாலும் அதிலிருக்கும் முதலைகள் விழுங்கிவி
அப்பால் அவன் எவ்விதமாய் அந்த விருக்ஷத்தின் அரு
செல்வான்?

என, பலவிதத்திலும் தைரியம் சொல்பவனைப்போல் தன்
டைய உயிர்நிலை விபரமனைத்தும் சரியாய்ச் சொல்லிவிட்டா
அவற்றையுணர்ந்த கமலநாயகி யாவையும் சரியாய் கவனித்து
ந்து இனி மாயராக்ஷதனை கொன்றுவிட்டு நமது சுயதேச மணு
தற்குச்சரியானகாலம் நேரிட்டதெனும் மனசந்தோஷமுற்று பே
க்கு ராக்ஷதன்மீது பிரியமுற்றவளாய் அவன் கொண்டுவந்த க
கனி கிழங்குகளைப் புசித்து பசியாறி இருந்தனள். அப்பால் அவ

ரவு முழுதும் மனக்களிப்பின் சந்தோஷத்தினுல் நித்திரையில்லாம லிருந்தனள். அருணேதயத்தில் மாயராக்ஷதனெழுந்து தனது வழக்கப்படியே இரைதேடுவதற்கு ஆரண்யமார்க்கமாய் போய்விட்டனன். அச்சமயமறிந்த கண்டபேரண்ட பக்ஷியானது மெதுவாய்ப் பறந்து குகையருகில் வந்துபார்த்து மாயராக்ஷத னில்லாமையால் மறுபடியும் விருக்ஷத்தின் கிளையிற்சென்று ஞானேந்திரியிடம் உண்மையைப் புகன்று தனது கழுத்தின் மீதேற்றிக்கொண்டு குகையருகில் வந்து கமலநாயகியின் முன்விடுத்தது, அச்சமயம் ஞானேந்திரியானவள் கமலநாயகியைப் பார்த்து பெண்ணே மாயராக்ஷதன் உயிர்நிலை ஸ்தானத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டாயா? வென விசாரித்தனள். அவ்வார்த்தையைக் கேட்டவுடனே கமலநாயகி மனக்களிப்பெய்தியவளாய் ஆண்வேஷமாய் வந்திருக்கும் ஞானேந்திரியின் முன் மாயராக்ஷதன் உயிர்நிலையிருக்கும் விபரமும் அந்த ராக்ஷதன் மரணமடையும் குறிப்பும் சொல்லத்தொடங்கினுள்.

கமலநாயகி:—எனதன்பிற்கினிய சரசவதனு அந்த மாயராக்ஷதனை நேரிலிருந்து ஜெயம்பெறுவதற்கு எவராலுமாகாது, அஃதேனெனில் அவன் உயிர்நிலையை ஓர் வண்டாகச்செய்து ஆலவிருக்ஷத்தில் மறைத்துவைத்திருப்பதினுல் அவனுடன் யார்வந்தெதிர்த்து சமர்புரியினும் ஓர் துளிரத்தம் சிந்தினுல் அநேக அசுரர்களாய் வந்து எதிரிகளைவென்று கொன்றுதின்று விடுவார்களாம். ஆகையால் அந்த வண்டை பிடித்துக்கொன்று விட்டால் அப்போது இராக்ஷதன் தானே மாண்டுவிடுவான்.

ஞானேந்திரி:—சரி! அவ்விதமானுல் அந்தவண்டு இருக்கும் ஸ்தானத்தைக் கேட்டுணர்ந்தனையா? அதன் விபரத்தையும் எனக்குப் புகல்வாய்.

கமலநாயகி:—பிராணேசா! இந்த குகையின் நேர்வடக்கில் ஓர்பெரிய ஏரியொன் றிருக்கின்றது அதின்மத்தியில் ஓர் ஆலவிருக்ஷமிருக்கின்றது. அதின் கிளையில் அசுரனுடைய உயிர்நிலை வண்டுருபமா யிருக்கின்றது. அதனை பிடித்துக்கொன்றுவிட்டால் அசுரனிறந்துபோவான். ஆனுல் அதில் இறங்கினுல் முதலைகள் விழுங்கிவிடுமாம்.

என, புகன்றவை வினவிய ஞானேந்திரி இவையனைத்தும் கண்டபேரண்டபக்ஷிக்குத் தெரிவித்தபடியால் அது ஞானேந்திரியைத

தனது கழுத்தின் மீதேற்றிக்கொண்டு கமலநாயகி குறிப்பித்த ஸ்தானித்திற்போய் பார்க்கையில் பிர்மாண்டமான ஏரியொன்று காணப்பட்டது. அங்கிருந்து உற்றுப்பார்க்கையில் ஓர் ஆலவிருக்ஷமும் தோன்றியது, இதுதான் அசுரன் உயிர்நிலை இருக்கும் ஸ்தானமெனக்கருதி, அதிவேகமாய் ஞானேந்திரியைத் தூக்கிக்கொண்டு போய் ஆலவிருக்ஷத்தின் கிளையில் உட்கார்ந்தது, அப்போது மாயராக்ஷதனுடைய வாழ்நாள் குறுகி ஆயுள்முடிவானதற்கிசைந்த விதமாயிருந்த அவனுடைய உயிர் நிலையாகிய வண்டானது எப்போதும் அந்தவிருக்ஷத்தின் கிளைமுழுதும் சுற்றிப்பறந்துகொண்டு திரிவதைவிடுத்து அன்றையதினம் ஓர் கிளையின் மீது உட்கார்ந்திருந்தது. அச்சமயம் ஞானேந்திரி திடீரென அந்தவண்டைத் தாவி பிடித்துக்கொண்டாள் அப்போதே கண்டபேரண்ட பக்ஷியானது ஞானேந்திரியை எடுத்துக்கொண்டு கமலநாயகியிருக்கும் குகையருகில் கொண்டுவந்துவிடுத்தது. அப்போது ஞானேந்திரி அந்தவண்டைக் கமலநாயகியின் முன்காண்பித்து இதுதானே அசுரனுடைய உயிர்நிலையென்று அதன் தலையைப்பிடித்துத் திருகினாள் உடனே மாயராக்ஷதன் பயந்து அடடா! நமது உயிர் நிலையாகிய வண்டை யாரோ பிடித்துக்கொண்டார்களென்று அதிவேகமாய்க் குகையருகில்வந்தனன், அச்சமயம் ஞானேந்திரி தனதுகரத்திலிருக்கும் வண்டைப்பிடித்து நசுக்கிக்கொன்று விட்டதினால் மாயராக்ஷதன் மரணமடைந்தனன். உடனே அங்கிருக்கும் கமலநாயகி மனமகிழ்ந்து சனியனொழிந்ததென்று ஞானேந்திரியுடன் சந்தோஷமாய் அன்றையதினம் காய்கனி கிழங்குவகைகளினால் விருந்தருந்தியபிறகு கண்டபேரண்ட பக்ஷியானது, அவ்விருவரையும் தோளில் சுமந்துக்கொண்டு தான் முன்னிருந்த நந்தவனத்தில் கொண்டுவந்து விடுத்து தனது பேடுடனே பறந்துபோய் விட்டது.

அப்பால் ஞானேந்திரியும், கமலநாயகியும் அந்த நந்தவனத்தில் மனமகிழ்வாயிருந்து அங்கு சற்றுநேரம் உலாவிக்கொண்டிருக்கையில் அந்நந்தவனத்தில் காய்த்துக் கனிந்திருக்கும் பழதினுசுகளைப் பறித்துப் புசித்துக் களைதீர்ந்திருக்கையில் இனிமையான காற்று வீசுதற்கிசைந்த வசந்தமண்டபத்தில் போயுட்கார்ந்து தமது சவிஸ்தாரங்களை ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருப்பதாயினர்,

ஞானேந்திரி:—பெண்ணே! உன்பெயரென்ன? நீவசிப்பது எங்கே?

உன்னை எவ்விதமாய் இந்த ராக்ஷதன் எடுத்துக்கொண்டு வருகலாயினன்? யான் இவற்றை நன்குணர விபரமாய் புகல்வாய்.

கமலநாயகி:—சரசவதனா! ஆபத்து காலத்தில் அஞ்சேலென்றுதரித்து ரக்ஷித்த உமது கிருபையால் யான் உயிர்பெற்றுலாவுந் தன்மையாயிற்று. ஆகையால் யான் உமது சமுகத்திலெனது சவிஸ்தார மனைத்தும் புகலுவதும் கவனமாய்க் கேண்மின். அஃதெவ்விதமெனின்! கயலாபுரியைப் பரிபாலனஞ்செய்யும் கனகேந்திர மஹாராஜன் வெகுநாள்வரையினும் பிள்ளையில்லாமலிருந்து அரசுக்குமைந்தன் ஜனித்திலனேயென்னும் மனவிசாரமதிகமாகி தானதர்ம பரோபகாரம் அன்னதானம் சொர்னதானம் கன்னிகாதான முதலாகிய முப்பத்திரண்டறங்களையும் வழுவின்றி நடத்திக்கொண்டு வருகையில் மஹாராணியாகிய என் தாய் கர்ப்பவதியாயிருந்து என்னைப்பெற்றாள். என்தந்தை மனமகிழ்ந்து, இனி அரசுக்கு புத்திரி பிறந்தாளெனும் ஆசையதிகரித்து எனக்கு கமலநாயகியென பெயரிட்டு மிகவும் மேன்மையாய் வளர்த்துக்கொண்டிருந்தனர் அப்பால் யான் நாளுக்குநாள் வெகுமேன்மையாய் வளர்ந்து ஐந்துவயதானபிறகு வித்தியாசாலையில் விடுத்தனர். யான் சகல கலாவல்லவளாகி யிருந்தேன். ஒன்பதாவது வயதில் யானெனது பாங்கியருடன் நந்தவனத்திலுலாவித் திரியும்போது அந்தமாய ராக்ஷதன் என்னை யெடுத்துக் கொண்டு வந்து விட்டான். ஆகையால் என்னைப்போல் துயரடைந்தவரிவ்வுலகத்திலுளரோ?

என, தனக்கு நேர்ந்த ஆபத்தனைத்தும் ஆதியோடந்தமாய்ப் புகன்றாள். இங்ஙனம் கமலநாயகி இவ்விதமாயுரைத்துக் கண்ணீர் சொரிந்து பரிதாபமாயழுததினால், ஞானேந்திரி அவள்மனதைத்தேற்றி அம்மா! நீயாகிலும் இவ்வளவு கஷ்டமடைந்தாயென்று விசனப்படுகின்றாய். உனக்காகிலும் அந்த ராக்ஷதன் வேணுமான பதார்த்தங்களெல்லாம் கொண்டுவந்து தருவான். உன்னைப்போல யானும் ஒருபெண்ணாகயிருந்தும் யானனுபவித்த கஷ்ட நஷ்டத்தைப் புகன்றால் மண்ணும் மரமும் கண்ணீர் விடுத்துக் கதறியழுதிடுமெனின் உன்மன மெவ்விதமா யிருக்குமென்றனள். அவ்வார்த்தை

யைக் கேள்வியுற்ற கமலநாயகி ஆச்சரியமடைந்து, ஈதென்ன நூதன புதுமையா யிருக்கின்றதே? தங்களைப்பார்த்தால் ஆண்பிள்ளையா யிருக்க பெண்பிள்ளையென்று புகலுங்காரணமென்னவென்று வினவினள் ஞானேந்திரி சிரித்து, அம்மா! இதோ இன்னும் சற்றுநேரத்தில் காண்பாயென்று அங்கிருக்கும் தாமரைத்தடாகத்தில் ஸ்நானபான நேமநிஷ்டைபுரிந்து பெண் மந்திரத்தை உச்சரித்தனள். உடனே ஆண்ரூபமாறி அழகானந்த முக வஜீகரமமைந்த பெண்ரூபத்துடனே ஆடை ஆபரண சிங்காரலங்காரமாய் நின்றான். இவ்வேடிக்கையைப் பார்த்த கமலநாயகி திடுக்கிட்டு இதென்ன மாந்தரீக ஜாலவித்தையோவென மனந்திகைத்து ஞானேந்திரியை விசாரிப்பதாயினள்.

கமலநாயகி:—அம்மா! தாங்கள் இத்தனைநாள் ஆண்பிள்ளைரூபமாயிருந்ததினால் யான் யாவரோ அரசபுத்திரரென்றே மதித்திருந்தேன். ஆனால் தாங்கள் இப்போது ரூபமாறியதினால் உண்மையை விசாரிக்கவேண்டுமென ஆவலுற்றேன். ஆகையால், தாங்கள் வசிப்பது எந்நகர்? தமது பெயரென்ன? என்னகாரணத்தினால் தங்களுக்கு ரூபம் மாறும்விதமோ அவை யனைத்தும் யான் கவனித்துணர்க விபரமாய்ப் புகல்வாய்.

ஞானேந்திரி:—அம்மா! சிந்துதேசத்தையாளும் சித்ரவீரிய மஹாராஜா எனது தந்தை. என்பெயர் ஞானேந்திரியாகும். என்னை ஞானபுரி இராஜகுமாரராகிய வீணகானனுக்கு விவாகஞ்செய்துவைத்தனர். அவரெங்ஙனமோ சென்றுவிட்டார். யான் அவரைத்தேடிக்கொண்டு வனமெங்ஙனும் அலைந்து திரிந்து அன்னாகாரமுமில்லாமல் பலவித சஞ்சலத்தினால் அழுதுக்கொண்டு கானகமார்க்கமாய் வருகையில் வனதேவதை பிரத்தியக்ஷமாகி என்மனக்கவலையை யகற்றி இரண்டு மந்திரத்தை உபதேசித்ததினால் அதில் ஆண்மந்திரத்தை உச்சரித்து ஆண்பிள்ளை ரூபமாய் மாறி கரத்திற்றனுசேந்தி கானகமார்க்கமாய் வருகையில் வழியிலெதிருற்ற துஷ்டமிருகங்களையெல்லாம் வதைத்துவிட்டு, வருகையில், கண்டபேரண்டபக்ஷியால் உனது சவிஸ்தாரங் கேள்வியுற்று வந்து அந்த மாயராக்ஷதனையும் கொன்று உன்னையும் அழைத்துக் கொண்டுவந்தேன். நீ உனது தேசத்திற்சென்று தாய்தந்தையரைக்கண்டு மனமகிழ்ந்தி

ருப்பாய், யான் என்விதிவசத்தினால் நேர்ந்த காலவிபரீதத்திற் கிசைந்த விதமாய் கணவனைத் தேடிக்கொண்டு கானகமார்க்கமாய்ப் போகின்றேன்.

என, புகன்றவை வினவிய கமலநாயகி மனஞ்சகியாமல் தமக்கா யாமிருவரும் ஒருதாய் வயிற்றிற் ஜனித்த சகோதரிகளைப்போல் இணைபிரியாதிருந்து நமது கணவனைத் தேடிப்பார்த்து அவருடன் வாழ்ந்திருப்பதே சிலாக்யமென்றனள். ஞானேந்திரியும் யோசித்து சரி! அவ்விதமானால் என்னுடன்வருவாயாகில் யான் அவரைத்தேடிக் கண்டுபிடித்து அவருக்கு உன்னையும் விவாகஞ்செய்துவைத்து நாம் மூவரும் சுகமாய் வாழ்ந்திருப்போமென தைரியவார்த்தை புகன்று, மறுபடியும் வனதேவதையை நினைத்து ஆண் மந்திரத்தை உச்சரித்ததினால் ஸ்திரீரூபமாறி புருஷரூபமாய் விட்டாள். அச்சமயம் ஞானேந்திரி புருஷனைப்போலாகவும், கமலநாயகி மனைவியைப் போலவும் வீணாகானனைத் தேடிக்கொண்டு கானக மார்க்கமாய்ப் போயினார்கள்.

இங்ஙனம் நிற்க, பலவித சஞ்சலமடைந்து ஆரண்யவாசியலைந்து வழிதெரியாமல் திகைத்திருந்த வீணாகானன் தான்வரும் வழியில் நாலுகஜம், ஐந்துகஜமுள்ள காலடிச்சுவடுகளைப்பார்த்து மனமிரண்டு இனி இந்தவழியாய்ச் செல்லக்கூடாது இங்குதோற்றும் காலடியே இவ்வளவு பெரிதாயிருந்தால், இதற்குகந்த சரீரத்தை யுடையவர்கள் எவ்வளவும்பருத்த சரீரமுடையவர்களாக யிருப்பார்கள்? அப்பப்பா? இனி இம்மார்க்கத்திற் பிரவேசிக்கக்கூடாதென்று ஓர் ஆலவிருக்ஷத்தின் கிளைமீதேறி உற்றுப்பார்த்தான். அந்தவிருக்ஷத்தின் மேற்கே வெகுதூரத்தில் கடற்கரைதோற்றக் கண்ணுற்று மனமகிழ்ந்தவனாயினும், நாம் அங்கு சென்றாலும் எவ்விதமாய் நமது தேசத்திற் கேகுவதென யோசித்துக்கொண்டிருக்கையில் அதிநூதன அழகமைந்த கப்பலொன்று அந்தக்கடலில் வருவதையும் பார்த்தான். அச்சமயம் வீணாகானன் தாயைக்கண்ட சேய்போல் அதிக ஆவலுற்றவனாய் விருக்ஷத்தை விடுத்திறங்கி, நாம் அந்தக்கப்பலின் மாலுமியை பணிந்து அவன் மனமிறங்கும்படியாகிய நல்வார்த்தையைப் புகன்று கப்பலின்மீதேறிக்கொண்டு அவர்களுடனே சென்றால் அவர்கள் வியாபாரம் செய்வதற்கிறங்கும் தேசத்தில் நாம்சென்று அத்தேசத்தின் மார்க்கமாகவே சென்

து நமது சுயதேசமாகிய ஞானபுரியிற் போய்ச்சேர்ந்து சுகமாயிருக்கலாம். ஆனால் இனிமேல் அரண்மனையை விடுத்து அப்பால் செல்வது சரியல்லவென்று தனக்குத்தானே புத்திசொல்லிக்கொண்டு கடற்கரைக்குப்போகும் மார்க்கத்தைப் பிடித்துக்கொண்டுபோகையில், வெகு நாளாகியும் தான் குறிப்பித்துச் செல்லும் வழியை நாடிச்செல்கையில், வழியிலெதிருற்ற நந்தவனத்திற்சென்று அங்கிருக்கும் விருக்ஷத்திற் காய்த்துக்கனிந்திருக்கும் இனிமைசேர் பழதினுசுகளைப் பறித்துப் புசித்து நன்னீரருந்திக் களைதெளிந்து மறுபடியும் சிலதூரம் நடந்து கடற்கரையின் அருகில் சென்றான். அப்போது, அங்கிருக்கும் கப்பல் மாலுமியானவன் கடற்கரையில் நின்றிருக்கும் வீணைகானனைக்கண்டு மானைக்கண்ட புலியானது பாய்ந்துவருவதுபோல, தனது கப்பலிலிருக்கும் சிலதிருடர்களை யனுப்பி அதோ ஒருமனிதன் கடற்கரையருகில் வருகின்றான். அவனை வெகு தந்திரமாய் அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று, ஆக்ஞாபித்தனுப்பினான்:

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற திருடர்கள் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, தாங்கள் தயாராய் கப்பலில் வைத்திருக்கும் கட்டுமரங்களை கடலில்விடுத்து அதின்மீது நான்கு திருடர்கள் ஏறிக்கொண்டு கடற்கரையருகில் வந்தனர். அச்சமயம், வீணைகானன் மனமகிழ்ந்து திருடர்களைப் பணிந்து, சொல்வதாயினான்.

வீணைகானன்:—ஐயா! என்னை! உமது கப்பலிலேற்றி செல்வீராகில் யான் வீணைகானஞ்செய்து உமது செவிக்கினிமையான பாடல்களைப்பாடி மனமகிழச்செய்வேன்.

திருடர்:—ஆ! அதற்கென்ன தடை? தாங்கள் வீணைகானஞ்செய்து மனமகிழச் செய்வதெனின் எங்களுக்கும் வழிப்பிரயாணத்திற் கிசைந்த நன்மையா யிருக்கும்.

என, விஸ்வாச கொக்கு செய்த வேடிக்கையைப்போல தாங்கள் கொண்டகருத்துக்கு இவனும் சரியாய் ஒத்துக்கொண்டதினால் அவனை யாதொரு துன்பமும் செய்யாமல், கட்டுமரத்தின் மீதேற்றிக்கொண்டு போனார்கள். மாலுமியானவன் அவனை கப்பலிலேற்றிக்கொண்டு போகையில் வீணைகானன் தானனுபவிக்கும் கஷ்டத்தை நினையாமல் தனக்கு நற்காலம் வந்துவிட்டதென மனமகிழ்ந்து

தனது கரத்தில் வீணையையேந்தி சங்கீதசாஹித்ய இசைவழுவுறாமல் பலவித ராகத்திலும் பாடிக்கொண்டிருந்தனன்.

இவ்விதமாய் இவன் பாடுவதையுணர்ந்த மாலுமியும், கப்பல் திருடர்களும் கேட்டு மனோல்லாசமெய்தி? அடடா! நாம் இத்தனை நாளாய் வெகுபிரயாணிகளைப் பிடித்துக்கொண்டு வந்தோம். அவர்களெல்லாம் வரும்போதே அழுகையும் துக்கமும் கூச்சலும் துணையாய் வகித்துக் குய்யோ முறையோவென் றிரைச்சலிட்டுக்கொண்டிருப்பார்கள் இவனோவெனின் நமது மனதிற்கு உற்சாகத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்து களிக்கச்செய்கின்றானென்று யாவரும் பேசிக்கொண் டிருந்தார்கள் ஆனால், திருடராற் பிடிபட்டு ஆட்டுமந்தையைப்போல கூட்டமாய் உட்கார்ந்திருக்கும் பிரயாணிகளும் வீணாகானன் பாடும் பாடலின் சங்கீத சாஹித்ய பனுவலைக் கேட்டு தமக்கு நேர்ந்திருந்த ஆபத்தையெல்லாம் ஒழித்துவிட்டு சுகானந்தமா யுட்கார்ந்து பாடல்களைக்கேட்டு ஆனந்தமுற் றிருந்தார்கள். கப்பல் திருடரும் வேளை வேளைக்கு வீணாகானனுக்கும், பிரயாணிகளுக்கும் பசியாற பக்ஷணங்கொடுத்துக்கொண்டிருக்கும் போதும் மாயமுணராத வீணாகானன் மாத்திரம் வேண்டியவரையிலும் தின்று கொழுத்து மதோன்மத்தனாயிருந்தனன். மற்ற பிரயாணிகள் தமது தாய், தந்தை, அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், உற்றார் உறவின்முறையார்களையும் விட்டுப் பிரிந்தோமே இவர்கள் நம்மை எந்ததீவில்கொண்டுபோய் விடுவார்களோவென்று மனவருத்தமடைந்தவர்களா யிருப்பவர்களானபடியால் அவர்கள் அன்னாகாரம் புசியாமல் இளைத்திருந்தனர்.

இவ்விதமாயிருக்கையில், கப்பலானது ஓர் தீவிற் சென்றவுடனே அவர்கள் வழக்கம்போல் அன்றையதினம் கப்பலருகில் வந்தவுடனே மாலுமியானவன் யாவரையும் கடற்கரையி லிறக்கிவிட்டு, மனிதரை வாங்கவந்த வியாபாரிகளிடத்தில் ஒவ்வொரு பிரயாணிகளையும் பிடித்துக் கொடுத்துக் கிரயம் பேசிக்கொண் டிருக்கையில், அவ்வியாபாரிகள் ஒவ்வொருவரையும் முரட்டுத்தனமாய்ப் பிடித்திழுத்து விலைபேசும்போது அவர்கள் தமக்குற்ற கஷ்டத்தியாசத்தின்கொடுமையால் மனமிரண்டு வேடர்களிடஞ்சிக்கிய பறவையைப்போல் சுருண்டுவிழுவதும், அவர்களைவியாபாரிகள் தூக்கி நிறுத்தி விலைகொடுத்துவாங்கிக்கொண்டு ஆட்டுமந்தையைகூட்டிக்கொண்டு

போவதுபோல் அடித்து துரத்திக்கொண்டு செல்வதையும்பார்த்து வீணைகானன் மனமிரண்டு அடடா விதியே இவர்கள் நியாயமான கப்பல் வியாபாரிகளென்றிருக்க, இவர்கள் ஆளைவிற்கும் அநியாயக் காரர்களா யிருக்கின்றார்களே! இனி யாமென்ன செய்வது? நம்மையும் இவ்விதமே துயரப்படுத்துவார்களோவென மனமிரண்டு, துயருற்றிருந்தனன்.

ஆனல், மாலுமி மாத்திரம் வீணைகானன்மீது அன்புவைத்து, இவனிருந்தால் நம்மனைவருக்கும் மனோற்சாக முண்டுபண்ணும் சங்கீதங்களைப் பாடிக்கொண் டிருப்பானென்று மனமகிழ்ந்து, அவனைமாத்திரம் விற்கிரயம் செய்யாமல் தங்களுடன் அழைத்துக் கொண்டுபோய் கப்பலிலேற்றிச் சென்றார்கள்.

அப்பால், கடலில் கப்பல் போகும்போது, மாலுமி வீணைகானனைப் பழையபடியே பாடிக்கொண் டிருக்கும்படி கட்டளையிட்டனன். அவனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, வீணையைக் கரத்திலேந்தி வாசித்து யாவருக்கும் மனோல்லாச மாகும்படியான திவ்ய பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனன். இவ்விதமே கடல்மார்க்கமாய்க் கப்பல் போய்க்கொண்டிருக்கையில் எங்கேயாவது பிரயாணிகளைக் கண்டால் அச்சமயமே மாலுமியானவன் திருடர்களை யனுப்புவான் அவர்கள் தமது வழக்கம்போல் கட்டுமரங்களைக் கடலில் விடுத்து அதன்மீது ஏறிக்கொண்டுபோய் கடற்கரையில் வந்து, அவர்கள் குய்யோ முறையோவென கலங்கி யழுதிடும்விதமாய் அவர்களைப் பிடித்துக் கட்டி இழுத்துக் கட்டுமரத்தில் தூக்கிப் போட்டுக்கொண்டுபோய் கப்பலி லேற்றுவதும், அவர்களை திவாந்திரங்களிற் கொண்டுபோய் விற்பனைசெய்வதுமா யிருப்பார்கள்.

இவையனைத்தும் அருகிலிருந்து பார்த்துக்கொண் டிருந்த வீணைகானன் மனந்திகைத்து, அடடா! விதிவசமே ஈதென்ன ஆச்சரியம் புலி காட்டில் சஞ்சரிக்கும் மானைப்போல பாதவிக்கலாயிற்றேயென மனந் திகைத்து நாளுக்குநாள் பயத்தினால் தேகம் மெலிந்து பாடுப்படியான சந்ததமும்மாறி என்றைக்கிருந்தாலும் ஈசன் செயலெனவே மதித்து பகவானை தியானஞ் செய்துக்கொண்டு தனக்கு யாதொரு ஆபத்துமில்லாமல் உண்பதும் உறங்குவதுமா யிருந்தான். ஆனல் இவன் முன்போல் யாதொரு சந்தோஷமுமின்றி யிருந்தான். இவன் இவ்விதமா யிருக்கையில் கப்பல்திருடர்கள் தழு

துவழக்கப்படியே தினந்தோறும் கப்பல்மார்க்கமாய்ச்சென்று வழிப்போக்கர்களைப் பிடித்துக்கொண்டு வருவதும், அவர்களைப் பற்பல தீவுகளிலும் கொண்டுபோய் விற்பதுமா யிருந்தார்கள். இவையனைத்தும் கண்ணுற்ற வீணாகானனுக்கு மனவிசாரமே பெரிதாகியிருந்தமையால் தேகம் மெலிந்து இளைத்துப்போயினன். முன்போல வீணாகானஞ் செய்வதற்கு இயலாமல், சந்ததமும் சிந்தை மெலிந்தவனாய் வீணையைத் தோளில் மாட்டிக்கொண்டு திரேதாயுகத்துக் கும்பகர்ணனைப்போல் சயனித்துக்கொண்டிருப்பான்.

இவ்விதமாய் இவன் செய்யும் சோம்பேரித்தனத்தைக் கண்ணுற்ற மாலுமியும் சற்று ஆலோசித்து அருகிலிருக்கும் திருடர்களுக்குச் சொல்வதாயினன்.

மாலுமி:—நேயர்காள்! இவனென்ன முழுச்சோம்பேரியாய் உண்பதுவும் உறங்குவதுமே தனக்குற்ற தொழிலா யிருக்கின்றானேயன்றி முன்பு இவன் நம்மை சந்தோஷிக்கச் செய்துக்கொண்டிருந்த வீணைவாத்தியஞ் செய்வதில்லையே ஈதென்னகாரணம்.

திருடர்:—ஆம்! முன்பு நன்றாகவும் கொழுத்து புஷ்டியாகவு மிருந்தனன், வழிப்பிரயாணிகளையும் வெகு பக்குவமாக அழைத்துக்கொண்டுவந்து நமது வசத்தி லொப்பிப்பான் வியாபாரிகளிடத்திலும் வெகு சாமர்த்தியமாய்ப் பேசி கிரயத்தையும் வாங்கிக்கொண்டு வந்து நமக்கு சேர்ப்பிப்பான். இந்த மாதமுழுமையும் யாதொரு வேலையும் செய்வதில்லை, “குதிரை குருடாயிருந்தாலும் கொள்ளுதின்பதிற் குறைச்சலில்லை” யென்பதுபோல், வேலைக்கு சோம்பேரி சோற்றுக்கு ராஜாளி யென்பதுபோல முன்னிலும் விசேஷமாய்ப் பெருந்தீனி தின்கின்றான். அன்றியும், இரவும் பகலுமாய் நித்திரையே துணையென்று படுக்கையைவிட் டெழுந்திருக்காம லிருக்கின்றான்.

மாலுமி:—நேயர்காள்! நீங்கள் புகன்றவை யனைத்தும் சரியே! அன்றியும் நாளுக்குநாள் தேகம் மெலிவுற்று இளைத்துப் போகின்றான். இனி தாமதித்திடில் இன்னும் சிலநாளையில் இறந்து போய்விடுவான்போ லிருக்கின்றது, ஆகையால் இவனையும் விற்கிரயம் செய்துவிட்டால் பணமாய்விடும்.

திருடர்:—யாங்களும் அவ்விதமாகவே யோசித்திருக்கின்றோம்.

என, இவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருப்பதை நித்தி
செய்பவன்போல படுத்த படுக்கையிற்றானே கேட்டுக்கொண்டிரு
வீணைகானன் திகிலுற்று, இனிமேல் நாம் சும்மாயிருந்தால்
யாது, ஆகையால் முயற்சியுடையோர் இகழ்ச்சியடையா ரென்
தன்மையாய் இனி நாம் தப்பித்துக்கொள்ளும் மார்க்கத்தைத்
வேண்டுமென மனதிலெண்ணியவனாய் கொஞ்சம் புரண்டு மெது
யெழுந்து உட்கார்ந்து கை, கால், முகங் கழுவி சுத்திசெய்
கொண்டு, மனதில் ஓடிப்போவதற்கு எண்ணியவனாய் வெளி
மாத்திரம் மஹா உத்தமனைப்போல் காத்தில் வீணையெடுத்து
மீட்டி கலியாணராகத்தில் மோகப்பதங்களை வெகு விமரிசையு
பாடி யாவரையும் மனமயங்கும்படி செய்துவிட்டு, கப்பலிற்ற
அங்குமிங்கும் ஓடி விளையாடிக்கொண்டு தமாஷாய்க் காலங்
துக் கொண்டிருந்தனன். கப்பல் திருடரும், மாலுமியும் வீ
னன்மீது சந்தோஷமடைந்து, பழையபடியே அவன்மீது ந
கையுடையவரா யிருந்துவிட்டார் வீணைகானனோவெனின் த
துக்கொண்டு ஓடிப்போவதற்கு சமயம் பார்த்துக் கொண்டிரு
யில், மாலுமியானவன் தனது வழக்கத்தைப்போல ஓர் தீவின்
யின் ஓரமாய் கப்பலைக் கொண்டுபோயினன். அச்சமயம் திரு
ரும், வீணைகானனும் கட்டுமரத்தைக் கடலில் விடுத்து, அதில்
வந்தனர். அச்சமயத்தில் யாவரோ வழிப்போக்கர்கள் இரண்
யர் வெகுதூரத்தில் வருவதைக்கண்டு வீணைகானன் மனமகி
இனி நாம் விடுதலையாவதற்கு நேரிட்டதுயென நினைந்தவ
தன்னோடிருக்கும் திருடர்களைப்பார்த்து ஐயா! அதோபார்த்
வெகுதூரத்தில் இரண்டுபேர் வருகின்றார்கள் ஆகையால் நீ
இங்குதானே தலைமறைவா யிருப்பீர்களாகில் யான் அவர்க
தந்திரமாய் அழைத்துக்கொண்டு வருகின்றேனென்று செ
விட்டு பிரயாணிகள் வருகின்ற பாதையை நோக்கிப் போயி
திருடர்களும் கடற்கரையிற்றானே பதுங்கி யிருந்தனர். வீணை
னோவெனின் வழிப்போக்கரை அழைத்துக்கொண்டு வருகி
னைப்போல் தந்திரோபாயமாய் திருடர்களுக்குத் தெரியாமல்
வழியாய்த் திரும்பி விட்டது சனியனென்று சொல்லிக்கொ
எதிரில் தோற்றும் நந்தவனத்திற் சென்று, அங்கிருக்கும் மா
தின்மீதேறி உட்கார்ந்துக்கொண்டு இனிமைசேர் கனிகளைப்
துப் புசித்துக்கொண்டிருந்தனன்.

இவன் நினைவு இவ்விதமாய்ச் சுகாநந்தமா யிருக்கையில் பிரயாணியை அழைத்துக்கொண்டு வரப்போன வீணாகானனைக் காணாமல், அவன் நம்மை ஏமாற்றிவிட்டு ஓடிப்போயினானென்று தீர்மானித்துக்கொண்டு வீணாகானனை மறந்துபோய் விட்டார்கள் ஆனால், மாலுமி மாத்திரம் அவன்மீது அன்பு வகித்திருந்தவனானபடியால் விற்கிரயம் செய்துவிட்டாலும் பணமாகிலும் கிடைக்குமே வீணில் அவனை இழந்துவிட்டோமே யென்று மனவிசாரமடைந்திருந்தனன் அப்பால் வீணாகானன் இனி நமக்கு யாதொரு ஆபத்து மில்லையென்று மனமகிழ்ந்தவனாய் அவ்வனத்தை நோக்கிச் செல்கையில் வழியில் ஒரு கிளைவழி தோன்றிற்று, அவ்வழியாகவே சென்று அங்கிருக்கும் ஓர் சோலையிற்சென்று தாமரைப்பொய்கையி லிறங்கி ஸ்நானபான நேமநிஷ்டை புரிந்துக்கொண்டு யாதேனும் கனிவர்க்கங்களைப் புசித்துவிட்டு வருவோமென்று செல்லும்போது, அவ்வனத்திலிருக்கும் விநோதமனைத்தும் கண்காக்ஷியாய்ப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, மனிதரைத் தின்னும் காபிரிகள் வந்து வீணாகானனை உயிருடனே கடித்து தின்பதற் கிசைந் துனக்கெனக்கென்று வழக்கிடலாயினர். இவர்களின் விகார ரூபத்தையும் கோரைப்பற்களையும் கண்ணுற்று மனந்திகைத்து அப்பப்பா! ஈதென்ன உயிர்வேதனையா யிருக்கின்றதே இவர்களைப்பார்த்தால் மனிதரூபமா யிருந்திடினும் மிருகசேஷ்டையா யிருக்கின்றதேயென்று திகிலுற்று கருடனைக்கண்ட நாகசர்ப்பம்போல'' மனமிரண்டு பூமியிற் சோர்ந்து வீழ்ந்துவிட்டனன். ஆனால் பலர்முன் ஓடிய பாம்பும் சாகாதென்பதுபோல'' அந்நான்கு காபிரிகளும் வீணாகானனைப் பிடித்துக்கொண்டு எனக்குனக் கென்று வழக்காடிக்கொண்டிருக்கையில் மற்றோர் காபிரி வந்து அவர்களை விசாரித்து நியாயநட்பம் கவனியாமல் இந்த மனிதனை நமது எஜமான் முன் கொண்டு போய் விடுத்தால் அவர் எப்படி சொல்கின்றாரோ அப்படியாகட்டுமென்று இடையன் ஆட்டைத் தூக்கிக்கொண்டு போவதுபோல் வீணாகானனை முதுகின்மீதெடுத்துக்கொண்டு போய்த் தமது எஜமான் முன் விடுத்து இவனை யான் பிடித்துக்கொண்டு வரும்போது, இந்த நால்வரும் என்னை தொந்தரை செய்கின்றார்கள். இவர்களை தாங்கள் கண்டிப்பீரென்று சொன்னான். அந்நான்கு காபிரிகளும் ஆச்சரியமடைந்து இது என்ன ஆச்சரியம்? முன்னதாய் யாங்கள் நால்வரும் இந்த மனிதனைப்பிடித்து தின்னப்போகுஞ் சமயத்தில்

இந்தக் காபிரி ஓடிவந்து ஞாயம் பேசுபவனைப்போல் தந்திரமாய் தூக்கிக்கொண்டு எஜமானிடம் சொல்லி உமது வழக்கை தீர்த்து விடுகின்றேனென்று சொல்லிவிட்டு வந்தவன் இப்போது இவ்விதமாய்த் தொடர்வழக்காடுகின்றானென்று சொல்லிக் கொண்டிருப்பதைக் கேள்வியுற்ற அந்த காபிரிகளின் தலைவன் இவ்வழக்கை அப்பால் தீர்த்துக்கொள்ளுவீரென்று சொல்லிவிட்டு போஜனவேளையாகையால் யாவரும் மேஜையில் வரிசையாய் உட்கார்ந்து கொண்டார்கள்.

அச்சமயம் காபிரி சுயம்பாகிகள் தாம் சமைத்து வைத்திருக்கும் மிருக இறைச்சிகளையும், நரமாம்ஸ பக்ஷணங்களையும் பெரிய பெரிய பாத்திரங்களில் வைத்து தட்டந்தட்டமாய்க் கொண்டுவந்து மேஜையில் வைத்துவிட்டு அந்த வனத்திலிருக்கும் தென்னங்கள், பனங்கள், ஈச்சங்கள் முதலாகிய மதுபானங்களையும் பாத்திரங்களில் கொண்டுவந்து வைத்துவிட்டார்கள். அச்சமயம் காபிரிகளனைவரும் மதுக்களை குடித்து, இறைச்சிகளைப் புசித்து, எலும்புகளை நெறநெறவெனக் கடித்துக் கொண்டிருக்கையில் வீணாகானன் பார்த்துவிட்டு, சரி! சரி!! இன்றோடு நமது வாழ்நாள் முடிந்துவிட்டதுபோலிருக்கின்றது, நாம், இறந்துபோனால் நாம் கற்றிருக்கும் இந்த அருமையான வித்தை நமக்குத் துணையாய் வருமா? ஆகையால் இப்போதே கொஞ்ச நேரமாகிலும் நமது காதல்தீர வீணாகானஞ் செய்வோமெனக் கருதி வீணையைக் கரத்திற்றாங்கி, தன்னுடைய காலவித்தியாசமனைத்தும் பனுவலாய்த் தொகுத்து மிகவும் பிரதாபமாய்ப் பாடிக்கொண்டிருந்தனன். இவ்விநோத கச்சேரி காலக்ஷேபத்தைக் கவனித்த காபிரிகளனைவரும் ஆநந்த சாகரத்திலாழ்கினவர்களாய் சந்தோஷமடைந்து சங்கீத காயனங் கேட்டுக்கொண்டே சாப்பிட்டானபின் யாவரும் காபிரித் தலைவனைப் பணிந்து, ஐயா! இந்த மனிதன் உயிருடனிருந்தால் உத்தமமாகும் நம்மனைவருக்கும் மிகவும் நலமாயிருக்குமென்றுரைத்தார்கள். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற காபிரித்தலைவனும் சரிதானென்றுரைத்துக் கொண்டு, அவனைப் பிடித்துக்கொண்டுவந்த காபிரிகளைப் பார்த்து, அடா! நீங்கள் இந்த சிறு மனிதனைத் தின்பதென்றால் ஆளுக்கொரு எலும்பும் கிடைப்பது அரிதாகும் ஆனால், இவனுக்குத் தினந்தோறும் பக்ஷணம் கொடுத்துக் காப்பாற்றினால் நமது செவிக்கினிமையாய்ப் பாடிக்கொண்டிருப்பானென்று வீணாகானனைக் கொல்லா

மல் அவன் புசிப்பதற்கிசைந்த காய், கனி, கிழங்குகள், தேன் முதலாகியவை யனைத்தும் காபிரிகளால் கொண்டுவந்து கொடுத்து புசிக்கச்செய்து அவனைத் தமது பிள்ளையைப்போல் காப்பாற்றிக் கொண்டு வந்தார்கள். வீணைகானனும் மனமகிழ்ந்து நாம் கற்றுணர்ந்த இந்த சங்கீத சாஹித்தியத்தினால் நமக்கு ஆபத்துவராமல் பிழைக்கின்றோம், இதுவும் தெய்வசகாயந்தானென்று மனமகிழ்ந்து. அந்தக் காபிரிகளுடனே தானும் ஒருவனாயிருந்து அவர்கள் மனமகிழ தினந்தோறும் வீணைகானஞ் செய்துக்கொண்டிருந்தனன்.

இவ்விதமாகவே தினந்தோறும் அந்தக் காபிரிகள் எங்குசென்றாலும் வீணைகானனையும் அழைத்துக்கொண்டு போவதும், சில சமயும் அவனை பாடும்படி செய்வதுமாய்க் காலங்கழித்துக் கொண்டிருக்கையில், வீணைகானனுக்கு மாத்திரம் அவர்களிட மிருப்பதற்குக் கிஞ்சிற்றும் மனமின்றி இனி எவ்விதமாயினும் தப்பித்துக் கொண்டு ஓடிவிடவேண்டுமெனக் கருதியவனா யிருக்கையில், ஓர் நாள் காபிரிகள் ஒருவனைப்பிடித்துக் கொண்டுவந்து உயிருடனே அவனைக்கடித்துத் தின்றுகொண் டிருப்பதைக்கண்டு வீணைகானன் மனம்பதறி இந்த துஷ்ட மிருககுணம் வகித்த காபிரிகளிடமிருந்து தப்பித்துக்கொண் டோடுவதுதான் சிலாக்கியமென மதித்து சமயம் பார்த்துக்கொண்டே யிருந்து ஓர் நாள் அந்த காபிரிகளுக்கு திருநாளென்னும் பெருநாள் உண்டாயிற்று, அன்றையதினம் அவர் வெகுநாளாய்ச் சேகரித்து வைத்திருந்த மிருகங்களையெல்லாம் கொன்று சமைத்து மனிதர்களையெல்லாம் உயிருடனே வைத்திருந்து அவர்கள்கூச்சலிட்டுக் கதறி யழும்படியாய் அனலில் வாட்டியும், சிலரை பொரித்தும், மதுபானங்களைக் குடங்குடமாய்க் கொண்டுவந்து வைத்தும் அவர்களுக்கிசைந்த துஷ்ட தேவதைகளுக்கு பொங்கலிட்டு பூஜைசெய்தானபிறகு அங்கு மலைகளைப்போல் குவித்திருக்கும் இறைச்சிகளையெல்லாம் புசித்து மதுக்களை குடித்து வெறியதிகரித்து யாவரும் ஆனந்தமாய் விளையாடிக்கொண் டிருக்கையில், வீணைகானன் இனி தாமதித்திடில் நம்மையும் புசித்துவிடுவாரெனக்கருதி அதிசீக்கிரமாய்க் கரத்தில் வீணையை எடுத்து மீட்டலாயினன் அச்சமயம் காபிரிகள் வீணைகானனுக்கு படையலி லிருந்து காய், கனி, கிழங்கு வகைகளை யெல்லாம் எடுத்துக் கொடுத்துப்

புசிக்கச் செய்தானபின் யாவரும் அவனைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு வீணையை மீட்டி பாடும்படியாய் உத்திரவு செய்தார்கள்.

அப்போது வீணாகானனானவன் புலிக்கூட்டத்தின் மத்தியிலிருக்கும் மானைப்போல திகிலுற்றவனா யிருந்திடினும் தனது கரத்திலிருக்கும் வீணையைப்பார்த்து, ஆ! ஹா!! எனது உயிர்த்தோழனே எனக்கு ஆபத்தணுகாமல் காப்பாற்றுவதற்காக பகவான் உன்னை எனக்குத் துணையாய்க் கொடுத்து என்னை இரக்ஷிக்கின்றாரென்று பகவானுடைய கிருபா வீக்ஷண்யத்தைப் பலவிதமாய்ப் புகழ்ந்து துதித்து ஸ்தோத்திரப்பாமாலையாக பனுவலியற்றி வீணையின் சங்கதத்தொனிக் கிசைந்தவிதமாய் பாடிக்கொண்டு முப்பத்திரண்டு ராகங்களிலும் தாளவித்தியாசமின்றி வீணையை மீட்டிக்கொண்டிருந்தனன். அச்சமயம் காபிரிக ளனைவரும் சங்கீதத்தின் அருமையான பதசாஹித்தியத்தினால் ஆனந்த பரவசமடைந்து யாவரும் கண்ணுறங்கி நித்திரை செய்துக் கொண்டிருக்கையில் வீணாகானன் மெல்லெனயெழுந்து அவர்களின் தலைவன்வசிக்கும் ஸ்தானத்தில் அங்கு விதவிதமான அந்தகாபிரிகள் வழிப்போக்கரைக் கொன்று தின்னும்போது அவர்க ளணிந்திருக்கும் ஆபரணாதிகளை யெல்லாம் கழட்டியெறிந்து விடுவது வழக்கமா யிருந்ததினால் அவைகளை வீணாகானன் யெடுத்துக்கொண்டான் ஆபரணாதிகளும், நவரத்தினங்களும், குப்பல் குப்பல்களாய் குவித்திருப்பதைப் பார்த்து மனோல்லாசமெய்தியவனாய் அவைகளையெல்லாம் வாரி மூட்டைகட்டிக்கொண்டு யாதொருவர் கண்ணுக்குந் தெரியாமல் ஓட்டம்பிடித்தனன். அப்பால் அருணோதயமானபின் காபிரிக ளனைவரும் துயில்நீங்கி கண்விழித்தெழுந்து பார்க்கையில் வீணாகானனைக் காணாமையால் யாவரோ அவனைக் கொன்று தின்றுவிட்டார்களென மதித்து ஒருவர் மேல் ஒருவர் சந்தேகமுற்றிருந்தார் காபிரிகளின் தலைவனானவன் மஹா விசனமடைந்தவனாய் அவனை பிடித்துக்கொண்டு வந்த காபிரிகளை விசாரிக்கையில் அவர்களும் மஹா விசனமடைந்தவராய் ஐயா! யாங்கள் அவனைத்தின்றுவிட்டால் எங்கள் பசியாறிப்போகுமா அவனிருந்தாலும் மதுர செவிக்கினிமையுள்ள விநோதமான பனுவல்களுடன் வீணை கச்சேரிசெய்துக் கொண்டிருப்பானே யென்று அழுதனர்கள். இதையுணர்ந்தகாபிரித்தலைவன் அங்கிருக்கும் [illegible] தின்னும் பூதம்போன்ற காபிரிக ளனைவரையும் விசாரிக்கையில்

அவர்களனைவரும் அப்படியே சொல்லி விசனப்பட்டார்கள். இவையனைத்தும் கவனித்த காபிரித்தலைவன் யாதொன்றும் கவனியாமல் தீராக் கவலையுற்று திகைத்திருந்தனன்.

---

## Scene 3.

இடம் . மலைச்சாரல்.

**கதாநாயகன்.**

ஞானேந்திரி, கமலநாயகி, சந்நியாசி, திருடன்.

இங்ஙனம் நிற்க, ஞானேந்திரியும், கமலநாயகியை அழைத்துக்கொண்டு தனது மணாளனாகிய வீணாகானனைத் தேடிக்கொண்டு கானகமார்க்கமாய் வருகையில் வழியிலெதிருற்ற ஓர் மலையடிவாரத்திலிருக்கும் சோலையிற்சென்று வசந்தமண்டபத்தில் உட்கார்ந்திருக்கையில் அந்த சோலைக் கருகாமையிலிருக்கும் மலைக்குகையில் வாசஞ்செய்யும் திருடர்களிலொருவன் தந்திரோபாயமாய் வந்து யாவராயினும் வழிப்போக்கர்களில் விசேஷமாய் ஆபரணாதிகளணிந்திருந்தால் அவர்களுடனே தானும் ஓர் பிரயாணியாய்ச் சேர்ந்துக்கொண்டு மிகவும் உத்தமனைப்போல் பேசிக்கொண்டுபோய், அவர்களணிந்திருக்கும் ஆபரணாதிகளையெல்லாம் கழட்டிக்கொண்டு வேறு வழியாய் மறைந்தோடிப் போய்விடுவான். ஆனால் இவனுடைய சாமார்த்தியம் மற்றவர்களுக்கு தெரியாது, மற்றத் திருடர்களோவெனின் பலவழிகளிலுந் திரிந்து வழிப்போக்கர்களை வழிமடக்கி அடித்து அவர்களிடமிருக்கும் பொருளைப் பறித்துக் கொண்டுபோவதுமாயிருப்பார்கள்,

இங்ஙனம் இவர்கள்நிலை இவ்விதமாயிருக்கையில் வசந்தமண்டபத்தில் உட்கார்ந்திருந்த கமலநாயகியும், ஞானேந்திரியும், மெல்லென எழுந்து செல்வோமென் றிருக்கையில், ஞானேந்திரி அங்கிருக்கும் ஓர் பெரிய ஆல்விருக்ஷத்தின் கிளையினுச்சியில் ஏறிப் பார்க்கையில் அவ்வனத்தின் மேற்றிசையில் அரண்மனையும் வீடுகளும் தோற்றக் கண்ணுற்று, மனமகிழ்ந்தவளாய் விருக்ஷத்தை விட்டு பூமியிலிறங்கி கமலநாயகிக்குச் சொல்வதாயினள்.

ஞானேந்திரி:—அம்மா! கமலநாயகி! இவ்வனத்தின் மேற்றிசையில் ஓர் தேசங் காணப்படுகின்றது. நாம் அங்கு சென்றால், யான்

அரண்மனையில் உத்தியோகத்திலமர்ந்துகொண்டு, நமது மணாளன் எந்த தேசத்தி லிருந்தாலும் தந்திரோபாயமாய் வரவழைக்கின்றேன் திவிரமாய் வருவாய்.

கமலநாயகி:—சரி! அப்படியே செல்வோம்.

என, இருவரும் புறப்படுகையில், ஓர் திருடன் அவர்கள் முன் வந்து பார்க்கையில் ஞானேந்திரியும் இராஜகுமாரனைப்போல் நவரத்தின கசிதமாய் துலங்கும் ஆபரணாதிகளை யணிந்திருக்கவும் கமலநாயகியோவெனின் காண்போர் கண் கூசும்விதமாய் காந்திப்ரகாசமா யிருப்பதையும் பார்த்து, மனமயங்கி, அடடா! யாம் இர்த்தினம் விழித்த முகதரிசனம் நன்முகமா யிருந்ததினால், ஆயிரம்பொன் பெறும்படியான ஆபரணாதிகளும், அழகாநந்த முக வஜீகரமமைந்த கன்னியும் கிடைப்பதாயினள். இந்த ராஜகுமாரனோவெனின், மிகவும் இளவயதமைந்தவனாயிருக்கின்றான். இவனை ஓர் அடியினால் தலையை யுடைத்து சாகச்செய்துவிட்டு, அவன் அணிந்திருக்கும் இராஜ உடுபாவனைகளை யெல்லாம் பறித்து நாம் உடுத்திக்கொண்டு, இந்த பெண்ணையும் அழைத்துக் கொண்டுபோய் விடுவோமென மதித்தவனாய் அவர்களருகில் நெருங்கி சிலதூரம் வந்து அவர்களை நோக்கி நீங்கள் எந்தவூருக்குப் போகின்றீர்களென்றனன். ஞானேந்திரி இவனைப்பார்த்து இவன் யாவனோ வழிப்போக்கனென் றுணர்ந்து, ஐயா! நாங்கள் வெகுதூரத்திலிருந்து வருகின்றோம், எதிரில் தோன்றும் ஊருக்குதான் போகிறோமென் றுரைத்தாள்.

திருடன்:—அப்பா! உன்னைப்பார்த்தால் மிகவும் இளவயதமைந்தவனா யிருக்கின்றாயே நீ இக்கானகங்களெல்லாம் என்னமாய் வந்தாயோ? ஐயோ! பரிதாபம். இந்தப்பெண் உனக்கு என்ன வேண்டும்?

ஞானேந்திரி:—இவளென் மனையாள். ஆனால் இன்னும் மணமாகவில்லை, இவளோர் இராஜபுத்திரி நாங்களிருவரும் சம்மதித்து புறப்படலாயினோம்.

திருடன்—ஐயோ! ஈதென்ன அறியாத்தன்மை இளங்கன்று பயமறியாதென்பதுபோல மனையாளை யழைத்து வனத்திற்குத் தனியாய் வருகலாமோ? ஆயினும் உமது அதிர்ஷ்டத்தினால் யானும் உமக்குத் துணையாய் வருவதாயிற்று சீக்கிரமாய்வருவீர்.

என, நல்லவார்த்தையே பேசிக்கொண்டே அவ், வனத்தின் சோலையி லழைத்துக்கொண்டு போயினன். அச்சமயம் அத்திருடனுக்கு அநேகவிதமான துர்ச்சகுனமனைத்தும் தோன்றிற்று, மனதில் பயங்கரம் தோன்றியது, இடதுகண் துடித்தது, கால்இடறி பூமியில் வீழ்ந்தனன். மறுபடியும் எழுந்து நடக்கும்போது, ஓர், சாரைப்பாம்பு எதிரே யோடியது, அதற்கப்பால் நாலடிதூரத்தில் விச்சுளி கட்டியது, ஆந்தை சீறியது இவைகளைக் கண்ணுற்ற திருடன் தனக்கு வரும் ஆபத்தை நினையாமல் தானழைத்துக்கொண்டு போகும் ஞானேந்திரியின் உயிர் நீங்குவதினால் இந்த ஆகாத சகுனமனைத்தும் காணப்படுகிறதென மதித்து மஹா சந்தோஷமாய்ச் சென்று நாற்புறமும் விருக்ஷங்க ளடர்ந்திருக்கும் சோலையிற்சென்று ஞானேந்திரியைப் பார்த்துச் சொல்வதாயினன்.

திருடன்:—அடா! பயலே! யானுன்னைக் கொல்வதற்காக இந்தத் தடியாலுன்னை யடித்தால் உன் தலையுடைந்தால் நீ அணிந்திருக்கும் ஆடை ஆபரணங்களிளெல்லாம் இரத்தம் சிந்தி யாவும் கெட்டுப்போய்விடும். ஆகையால் சீக்கிரமாய் உனது ஆடையாபரணங்களை யெல்லாம் களைந்து கொடுப்பாய்.

ஞானேந்திரி:—ஐயா! உன்னை யாங்கள் துணையென்று நம்பி வந்திருக்க, எங்களை இவ்விதமாய் பயங்கரப்படுத்துவது நீதியல்லவே. தாங்கள் யாரையா?

திருடன்:—அடா! பயலே! யான் திருடன் எமது ஜாதித்தொழிலிதுவாகும், யான் வழிப்போக்கரை யடித்துப் பொருள்பறித்து ஜீவிப்பது வழக்கமாகையால் உங்களையும் அவ்விதமே அழைத்துக்கொண்டு வந்தேன் ஆகையால், உன்னைமாத்திரம் கொன்றுவிட்டு இந்தப்பெண்ணை யானழைத்துக் கொண்டுபோய் மணம்புரிந்து சுகித்திருப்பேன்.

ஞானேந்திரி:—சரி! அவ்விதமே தங்களிடம் அகப்பட்டுக்கொண்டபோது தாங்கள் என்னசொன்னாலும் சொல்லலாம் இந்த பயங்கரமான கானகத்தில் எங்களுக்கும் திக்கில்லை, உமக்கும் எதிரியில்லை. ஆனால், தங்களுக்கு இந்தக்கானகமேவாசஸ்தானமோ? உமது இனத்தார்களும் இந்த வனத்திலேயேதான் வாசஞ்செய்வதோ?

திருடன்:—அடே! அதெல்லாம் நீ ஏன் கேட்கிறாய்? யான் வசிப் பது எங்ஙனமாயினு மிருக்கட்டும். திருடர்களின் இருப்பிடத் தை எவர்கட்கும் தெரிவித்திடார்கள். உன்னுடைய ஆபரணு திகளை சீக்கிரமாய் கழட்டி கொடுப்பாய்.

என, கடுகடுத்து தன் இடையிற் சொருகியிருந்த கத்தியை எடுத்து இருதுண்டாய் வெட்டிப் போடுவேனென்று பயங்காப் படுத்தினான். அவனுடைய மோச யெண்ணத்தையும், ஆர்ப்பரட்ட மான கூச்சலையும் கேள்வியுற்ற ஞானேந்திரி சிரித்து, திடீரென தன் கரத்திலிருந்த தனுசிற் கணைதொடுத்து, அவன் கத்தியைப்பிடித்த கையின்மீது விடுத்தனன். அந்த கணையானது ஜிவ்வென் றெகிறி திருடனுடைய கையைத் துணித்துவிட்டது. அச்சமயம், அவன் அலறியழுது கூச்சலிட்டனன். குகையிலிருந்த திருடர்களெல்லாம் கேள்வியுற்று, நம்மவர்களில் யாருக்கோ அபாயமுற்றுப்போ யிருக் கின்றன இனி தாமதித்திடாமற் சென்று, அவனுடைய அபாயத் தைத் தீர்க்க வேணுமென்று ஓடி வருகலாயினர்.

அச்சமயத்தில் ஞானேந்திரியானவள் கமலநாயகியை தன்னரு கில் வெகு ஜாக்கிரதையாய் நின்றிருக்கும்படி செய்துவிட்டு, தனது காத்திற்றாங்கிய தனுசில் கணைகளை தொடுத்து வைத்துக்கொண்டி ருந்தனள். திருடர்கள் ஓடிவந்து, பார்க்கையில், தமது இனத்தின ளுகிய திருடன் கையறுந்து பூமியில் வீழ்ந்துகிடக்கவும், ஆண்பிள்ளை வேஷமாய் வந்திருக்கும், ஞானேந்திரி கரத்தில் தனுசையேந்தி நிற்கவும் அவளருகில் தேவஸ்திரீயைப்போல் அழகுவாய்ந்திருக் கும் கமலநாயகியையும் பார்த்துவிட்டு யாவரும் மதிமயங்கி நின்றார் கள் அச்சமயம் திருடர்களின் தலைவனுகிய வீரசேனனனவன் ஞா னேந்திரியை விசாரிப்பதாயினன்.

வீரசேனன்:—அடா! சிறுபயலே! நீயார்? எங்கிருந்து வந்தனை? இவனை என் கையை வெட்டி நொய்யும்படியாய் வையகத்தில் வீழ்ந்து துடித்தழும்படி செய்தனை? சீக்கிரம் சொல்.

ஞானேந்திரி:—அடா! திருட்டுப் பயல்களே! இவனென்னை வஞ்சக மாய் அழைத்துவந்து கொல்வதற்கிசைந்து கத்தியை ஓங்கி னன். யானே அரசபுத்திரனுச்சுதே இவனுக்கு பயந்து சும்மா யிருப்பேனே உடனே அவனுயிரைக் கொல்லாமல் அவன் அங்கம் பழுதாகும்படியாகவும் இனிமேல் திருடாமலிருப்ப

தற்கு அவனுடைய கையைவெட்டி நொண்டியாகசெய்துவிட்டேன். இனி நீங்களும் வீண்புரளிசெய்தால், "துவாபரயுகத்தில் அர்ச்சுனன் காண்டாவன மெரித்ததுபோல்" உங்களனைவரையும் கொன்றுவிடுவேன்.

வீரசேனன்:—நேயர்காள்! இந்த இராஜகுமாரனே சிறுபிள்ளையாயிருந்தாலும் அஸ்திர பிரயோகஞ்செய்து யாவரையும் கொன்றுவிடுவான்போலிருக்கின்றது ஆகையால், நீங்களனைவரும் பற்பலவித ஆயுதங்களினாலும் அவனை அடித்துக் கொன்றுவிடவேண்டியது, ஆனால், அவனருகிலிருக்கும் அந்தப்பெண்ணை மாத்திரம் முன்னதாய் தூக்கிக்கொண்டு வருவீர், இனி காலதாமதஞ் செய்யாதீர்.

என, சொல்லி வாய்மூடுமுன்னமே ஞானேந்திரியானவள் தனதுமுதுகி லணிந்திருந்த அம்புறாத்தூணியிலிருந்து ஓர் அக்கினியாஸ்திரத்தை யெடுத்து மந்திரோச்சாடனஞ் செய்து தனுசிற் றொடுத்துவிட்டாள். அந்தக் கணையானது மந்திரபலத்தினால் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரமாய் நாற்புறஞ் சிதறி திருடர்களனைவரையும் கொன்றுவிட்டது இந்த வைபவக்காக்ஷியைப் பார்த்துக்கொண்டிருந்த ஓர் சந்நியாசியானவர் ஆச்சரியமடைந்து, ஞானேந்திரியின் அருகில் வந்து விசாரிப்பதாயினர்.

சந்நியாசி:—அப்பா! உன்னைப்பார்த்தால் சிறுபிள்ளையாய்க் காணப்படுகின்றது, என்றாலும், உன்னுடைய வில் திறமைக்கு யாதொருவரும் நிகராகமாட்டார்கள். என்றாலும் நீ! இந்த பயங்கரமான கானகத்தில் யாது காரணமாய் மனையாளுடன் வருகலாயினையோ யான் கவனித்துணர்க விபரமாய்ப் புகல்வீர்.

ஞானேந்திரி:—தாங்கள் யார்? தமது வாசஸ்தான மெங்ஙனமிருக்கின்றது? இங்ஙனம், யாது காரணமாய் வந்தீரோ? உமது சவிஸ்தாரத்தைப் புகன்றால், யானும் பிறகு தெரிவிக்கின்றேன்.

சந்நியாசி:—அப்பா! என்மீது கோபிக்கவேண்டாம். யான் தங்களை யாரென்று விசாரித்தேனே யல்லாமல் மற்றொன்றுமில்லை ஆனாலும் யானோ? சந்நியாசி எனக்கு வீடேது? சுற்றமேது? சுகமேது? துக்கமேது ஒன்றுமில்லை. யான் சதாகாலமும் இவ்வனத்தில் சஞ்சாரஞ் செய்துகொண்டிருப்பேன், அச்சமயம்

இங்கு திருட்டுபத்திரவமென்று யாதொருவரும் வருகிறதில்லை. என்றாலும், யாவரேனும் தப்பித் தவறி வந்துவிட்டால் இந்த திருடர்கள் அவர்களை அநியாயமாய்க் கொன்று, அவர்களுடைய ஆபரணாதிகளை அபகரித்துக்கொள்ளுகின்ற வழக்கமா யிருப்பார்கள். ஆனால், இச்சமயத்தில் உமது அஸ்திரத்தினால் யாவரும் மரணமாயினபடியால், இனிமேல் இவ்வனத்தில் மனிதசஞ்சாரம் வெகுவாய் நிறைந்திருக்கும் என்னும் சந்தோஷத்தினால் உன்னை விசாரித்தேன்.

ஞானேந்திரி:—ஐயா! யானோ வெகு தூரத்திலிருந்து வருகின்றேன். எமது காலவித்தியாசத்தை நினைந்திடில் மிகவும் பயங்கரமாயிருக்கும், யாங்கள் பற்பலவிக் கானக சஞ்சாரஞ் செய்துக்கொண்டு இந்நகரத்திற்கு வருகையில், இந்த திருடர்கள் எங்களைக் கொல்வதற்கு ஆலோசித்தார்கள், ஆகையால் எங்களுயிரை யாங்கள் காப்பாற்றிக்கொள்வதற்காக என் கரத்தின் அஸ்திரத்தினால் யான் இவர்களை யெல்லாம் முன்னுதாய்க் கொன்றுவிட்டேன். ஆகையால் இவையனைத்தும் இனி சம்பாஷிப்பதினால் பிரயோஜனமில்லை இந்நகரத்திற்கு எந்தப்பாதையாய் போகவேண்டுமோ அந்த வழியை எனக்கு தெரிவிப்பீராகில் யாங்கள்போய் அரசனைக்கண்டு பேசிக்கொள்வோம்.

சந்நியாசி:—சரி! அவ்விதமே புகல்கின்றேன். கவனிப்பீர் இந்த விருக்ஷத்தின் மேற்றிசையை நாடிச்செல்வீராகில் அங்ஙனமிருந்து ஓர் கிளைவழிதோன்றும் அம்மார்க்கமே சென்றால் நந்தவனம் தோன்றும் அதுதான் இந்நகரத் தரசனுடைய நந்தவனம் அங்கு சென்று உலாவிக்கொண்டிருந்தாலும் அந்திப்பொழுதில் இராஜதரிசனங் காணும் அச்சமயம் நீ உன்னுடைய வல்லமையைத்தெரிவித்தால், அவ்வரசன் உனக்கு ஓர், கவுரவமான உத்தியோகங் கொடுத்து அரண்மனையிற்றானே இருக்கும் படி செய்வார்.

என, புகன்று சந்நியாசி போய்விட்டவுடனே ஞானேந்திரியும் கமலநாயகியும் இனி விட்டது சனியனென்று மனமகிழ்ந்தவராய் ஆரண்யத்தைவிடுத்து அருகிலிருக்கும் மணிபுரத்தின் நந்தவனத்தை நாடிச் செல்வதாயினர். அச்சமயம் கானகத்தில் இத்தனைநாளாய் நடந்து வந்த இளைப்பினால் அங்கிருக்கும் வசந்தமண்டபத்தி

வந்துட்கார்ந்து தமது காலவித்தியாசத்தினை யூற்ற ஆச்சரிய கஷ்டமனைத்தும் யோசித்துக்கொண்டிருந்தார்கள்

இங்ஙனம், இவர்கள் நிலை இவ்விதமா யிருக்கையில் அந்நகரத்தரசன் தனது வழக்கத்தைப்போலவே அந்திப்பொழுதானவுடனே தனது மந்திரியுடன் நந்தவனத்தில் வந்திருந்தனன். அச்சமயம் ஞானேந்திரியும், கமலநாயகியும் வசந்தமண்டபத்தை விட்டெழுந்து அருகிலிருக்கும் தாமரைப்பொய்கையி லிறங்கி ஸ்நானபான நேமநிஷ்டையனைத்தும் புரிந்துகொண்டு அங்கிருக்கும் விருக்ஷங்களில் காய்த்துக் கனிந்திருக்கும் பழதினுசுகளில் சிலவற்றைப் பறித்துப் புசித்து நன்னீரருந்தி இருவரும் மனோல்லாசமாய் அந்நந்தவனத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வருகையில் கமலநாயகி திகைத்து அம்மணி ஈதென்ன பூலோகமோ தெய்வலோகமோ வென்று அங்கிருக்கும் அலங்காரங்களையெல்லாம் வர்ணிப்பதாயினள்.

கமலநாயகி:—அக்கா! இந் நந்தவனத்தில் விதவிதமான நீராழி மண்டபங்களும் அதைச்சுற்றிலும் பலவித புஷ்பச் செடிகளும் விளங்கும் வைபவமும், அந்த புட்பங்களின் தேனை யருந்தி மனக் களிப்புறும் வண்டுகளின் ரீங்கார சப்தமும் எவ்வித வேடிக்கையா யிருக்கின்றன. அன்றியும், இங்கு அடர்ந்து செழிப்புற்றிருக்கும், விருக்ஷங்களின் கிளைகளில் யான் இத்தனைநாளாய்க் கூறாத பக்ஷி ஜாதிகளும் நிறைந்து, அவைகள் பாடும் கீதங்களைக் கேட்கில் வானுலகத்தின் கந்தர்வ ஸ்திரீகளும் மயங்கி விழுந் தன்மையா யிருக்கின்றனவே இந்தவன முழுதும் மலர்களின் மண்மே மிகுத்து கமகமவென பரிமள வாசனை வீசுவதினால் என துளம் இதைவிட்டு அப்புறஞ் செல்வதற் கிசையவில்லையே. இத்தகை சிங்காரமமைந்த நந்தவனத்தைச் சொந்தமாய் வகித்தவர் பகவானுக்கே யிருக்குமன்றி, மனிதர்கட்கு இது சுவாதீனமாகாது

என்று கமலநாயகியானவள் ஞானேந்திரியுடனே சொல்லிக்கொண்டே அந்நந்தவனத்தைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வருகையில் அந்த மணிபுரத்தரசனாகிய வீரப்ரகாசனானவன் தனது மந்திரியுடனே அந்நந்தவனத்தைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வருகையில் அங்குலாவிக்கொண்டிருக்கும் கமலநாயகியையும் ஞானேந்திரியையும் பார்த்து அப்பா! நீயார்? யாதுகாரணமாய் இங்கு வருகலா

யிலே இந்தப்பெண் யார்? உங்களைப்பார்த்தால் இராஜவம்சம்போ லிருக்கின்றதே யென்று விசாரிக்கையில் ஞானேந்திரியானவள் சற் றுயோசித்து இவனிடம் உண்மையைப் புகல்வதினால் பிரயோசன மென்னவென மதித்து மர்மமாகவே தனது சமர்த்தை வெகு விம ரிசையாய்ப் புகல்வதாயினள்.

ஞானேந்திரி:—ஐயா! யான் சிந்துதேசத் தரசனாகிய சித்திரவீரிய மஹாராஜனுடைய புத்திரன், யான் சிறுவயதிலிருந்தே பல தேசங்களுந் திரிந்து விதவிதமான காக்ஷியனைத்துங் கண்ணுற் றகமகிழ்ந்துக்கொண்டு வருகையில், ஓர்நாள் வனதேவதை என்முன் பிரசன்னமாகி இந்த தனுஸ்சையும் அஸ்திரங்களையும் தந்தனள்; யான் இதனை வாங்கிக்கொண்டு பற்பல தீவுகளி லும் சென்று, ஆங்காங்கு தோன்றும் துஷ்டமிருகங்களையெல் லாங் கொன்றுவிட்டு வருகையில், ஓர் மாயாராக்ஷதன் இந்தப் பெண்ணை தனது குகையில் வைத்துக் கொண்டிருந்தனன். அவனையும் கொன்றுவிட்டு இந்தப்பெண்ணையும் அழைத்துக் கொண்டு வருகையில் சில துஷ்டர்கள் என்மீது சண்டை செய்யவந்து யான் தொடுக்கும் அஸ்திரங்களினால் மரணம டைந்தனர். இத்தேசத்தின் அருகாமையிலுள்ள மலைச்சாரலில் வசித்திருந்த திருடர்கள் என்னைக் கொன்றுவிட்டு இந்தப் பெண்ணை யழைத்துக்கொண்டு போவோமெனும் துர்க்குணத் தினால் யென்னை பயங்கரப்படுத்தியது மல்லாமல் கொல்வதற் குமிசைந்தனர். அவர்களனைவரையும் இந்த அஸ்திரங்களினால் கொன்றுவிட்டு வருகலாயினன்.

என, நவின்றதை யனைத்தும் கவனித்த மந்திரி யோசித்து அரசே! இச்சிறுவன் தேவாஸ்திரத்தின் மகத்வத்தினால் இவ்வளவு வீரபராக்ரம மமைந்தவனாய் ஜெயம்பெற்று வருகின்றபடியால் இவ னை நமதுசேனாதிபதியாக நியமித்துக்கொண்டால் மிகவும் மேன்மை யா யிருக்குமென்றனன். அரசனும் அவ்விதமே நன்கெனச் சம்ம தித்து ஆண்பிள்ளைவேஷமா யிருக்கும் ஞானேந்திரியைப் பார்த்து, அப்பா! இராஜபுத்திரா நீ நமது அரண்மனையில் வந்து சேனாதிபதி உத்தியோகத்தி லமர்ந்து சுகானந்தமா யிருப்பாய் வருவாயென் றனன். ஞானேந்திரியும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து கமல நாயகியை அழைத்துக்கொண்டு, அந்நகரத் தரசனுடனே அரண் மனைக்குச் சென்றனள்.

ACT 3. Scene I.

தேசம் — மணிபுரம்.

கதா நாயகர்.

| | |
|---|---|
| அரசன் | வீரப்பிரகாசன். |
| மந்திரி | மதிப்பிரகாசன். |
| இராஜகுமாரத்தி | அமிர்தவசனி. |

ஞானேந்திரி, கமலநாயகி, வீணுகானன், கிழவி.

அப்பால் வீரப்பிரகாசன், தனது மந்திரியுடனே ஞானேந்திரியையும், கமலநாயகியையும் தன்னுடனே அழைத்துக்கொண்டு அரண்மனையில் வந்தபிறகு அன்றிரவு யாவரும் அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜனம் புசித்து அவரவர்க் கிசைந்த மலரணை மஞ்சத்தில் சயனித்து நித்திரை செய்து விழித் தெழுந்து அருணோதயமானபிறகு யாவரும் ஸ்நானபான நேமநிஷ்டை முடித்துக்கொண்டு அரண்மனையில் வந்தமர்ந்த பிறகு அரசனாகிய வீரப்பிரகாசன் தனது மந்திரியினால் ஞானேந்திரியை வரவழைத்து சேனாதிபதி உத்தியோகங் கொடுத்து நூறு வராகன் மாதசம்பளமாய் நியமித்து ஒருமாத சம்பளம் முன்னதாய்க் கொடுத்து அனுப்பினான். அந்த திரவியத்தை கைகொண்ட ஞானேந்திரி தனது வீட்டுக்குச் சென்று கமலநாயகியுடனே சுகமா யிருந்தனள்.

இங்ஙனம் இவர்கள் நிலை இவ்விதமா யிருக்கையில் பிணந்தின்னும் மிருகங்களைப்போன்ற காபிரிகளிடமிருந்து தப்பித்துகொண்டு ஓடிப்போன வீணுகானனென்பவன் வனமெங்கும் அலைந்து திரிந்து மணிபுரத்தில் வந்து, அந்நகரத்தின் அருகிலுள்ள ஓர் சிறு கிராமத்திற் சென்று அங்ஙனம் மிகவும் ஏழ்மையாய் அன்னவஸ்திரத்திற்கும் பஞ்சமுற்று தினந்தோறும் கானிற் சென்று பழவர்க்கங்களைப் பறித்துக் கொண்டுபோய் மணிபுரத்தில் விற்கிரயஞ் செய்து அதனாற் கிடைக்கும் காசுக்களை வைத்துக்கொண்டு ஜீவித்திருக்கையில் ஓர்நாள் கிழவியைக் கண்டு விசாரிப்பதாயினன்.

வீணுகானன்:—அம்மா! எனக்கு மெத்த பசியா யிருக்கின்றது, இன்றையதினம் எனக்கு ஒருவேளை அன்னங் கொடுக்கவேணும்.

கிழவி:—(சிரித்து) அப்பா! யான் அந்நியருக்கு அன்னங்கொடுக்க சக்தி யிருந்தால், யான் இவ்வித வறுமையாய்க் கஷ்டப்படு வேனே? யாங்கள் முன்பு வெகு க்ஷேமமாக யிருக்கும்போது எத்தனையோ ஏழைகளுக்கெல்லாம் தான தரும பரோபகாரம் புரிந்து அன்னதானம் வஸ்திரதானஞ் செய்துகொண் டிருப் போம் என் மணாளன் கப்பல் வர்த்தகர் அவர் ஆழிசஞ்சாரி யாய்ச் செல்கையில் கப்பல் திசைதப்பிப் போய்விட்டது. அவ ருடன் சென்றிருந்த வியாபாரிகளெல்லாம் வந்துவிட்டார்கள். அவர் வீட்டைவிட்டு போகும்போது யான் மூன்றுமாத கர்ப் பமா யிருந்தேன். அதன்பிறகு ஓர் பெண்குழந்தையைப் பெற் றேன். அச்சமயம் எங்களுடைய பங்காளிகள் எனது மணாளன் இனி வரமாட்டாரென நினைத்து ஆஸ்தி பாஸ்திகளைத்தும் அபகரித்துக்கொண்டு என்னை துரத்திவிட்டனர் யான் மன மெலிந்து நிற்க நிழலில்லாமலும், அண்டிப் பிழைக்க ஆதாரமில் லாமலும் ஆரண்யத்தில் சிதறி கிடக்கும் கனிவர்க்கங்களைப் பறித்துக்கொண்டு மணிபுரத்தில் விற்கிரயம் செய்து அதனால் கிடைக்கப்பட்ட காசுகளை வைத்துக்கொண்டு ஜீவித்திருக்கின் றோம், இப்போது அந்தப்பெண்பிள்ளையும் பருவதிசையடைந்து எழுநாளாகிறது, என் மணாளனிருந்தால் எவ்வளவோ பெரு மையா யிருப்போம், இப்போது எங்களுக்கே அன்னவஸ்திரம் பஞ்சமா யிருக்கிறதே யாங்க ளெவ்விதமாய் அன்னதானஞ் செய்வோம்.

வீணாகானன்:—அம்மா! நீங்கள் என்னவம்சத்தினர்.

கிழவி:—ஐயா! யாங்கள் பூவைசியர்.

என, நவின்றதை யுணர்ந்த வீணாகானன் சற்று யோசித்து நாமும் பூவைசியரென்றே சொல்லிவிட்டு இந்த திரவியங்களையும் இவளிடம் கொடுத்தால் நம்மை மருமகனாய் மதித்து அன்னவஸ் திரங்கொடுத்து ஆதரிப்பாள். அன்றியும் நாமோ ஆண்பிள்ளைதானே அன்றியும் க்ஷத்திரியராயிருக்கின்றோம். அந்தப்பெண் ரூபவதியா யிருந்தால் நாமே மணஞ்செய்து கொள்வோமென மதித்து கிழவி க்குச் சொல்லுதாயினன்.

வீணாகானன்:—அம்மா! யானும் பூவைசியப்பிள்ளைதான். யான்கப் பல் வியாபாரஞ்செய்துக்கொண்டு வருகையில் கப்பல் திசை

மாறிப் போனதினால், யான் திரவியங்களையெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு ஜலத்தில் குளித்து நீந்திக்கொண்டு வந்து கரைசேர்ந்து வனவாசியாய்வருகின்றேன். ஆகையால் இவை யனைத்தும் நீ வைத்துக்கொண்டு எனக்கு அன்ன வஸ்திரங் கொடுத்து ஆதரிக்கவேண்டும்.

என, வீணகானன் உண்மையை மறைத்து மர்மமாய்ச் சொல்லி தன்னிடமிருந்த ஆபரணாதிகளின் மூட்டையைக் கொடுத்தவுடனே வைசியக் கிழவி பேராசை யுடையவளாய் மனமகிழ்ந்து, இனி நமக்கு நற்காலம் வந்துவிட்டது வென்றெண்ணி தனது வீட்டிற் கழைத்துச்சென்று, அந்த கிராமத்திலிருக்கும் ஓர் நாவிதன் கையில் ஒருபணங் கொடுத்து வீணகானனுக்கு க்ஷவரஞ் செய்துவைத்து ஸ்நானஞ் செய்துக் கொள்ளும்படி செய்து, அன்றைய தினத்தில் அறுசுவை பதார்த்தத்தோடும் பலகார வகைகளோடும் தானும் தன்மகளும் வீணகானனுமாய்ப் புசித்து சந்தோஷமாயிருக்கையில் வீணகானன் அறைவீட்டிலிருக்கும் பெண்ணை எட்டியெட்டிப்பார்ப்பதும், அவளும் அதிகரூப சுந்தரமா யிருப்பதினால் மனமயங்கி சோர்ந்திருப்பதும், அவளும் இவனைக்கண்டு சிரிப்பதும் நாணத்துடன் பூமியைப் பார்ப்பதும், கடைக்கண் பார்வையை வீணகானன் மீது செலுத்துவதுமா யிருந்தனள். இவர்களின் மனக்குறிப்பை யுணர்ந்த வைசியக் கிழவி மனமகிழ்ந்தவளாய் வீணகானனைப் பார்த்து அப்பா! மருமகனே நீதான் இனிமேல் நமது வீட்டுக்குத் தலைவனானபடியாலும், நீயும் எங்கள் பூவைசிய வம்சத்தினனாகையாலும் இந்தப்பெண்ணை நீயே கலியாணஞ் செய்துக்கொள்ள வேணுமென்றாள். அவனும் நன்றெனச் சம்மதித்துக் கொண்டான்.

அப்பால், வைசியக்கிழவி நமது கஷ்டகாலமும் மனவிசாரமும் நீங்கிவிட்டது வென்று மனமகிழ்ந்து வீணகானன் கொண்டுவந்த நவரத்ன கசிதமாய்த் துலங்கும் ஆபரணாதிகளை யெல்லாம் ஒவ்வொன்றாய் யெடுத்துப்பார்த்து, இவையனைத்தும் விற்கிரயஞ் செய்தால் இரத்தினம் விராகனுக்குமேல் அதிகப்படுமேயென்று மனமகிழ்ந்தவளாய், அவைகளில் சில ஆபரணங்களையெடுத்து தனது குமாரத்திக்கு அணிந்து பார்க்கையில் அந்தப்பெண்ணும் அதிக ரூபசவுந்தரியமுடையவளா யிருப்பதினாலும் அந்த ஆபரணங்களை யெல்லாம் அணிந்திருப்பதினாலும் வானலோகத்தின் கந்தர்வஸ்திரீயைப்போல் அழகானந்த முகவசீகரமா யிருப்பதினால் வீணகானனும் மனமய

ங்கி விட்டனன். அப்பால் அந்த வைசியக்கிழவி இருவரையும் மதிக்கச்செய்த பிறகு விஞ்ஞானனும், வைசியப்பெண்ணும் கா வமணஞ்செய்துக்கொண்டு சுகமாயிருந்தார்கள். இவர்களிவ் மாயிருக்கையில் முன்னம் கப்பல் யாத்திரையாய்ச் சென்றிரு வைசியன் தனது [illegible]ப்பலுக்கு யாதொரு சேதமுமின்றி பலவூரு லும் திரிந்து வெகு பொருள் சேகரித்துக்கொண்டு தனது தே சில் வந்து தான் முன்னிருந்த வீட்டிற்சென்று பார்க்கையில் அ தனது மனையாளில்லாமையால் அக்கம்பக்கத்தார் நிகழ்ந்தவை த்தும் விபரமாய்ப்புகல மிகவும் பரிதாபமடைந்து, தனது சுவா மாகிய ஆஸ்தி பூஸ்திதி மனைத்துங் கைக்கொண்டு தனது பங்க களை நோக்கி, நீங்கள் இவ்விதஞ்செய்யலாமாவென அவைகளை கள் ஜாக்கிரதையாக காப்பாற்றிவைத்திருந்தோம் இப்போது னிடத்தில் ஒப்பிவைத்து விட்டோமென்று சொல்லிவிட்டார்கள்

அப்பால், ஓர்நாள் வைசியக்கிழவி தனது மருமகனிடத் உத்திரவுபெற்று மணிபுரத்தின் கடைவீதியில் வந்து சாமான் கிக்கொண் டிருக்கையில் தனது மைத்துனனைப் பார்த்துவிட்டு கா தேவரீர் இத்தனை நாளெங்கு சென்றிருந்தீரென்றழுதனள். வை னும் தனது மனைவியின் மனதைத்தேற்றி நடந்த சங்கதியனைத் விசாரிக்கையில் அவள் ஆதியோடந்தமாய்ப் புகன்று தானே ர்த்தியாயிருந்து பெண்குழந்தையை ஈன்று அந்தப்பெண்ணை ஞானனுக்கு கலியாணஞ்செய்து வைத்தவரையிலும் விபரமா ன்றி அவனுடன் அழைத்துக்கொண்டு வீட்டிற்குப்போயினள். சியன் தனது மகளையும், மருமகனையும் பார்த்து சந்தோஷ ந்து அவர்களிருவரையும் அழைத்துக்கொண்டு தனது பழை சஸ்தானத்திற்குப்போய் அங்ஙனம் இவர்களனைவரும் சுகமா தார்கள். அப்பால் ஒன்றாவது நாள் வைசியர் கூட்டங்கூடி வைசியனை வரவழைத்து உமது புத்திரிக்கு கலியாணமான சாரமெங்களுக்கு ஏன் தெரிவிக்கவில்லை? உமது மருமகன் எ ஜாதியிற் சேர்ந்தவனென்று விசாரிக்கவும் வைசியன் சற்று ஆ த்து வெகுவிநயமாயுரைத்தால் [illegible] ண்டு அவ்வைசியரை நோக்கி, எனது வம்சத்தவர்களே நமக்கு நியாயம் என்னுடைய பாட்டன் [illegible] எனக்கு சகோதரி புத்திரனாகிய வேணும் அவனுடைய தகப்பன் ஓர் தீவில் அ னாய் வாழ்த்தின் வியாபாரஞ்செய்துக் கொண்டிருந்தார் யா

அங்குசென்றிருந்து இவனைமாத்திரம் அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன். யென்றும் யான் வெளிதேசம்போ யிருக்கும்போது எனது பங்காளிகள் எனது ஆஸ்தி பூஸ்திகளையும் அபகரித்துக் கொண்டு என் மனையாளையும் துரத்தி விட்டார்களென்றும் கோபத்தினால் யாதொருவரை கலியாணத்திற்கு வரவழைக்கிடாமல் நமக்கு யாதொருவரும் துணையில்லையென்று மதித்து என்புத்திரிகை என் சகோதரியின் புத்திரனுக்கு கலியாணஞ் செய்துவிட்டேன். இப்போது எனக்கு ஆஸ்தி பூஸ்தியும், எனக்குக்கிடைத்தபடியால் என்மனையாளையும் எனது புத்திரியையும் மருமகனையும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன். என்று அவர்களிடம் நல்ல வார்த்தையாடிக் கொண்டிருந்து அன்றையதினத்தில் யாவருக்கும் நல்ல விருந்தமைத்து சந்தோஷப்படுத்தி இராஜகுமாரனாகிய வீணாகானனையும் வைசியரினத்துடனே சேர்த்துவிட்டு அவனை வீட்டுக்குக் காவலாய் நியமித்து விட்டு, தான் பழைய படியே வியாபார விஷயமாய் செல்வதற்கிசைந்து தனது பங்காளிகளுடனே ஆலோசித்துக் கொண்டிருக்கையில் வீணாகானன் தனது வித்யாசமர்த்தைத் தனது மாமனுருக்குக் காண்பிக்கவேணுமெனக் கருதி, ஓர் நாள் பகலில் யாவரும் அன்னம்புசித்து சந்தோஷமாய் ஓர் ஏகாந்த ஸ்தானத்தில் உட்கார்ந்திருக்கும்போது தனது கரத்திலிருக்கும் வீணையைமீட்டி நவரசலங்காரமாய்ப் பலவிதராகத்திலும் பாடினான்

இவனுடைய வித்யா சமர்த்தையும் வீணையின் இசையையும் கவனித்த வைசியனும் அவன் மனைவியும் ஆனந்த சாகரத்தில்மூழ்கியவர்களாய் மனமகிழ்ந்தார்கள். வியாபாரத்திற்குப் போவதற்காக யோசித்திருந்த வைசியன் இனிநாம் ஒருமாதஞ் சென்றபிறகுபோகலாமென தீர்மானித்து தினந்தோறும் தனது மருமகனாகிய வீணாகானனிடத்தில் சங்கீதசாஹித்ய வீணைகச்சேரியைக்கேட்டு மனமகிழ்ந்திருந்தனன். இப்படி யிருக்க ஓர்நாள் அந்த வைசியன் தனது இனத்தவர்களை யெல்லாம் வரவழைத்து அவர்களுக்கு நல்விருந்தளித்து அந்திப்பொழுதானவுடனே தனது மருமகனை வீணாகானஞ் செய்யும்படி உத்திரவுசெய்து விட்டான் மாமனார் வார்த்தையைக் கவனித்த வீணாகானன் மனமகிழ்ந்து கரத்தில் வீணையை ஏந்தி சங்கீதசாஹித்ய இசைவழுவுறாமற் பற்பலவிதராகத்தினாலும் பாடிக் கொண்டிருந்தனன். அங்ஙனம் வேடிக்கை பார்த்துக்கொண்டிரு

ந்த வைசியரனைவரும் மனமகிழ்ந்தவராய் அடடா! நாம் இத்தனை நாளாய் எத்தனையோ வீணை கச்சேரியைப் பார்த்திருக்கின்றோம். இவனைப்போல யாதொருவரும் பாடியதில்லையே! இவனென்ன பனுவலிற்சிறந்த யாழ்வல்லோனாகிய நாரதருடைய அருள்பெற்றவனோவென்று ஆனந்த பரவசமடைந்து, அன்றைய இரவு முழுதும் வீணை கச்சேரியைக்கேட்டு சந்தோஷமா யிருந்தார்கள். பொழுது விடிந்தவுடனே வீணாகானனுடைய மாமனாராகிய வைசியர் தனது மருமகனை இன்றையதினம் இராஜசமஸ்தானத்தில் அழைத்துச்சென்று வீணாகானஞ் செய்வித்தால் வெகுமதி கிடைக்குமென்றெண்ணியவனாய் தன்கருத்தை வீணாகானனுக்குத் தெரிவித்தனன். அவனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, தனது வீணையைக் கரத்திலேந்திக்கொண்டு அந்நகரத்திலிருக்கும் சிலபாடகர்களையும் துணையாய் வரவழைக்க அவர்களும், தாளம், மத்தளம், கின்னரி, பிடல், சாரங்கி, தம்பூரு, வீணைமுதலாகிய வாத்தியக்கருவிகளை யெடுத்துக்கொண்டு அரண்மனையைநாடிப் புறப்பட்டார்கள்.

இங்ஙனம் இவ்விதமா யிருக்கையில், அன்றையதினம் அந்நகரத்தரசனாகிய வீரப்பிரகாசனுடைய குமாரத்தியாகிய அமிர்தவசனி தனது தோழிப்பெண்களுடனே நந்தவனத்திற்குச்சென்று சற்று நேரம் உலாவப் பார்த்து மலர்களைப் பறித்துக்கொண்டு வருவோமென்று ஸ்நானபானஞ்செய்து நவரத்தின கசிதமாய்த் துலங்கும் ஆடை ஆபரணங்களாற் சிங்காரித்துக்கொண்டு தனது பாங்கியருக்குச் சொல்வதாயினள்.

அமிர்தவசனி:—பெண்காள்! யான் நந்தவனத்திற்சென்று வெகுநாளாகிறது. இன்றையதினம் எனது தந்தை அந்நந்தவனத்திற்கு வருவதற்குள் நாம் சென்று பார்த்துவிட்டு வருவோம். அதிசீக்கிரமாய் வருவீர்கள்.

என, புகன்றதையுணர்ந்த தோழிப்பெண்கள் இராஜகுமாரத்தியுடனே நந்தவனத்திற்குச் செல்வதற்கு பிரயாணமாகையில், ஓர் மாயசந்நியாசி பெண்கள் வருவதைக்கண்டு அவர்களுடனேயிருந்த இராஜ குமாரத்தியாகிய அமிர்த வசனியை யெடுத்துத் தனது தோள்மீது உட்காரவைத்துக்கொண்டு கானக மார்க்கமாய் ஓடிவிட்டனன். அருகிலிருந்த பெண்கள் குய்யோ முறையோவென்று கூச்சலிட்டழுதனரேயன்றி, அவனைப் பின்தொடர்ந்து வழி

மறிக்கவுமில்லை. அச்சமயம் அங்கரத்தினர் அவர்களை விசாரித்து மனதைரியம் புகன்று அரண்மனைக் கழைத்துக்கொண்டு வந்தனர். அச்சமயம் அரசன் அவர்களை யாதென்று விசாரித்தபின் அவர்கள் விபரமாய்ப் புகல்வதாயினர்.

தோழிப்பெண்கள்:—அரசே! இன்றைய்தினம் இராஜகுமாரத்தி நந்தவனத்திற்குப் போகவேணுமென்று எங்களை அழைத்துக்கொண்டுபோகையில் ஓர் சந்நியாசியானவன் திடீரென்றோடிவந்து இராஜகுமாரத்தியை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

என, புகன்றதைக் கேள்வியுற்ற அரசன் திடுக்கிட்டு, அருகிலிருந்த மந்திரியைநோக்கி அறிவிற்சிறந்த அமைச்சா! நீர் ஜோஸியத்தில் சிறந்த சமர்த்துடையவராகையினால் உடனே ஆரூடத்தைப் பார்த்துரையுமென்று சொன்னதைக் கேள்வியுற்ற மந்திரியானவன் தனது வசமிருக்கும் ஆரூடலக்கின ராசிபலன்களையும் தெளிவாயாராய்ந்து பார்த்து அரசனுக்குச் சொல்வதாயினன்.

மதிப்பிரகாசன்:—அரசே! யான் முன்னமே உமது குமாரத்தியின் ஜாதக இலக்ஷணங்களைத் தெரிவித்திருக்கின்றேன். அஃதெவ்விதமெனில் நம் புத்திரிக்கு பன்னிரண்டாவது வயதில் ஓர் ஆபத்தெய்தி நீங்குமென்று தெரிவித்திருந்தேனல்லவா? அவற்றிற்கிணங்க விதமாய், இச்சமயம் உமதுகுமாரத்திக்கு பனிரண்டுவயது ஆனபடியால் ஓர் சந்நியாசியானவன் எடுத்துக் கொண்டுபோய் விட்டான்.

வீரப்பிரகாசன்:—மந்திரி! தாங்களுரைப்பது ஆச்சரியமா யிருக்கின்றதே சகலமும் துறந்த சந்நியாசிகள் அஞ்ஞானமார்க்கத்திற்கு ஆதாரவாயிருக்கும் பெண்களை விரும்புவார்களோ?

மதிப்பிரகாசன்:—அப்படியல்ல! அவனோர் வேள்வி செய்வதற்காக மணமில்லாத பெண்களை யெல்லாம் யெடுத்துக் கொண்டு போய் யாகசாலையில் வைத்துக்கொண்டிருக்கின்றான். அவ்விதமாய் நூறுபெண்கள் சேர்ந்தவுடனே யாகாரம்பஞ்செய்து அவர்களனைவரையும் யாகாக்கினியால் தகித்து மந்திரோச்சாடனஞ்செய்து யாகத்தை பூர்த்திசெய்வான். அச்சமயம் உலகிலிருக்கும் எப்படிப்பட்ட வீராதி வீரர்களும் அவனுக்கடங்கி

யிருப்பார்கள். மூவுலகத்திற்கும் அரசனா யிருப்பான். அவ்விரதத்திற்கு தான் ஸ்திரீயாகமென்று பெயர் இப்படியாய் அவன் அந்தயாகத்தை பூர்த்திசெய்வதற்காக எழுபது இராஜகுமாரத்திகளைக் கொண்டுவந்து வைத்திருக்கின்றான். இன்னும் முப்பது பெண்கள் சேர்ந்தால், யாகாரம்பம் செய்துவிடுவான்.

வீரப்பிரகாசன்:—சரி! அவ்விதமானால்! எவர்களாயினும் அவனைக் கொன்று அந்தப்பெண்களை மீட்டுக்கொண்டு வரமாட்டார்களோ?

மதிப்பிரகாசன்:—அரசே! எப்படிப்பட்டவரா யிருந்தாலும் அவனுடைய வாசஸ்தானத்திற்குபோய் அவனுடனெதிர்த்து சண்டைசெய்தால் அவனுடையமாந்திரீகபலத்தினால் கல்லுருவாய்ச்சமைந்திருக்கின்றான். அதனைக்கண்டவர்கள் அங்குசென்றாலும் அந்த விபரீதத்தைக் கண்டவுடனே திரும்பிவிடுகின்றார்கள்.

வீரப்பிரகாசன்:—சரி! அவ்விதமானால் எனது புத்திரியை எவ்விதமாய் மீட்டுவருவது?

மதிப்பிரகாசன்:—அரசே! இந்த ஞானேந்திரினால் அந்த சந்யாசியிடமிருக்கும் பெண்களெல்லாம் மீண்டு வருவார்கள். இவரன்றி மற்றவரால் மீட்கமுடியாது.

என, புகன்றதை வினவிய அரசனும் ஞானேந்திரியைபார்த்து சொல்வதற்கும் நாவெழாமல் துக்கித்தழுதுக் கொண்டிருந்தனன். அச்சமயம் ஞானேந்திரியானவள் அரசன் மனதைத்தேற்றி, இராஜேஸ்வரா தாங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். யான் போய் அந்த சந்நியாசியை வென்று உமது குமாரத்தியை மீட்டுக் கொண்டு வருகின்றேன். யான் வருகிறவரையிலும் இந்த கமலநாயகியென்னும் பெண்ணை நமது புத்திரியைப்போல மதித்து அன்னவஸ்திரங்கொடுத்து ஆதரித்து இரக்ஷிக்கவேண்டுமெனப் புகன்றனள். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அரசனும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்தனன் அருகிலிருந்த மஹாராணியானவள் மனமகிழ்ந்து, அப்பா! நீதான் எங்கள் மருமகன் இந்தப்பெண் எமது குமாரத்தியாகும் இவ்வார்த்தையை உண்மையென்றே மதித்துக்

சொல்வீர். தாங்கள் எவ்விதத்திலேனும் அமிர்தவசனியை மீட்டுக்கொண்டு வருவீராகில் அவளையும் உமக்கு மணஞ்செய்துவைத்து உங்களை எங்கள் இரண்டு கண்களைப்போல் மதித்துக் காப்பாற்றுவோமெனப் புகன்றதை யுணர்ந்த ஞானேந்திரியும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்து, கரத்திற் றனுசேந்தி கானகமார்க்கமாய்வந்து வழியிலெதிருற்ற தாமரைப்பொய்கையிலிறங்கி ஸ்நானபானம் நேமநிஷ்டை முடித்துக்கொண்டு ஓர் சந்தனவிருக்ஷத்தின் கீழிருந்து வனதேவதையைக் குறித்துத் தபஞ்செய்தனள். அச்சமயம் வனதேவதை பிரசன்னமாகி யாதுகாரணமாய் வரவழைத்தாயென்று விசாரிக்க, ஞானேந்திரி தான் நாடிவந்த காரியத்தைசொல்லி அந்த சந்நியாசியை வென்று அவனிடமிருக்கும் பெண்களை அழைத்துக்கொண்டு போவதற்கு அனுக்கிரகஞ் செய்வீரென்று வேண்டினள். வனதேவதை அவ்விதமேயாகுகவெனவரமளித்து, அம்மா ஞானேந்திரி, அந்த சந்நியாசியை சண்டையினால் வெல்வதற்கியலாது, இந்தமந்திரத்தை உச்சரித்தாயானால் சந்நியாசிரூபமாய் மாறிவிடுவாய் அந்தவேஷத்துடனே சென்று அவனிடத்தில் ஞானாகிய வேதாந்த விஷயங்களைபோதித்து அவனிடமிருக்கும் ஸ்திரீகளையெல்லாம் விடுதலை செய்துவிடுவாய் என்று அநுக்கிரகஞ்செய்து மறைந்துபோயினள். ஞானேந்திரியும் மனமிகமகிழ்ந்து, வனதேவதையின் அனுக்கிரகத்தினால் அங்கிருக்கும் தாமரைப பொய்கையில் ஸ்நானபான நேமநிஷ்டை முடித்துக்கொண்டு அருகிலிருந்த பூங்காவிற்சென்று வனதேவதை உபதேசித்த மந்திரத்தை உச்சரித்தனள். உடனே ஞானேந்திரிக்கு ஜடைமுடி துலங்கி, கையில் ஜபமாலையும் கமண்டலமும், முதுகிற் புலித்தோலும் மற்றுமுண்டான சந்நியாசி உடைகள் யாவும் தோற்றக்கண்டு மனோல்லாசமடைந்தவளாய் கானகமார்க்கமாய்ச் செல்வதாயினள்,

இங்ஙனம் இவ்விதமாயிருக்க வீணாகானன் வைசியர் கூட்டத்துடனே இராஜ சமஸ்தானத்தில் வருகையில் அன்றையதினமே இராஜகுமாரத்தியையும் சந்நியாசி யெடுத்துக்கொண்டு போய்விட்டான். அவளைத்தேடிக்கொண்டு ஞானேந்திரியும் காட்டிற்குப் போய்விட்டபடியால் இராஜசமஸ்தானத்தில் யாவரும் விசனமுற்றவர்களாயிருந்தனர். அப்போது வீணாகானன் அன்றையதினத்தில் அவசகுனம் நேரிட்டாற்போல் அரண்மனையில் அழுகுரலாயிருக்கவே வீட்டிற்குத் திரும்பிவிட்டான். அப்பால் மூன்றுநாள் பொறு

த்து நாலாவதுநாள் அரசனுடைய மனவிசாரத்தைப்போக்குவதற்காக பலவிதவேடிக்கை யனைத்தும் மந்திரியினால் நடந்தேறியது அச்சமயம் வீணாகானனும் இதுதான் சமயமென்று தனது கூட்டத்தாருடனே வீணையைக் கரத்திலேந்திக்கொண்டு அரண்மனையிற் சென்று மந்திரியைப் பணிந்து சொல்வதாயினன்.

வீணாகானன்:—ஐயா! யான் வீணாகானத்திற் சிறந்த கீர்த்திவந்தனென்று உலக முழுமையும் நற்பெயர்பெற் றிருக்கின்றேன். ஆகையால் இவ்விடத்திலும் எனது சமர்த்தை விவரித்து வைப்பதற்கு மனந்துணிந்தேன். இனி தாங்கள் உத்திரவுசெய்தால் வீணையைமீட்டி பலவிதராகத்திலும் பாடுவேன்.

மதிப்பிரகாசன்:—சரி! அவ்விதமே சற்றுநேரம் வீணைப்பிரசங்கஞ் செய்வீர்.

என, புகன்றதையுணர்ந்த வீணாகானன் மனமகிழ்ந்து தனது கரத்திலிருக்கும் வீணையைமீட்டி மலஹரிராகத்தில் உலக இன்பத்தைக்குறித்து விசேஷமாய்ப்பாட ஆரம்பித்தனன். அச்சமயம் அரண்மனையி லிருப்பவர்களின் மனமானது பிர்மானந்தத்தில் மூழ்கி விட்டது. இவ்வித விநோத வீணைகச்சேரியைப்போல் இதுவரையிலும் அந்நகரத்தில் யாதொருவரும் கேட்டிராததினால் யாவரும் மனோல்லாச மெய்தினர்கள். மந்திரி அன்றையதினம் வீணாகானனுக்கு வேண்டிய திரவியங்களை வெகுமதியாகக் கொடுத்து அவனை விசாரிப்பதாயினன்.

மதிப்பிரகாசன்:—ஐயா! தாங்கள் யார்? எத்தேசத்தினர்? தமது பெயரென்ன? தாங்கள் இச்சமயம் எங்குவசிக்கின்றீர்? இவ்வையனைத்தும் சபையோர்முன் விபரமாய்ப்புகல்வீர்.

வீணாகானன்:—ப்ரபு! யானிருப்பது பலதேசம்? என்பெயர் வீணாகானன்? இச்சமயம் யான் வைசியவீதியில் வசிக்கின்றேன்.

என, புகன்ற மந்திரியினால் கொடுத்த வெகுமதியனைத்தும் பெற்றுக்கொண்டு தன்வீட்டில் வந்து தனது மனையாளாகிய வைசியப்பெண்ணிடத்தில் கொடுத்து, பெண்ணே! எனது சமர்த்தைக் கவனித்தனையா? உல்காதிபனும் எனக்கு நிகரில்லையென்றெண்ணுவாயென்று தனது சமர்த்தைப்புகன்று அவளுடன் சரசசல்லாபமாயிருந்தனன். வைசியர்களும் வீணாகானன்மீது வெகுபக்ஷமுள்ளவர்களாக யிருந்தனர். அந்நகரத்தின் தனவந்தர்களும் வீணாகானன்

மீது பிரியமுள்ளவர்களாய் அவனை வீணைகானஞ்செய்யும்படி ஆக்ஞாபித்து அவனுக்கு வேண்டிய திரவியசகாயமுஞ்செய்துகொண்டிருந்தார்கள். அந்நகரத்தின் தாசிகளும் வீணைகானனிடத்தில் சங்கீதங்கற்றுக்கொள்வதற்கு தமது வீட்டிற்கழைத்துச் சென்று பலவித ராகதாளமும் கற்றுக்கொண்டு அவனுக்கு வேண்டிய திரவியமும் கொடுத்து அவனிஷ்டப்படியே சரச சல்லாப மனோல்லாசமாயிருப்பார்கள். இவ்விதமே வீணைகானன் அந்நகரத்திற் பலநாளும் வீணைகானஞ்செய்துகொண்டிருப்பதைக் கேள்வியுற்ற அரசனும் அடிக்கடி அவனை வரவழைத்து தமது அரண்மனையில் வீணைகச்சேரி செய்துகொண்டிருக்கும்படி செய்து வெகுமதி கொடுத்தனுப்பிக்கொண்டிருப்பது வழக்கமாயிருந்தார்கள்.

---

## Scene 2.

இடம் — மணிப்புரத்தின் வனம்.

### கதா நாயகர்.

ஞானேந்திரி, சந்நியாசி, வனதேவதை, அமிர்தவசனி.

இங்ஙனம் வீணைகானன் நினைவு விநோதவீணைக் கச்சேரியிலிருக்கையில், சந்நியாசியைத் தேடிக்கொண்டுபோன ஞானேந்திரியானவள் வனதேவதைகொடுத்த மந்திரத்தை உச்சரித்தவுடனே சந்நியாசிரூபமாய் மாறி அந்த மணிபுரத்தின் கானகமார்க்கமாய் வருகையில் மறுபடியும் வனதேவதை பிராப்தமாகி ஞானேந்திரியை விசாரிப்பதாயினள்.

வனதேவதை:—அம்மா! ஞானேந்திரி! இனி உனது மனம் எவ்விதமிருக்கின்றது.

ஞானேந்திரி:—அம்மணி! யான் இனி என் மனசஞ்சல மனைத்தும் அகற்றிவிட்டேன் ஆனால் அந்த சந்நியாசி இருக்கும் ஸ்தானத்தைமாத்திரம் இன்னும் காணவில்லை, அந்த ஸ்தானத்திற்கு எவ்வழியாய்ச் செல்லவேண்டுமோ? காண்பிப்பீர்.

வனதேவதை:—அம்மா! இதோ எதிரில் தெரிகின்றதே? அந்த மலையின் பின்புறத்தில் பலவித விருக்ஷங்களடர்ந்து இருள்சூழ்ந்த கானகமொன்றிருக்கின்றது. அங்கு தோற்றும் நந்தவனத்திலிருக்கின்றான். அவனிடத்தில்போய் நீ சண்டைசெ

ய்யாதே! சமாதானமாகவே பேசி, ஜீவவதை செய்வது பாபமென்று சொல்லி அவன்மனதை ஞானவழியிற் பிரவேசிக்கச் செய்துவிட்டு அவனிடமிருந்தே பெண்களனைவரையும், விடுதலை செய்துவிடுவாய்.

என, புகன்று மறைந்துபோயினள். வனதேவதையின் அநுக்கிரகம்பெற்ற ஞானேந்திரியானவள் சந்நியாசிரூபத்துடனே வனதேவதை குறிப்பித்தபடியே அங்ஙனம் தோற்றும் மலையின் உச்சியிற்சென்று தபஞ்செய்யும் யோகியைப்போல் மவுனமுற்று யோகாணந்தமா யிருந்தனள். அச்சமயம். சந்நியாசியானவன் அங்ஙனம் வந்து ஞானேந்திரியின் அருகில் உட்கார்ந்திருந்தனன். அஞ்ஞானேந்திரியானவள் சந்நியாசியைப்பார்த்து மஹா கோப முற்றவளாய், சீ! பாபாத்மா! அருகில் நெருங்காதேயென்று அதட்டினள். சந்நியாசி திகிலுற்று இம்மஹான் முனிவுற்றால் நன்கல்லவெனகொஞ்சம் தலைவிற்போயிருந்து மறுபடியும் வந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து சொல்வ தாயினன்.

சந்நியாசி:—சுவாமி! யான் சகலமும் துறந்து சந்நியாசி கோலமாய் வந்துவிட்டேனே யென்னை யாதுகாரணமாய் 'பாபாத்மா'வென்று தூஷிப்பதாயினீர்?

ஞானேந்திரி:—அடா! பாபி! ஜீவர்கள்போல், கொலை, களவு, கட்காமமென்னும் பஞ்சமா பாதகங்களை துறந்துவிட்டால் சந்நியாசியாவார். அவர்களுக்கு மஹான்களின் தரிசனங்கிடைத்தால் உடனே ஞானோபதேசஞ் செய்துவிடுவார்கள். நீயோ? ஸ்திரீஹத்தி செய்யத்துணிந்து, இராஜகுமாரத்திகளைத் திருடிக்கொண்டு வருகின்றாய், இந்த சரீரத்தை சதமென்று நம்பிசெய்வதைப் பெறுதற்கு அபேக்ஷிக்கிறாய் இதனாலேபலவித பாபங்களுக்கும் சுதந்த வாதியாய் விட்டாய் ஆகையால் உன்னுடைய நிழல்பட்ட இடமெல்லாம் பாழாகிவிடும் தூரத்தில் விலகிப்போவாய்

சந்நியாசி:—சுவாமி! யான் ஸ்திரீயாகஞ் செய்வதற்கு முயற்சி தேடுகின்றேனே அதுபாபந்தானோ?

ஞானேந்திரி:—ஆம் அதற்கென்ன சந்தேகமா? மேஷயாகம், அஸ்வமேதயாகம், நரயாகம், ஸ்திரீயாகம் முதலானவை யனைத்தும், செல்வப்பொருளை விரும்பி இராஜபதவி கிடைக்குமெனும் பே

ராசையால் செய்வதேயாகும், அவைகளெல்லாம் கிடைத்தாலும், தோற்ற மனைத்தும் மறைவதுபோல் அவையனைத்தும் அழியும் வஸ்துவாயிருக்கின்றன. அதனாலேயே எங்களைப் போன்ற மஹான்களெல்லாம் வாசியோகஞ்செய்து நினைவை சுத்தப்படுத்தி பிரணவத்தைநாடி சதாநிஷ்டையிலிருப்போம் எங்களுக்கு இறப்புமில்லை பிறப்புமில்லை, ஜனனமரணோபாதையின்றி சுத்த சைதன்யமா யிருப்பவனே ஞானியாகும். ஞானிக்கு பாபமில்லை, உங்களைப்போன்றவர்கட்கு சுகதுக்க மிரண்டும் அமைந்திருக்கும். ஆகையால், எப்போதும் சுத்தாத்மாவா யிருக்கும் ஜீவர்கள் தான் சிவமயமாய் விளங்குவர்.

சந்நியாசி:—ஐயோ! ஈதென்ன விபரீத கண்காக்ஷியாயிருக்கின்றதே குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்ளும் விதமாய் யான் இவ்வளவு கஷ்டப்பட்டு ஆத்மலாபம் பெறுதற்கு இடமில்லை போலிருக்கின்றதே. சுவாமி! இனி தாங்கள் அடியேன்மீது கனிவுகூர்ந்து ஞானோபதேசஞ் செய்யவேண்டும்.

என, நமஸ்காரஞ்செய்து மிகவும் பரிதாபமாய் வேண்டிக்கொண்டதினால், ஞானேந்திரி தான் நாடிய காரியம் ஜெயமாச்சுதென்று அந்த சந்நியாசிக்கு ஞானோபதேசஞ் செய்துவிட்டு அந்தவனத்தின் மலைச்சாரலில் விருக்ஷங்களடர்ந்த சோலையில் உட்கார வைத்துவிட்டு அவனுக்குத் தெரியாமல் அப்பாற் சிலதூரஞ்சென்று வனதேவதைகொடுத்த புருஷமந்திரத்தை உச்சரித்து இராஜகுமாரனைப்போல் ரூபமாறி கரத்தில் தனுசும் முதுகில் அம்புறாத்தூணியும் அணிந்துகொண்டு குகையருகில் வந்து அங்கிருக்கும் பெண்களையெல்லாம் அழைத்துக்கொண்டு வேறுவழியாய்ச் சந்நியாசிக்குத் தெரியாமல் புறப்பட்டு வருகையில் அந்தப்பெண்களனைவரும் ஈதென்ன ஆச்சரியம்? யாம் இவருடன் பிரயாணமாய்ப்போவதை சந்நியாசிபார்த்தால் என்னசெய்கிறது யென்று மனவிசாரமாய்வருகையில், அமிர்தவசனியானவள் ஞானேந்திரியை விசாரிப்பதாயினள்.

அமிர்தவசனி:—ப்ரபு! தாங்கள் எமது அரண்மனையில் வந்தவரல்லவோ? தாங்கள் எவ்விதமா யிங்குவருகலாயினீர்?

ஞானேந்திரி:—பெண்ணே! யான் அரண்மனையி லிருக்கும்போது மாயசந்நியாசி உன்னை எடுத்துக்கொண்டு போனதினால் உன்னை அழைத்துக்கொண்டு வருவதாய் உன் தந்தையினிடத்திற்

சொல்லிவிட்டு விட்டேன். இனி நீங்களனைவரும் என்னுடன் வாருங்கள் அந்த சந்நியாசியாகிலும் சரியே! இன்னும் எவர்களாயினும் சரியே! இங்குவந் தெதிர்த்தால் அவர்களையெல்லாம் இந்தக்கணையினால் தும்ஸஞ்செய்து விடுகிறேன்.

என, புகன்றதைக் கேள்வியுற்ற பெண்களனைவரும் மஹாசந்தோஷமடைந்து, இனி நமக்கு நற்காலம் வந்ததென்றெண்ணியவர்களாய் ஞானேந்திரியுடனே வருகையில் வழியிலெதிருற்ற நந்தவனத்தில் யாவரும்போய் அங்கிருக்கும் தாமரைப்பொய்கையில் ஸ்நானபான நேமநிஷ்டைபுரிந்து; அங்கு அடர்ந்து செழித்திருக்கும் விருக்ஷங்களிற் காய்த்துக் கனிந்திருக்கும் பழங்களைப் பறித்துப் புசித்து களையாறி வசந்தமண்டபத்தில் உட்கார்ந்திருந்தார்கள். அச்சமயத்தில் மணிபுரத்தரசன் மைத்துனனும், மஹாராணியின் சகோதரனுமாகிய வீரகாந்தனென்பவன் தனதுமைத்துனனாகிய வீரப்பிரகாசனைக் காண்பதற்காக மணிபுரத்தை நாடிவருகையில் வழியிலெதிருற்ற நந்தவனத்தில் அழகானந்த முகவசீகர தேஜஸமைந்த தெய்வரம்பையைப்போன்ற எழுபது இராஜகன்னியர் உலாவிக்கொண்டிருக்கவும், ஞானேந்திரியானவள் ஆண்பிள்ளை வேஷமாய் கரத்திற் றனுசேந்தி, முதுகில் அம்புறாத்தூணியணிந்து வீரப்காசமாய்த் துணையாய் வரவும் கண்ணுற்ற வீரகாந்தன் ஆச்சரியமடைந்து இவனென்ன இத்தனை பெண்கூட்டங்களுடனே வருகின்றானே இவனை நாம் ஜெயித்துவிட்டால் இந்தகன்னியரெல்லாம் நமது கைவசமாய் விடுவாரெனக்கருதி, ஞானேந்திரியிடம் வந்து அடா! பயலே! நீயோ தனியாயிருக்கின்றாய். யாங்கள் அநேக சேனைகளுடனே, ரதகஜதுரக பதாதிகள் சூழவந்திருக்கின்றோம். நீ இச்சமயம் இவர்களனைவரையும் விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தாலாச்சுது இல்லாவிட்டால் உன்னைக்கொன்று விடுவோமென பயமுறுத்தினன்.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஞானேந்திரி சிரித்து, அடா அறிவில்லாத எருமைக்கூட்டங்கள் போன்ற பேயர்களே ஆயிரம் முயல்கூட்டங்கள் சேர்ந்தாலும் ஓர் சிங்கக்குட்டியை ஜெயிக்கமுடியுமோ அவ்விதமாய் நீங்கள் எத்தனைபேர் வந்தாலும் என்னைஜெயிக்கமுடியுமோ பேயர்களே எதோ உங்களால் சமர்த்திருந்தால் அஸ்திரப்பிரயோகஞ் செய்யுங்கள் பார்ப்போமென் றுரைத்தாள்; அவ்

வார்த்தையைக் கேள்வியுற்ற வீரகாந்தன் அப்படியாவென்று தனது அஸ்திரத்தை எடுத்து தனுசிற்பூட்டுமுன் ஞானேந்திரியானவள் அஸ்திரங்களை எடுத்து தனுசிற்பூட்டி வனதேவதையை தியானித்து தொடுத்துவிடவே வீரகாந்தன் கரத்திற்பற்றிய தனுசையும் முதுகிலணிந்திருந்த அம்புறாத் தூணியையும் அறுத்தெறிந்துவிட்டாள் உடனே அவன் மறுபடியும் அஸ்திரத்தை எடுக்குமுன் பெண்களுக்கு அபாயம் வாராமற்படி அஸ்திரங்களினால் சரக்கூடங்கட்டிவிட்டு அநேக அஸ்திரங்களை யெடுத்து தனுசிற்பூட்டி வீரகாந்தன் தோள்களின்மீது விடுத்து அவர்களை யெல்லாம் புறமுதுகிட் டோடும்படியாய் அடித்துத் துரத்திவிட்டாள். அவர்களனைவரும் ஆச்சரியமடைந்து இனிநாம் தாமதித்திடலாகாதென அங்கிருந்து புறப்பட்டு அரண்மனையிற்சென்று வீரப்ரகாச னிடந்திற்குப்போய் நடந்த சமாசாரத்தை விபரமாய்ப் புகன்று படைத்துணையாய் வரவேண்டுமென வேண்டினர். அம்மன்னன் யாதொன்றையும் தீரவிசாரியாமல் தன்னுடைய மைத்துனனுக்குத் துணையாய் அநேக சேனைசனியங்களை யுத்த சன்னத்தராய்ச் சென்று எதிரியைவென்று வருவீர்களென்று அனுப்பினான்.

அவர்களும் வந்து ஞானேந்திரியுடனெதிர்த்து நிர்வகிக்கமுடியாமல் நாற்புறமும் சிதறியோடினார்கள், ஞானேந்திரி மாத்திரம் தனது கரத்திற்றாங்கிய தனுசிற் விதவிதமான அஸ்திரங்களை பிரயோகஞ்செய்து எதிரிகளுக் கிளைத்திடாமல் மனதைரியமாயிருந்தனள் துணையாய் வந்த சேனைகளும் மனமிரண்டு, இனிநாம் அரசனுக்குத்தெரிவிப்போமென அரண்மனையில் வந்து மஹாப்பிரபு அந்த இராஜகுமாரனை வெல்ல எம்மாலாகாது இனி தாங்களேபோய் ஜெயம்பெற வேண்டுமென்றுரைத்தான், அவர்கள் பரிதாபமாய்ப்புகன்றதை வினவிய வீரப்பிரகாசன் அப்படியாவென கோபித்துத் தனது சேனாதிபதியையும் மந்திரி பிரதானியரையும் துணையாய் அழைத்துக்கொண்டு நந்தவனத்தில் வந்தனன். அச்சமயம் ஞானேந்திரியானவள் சமாதானமென்று பெருத்த கூச்சலிட்டாள், அப்போது யாவரும் கொஞ்சநேரம் வரையிலும் மவுனமுற்றிருந்தார்கள்.

அச்சமயம், ஞானேந்திரியானவள் தன்னிடத்தில் சண்டைசெய்யவந்த வீரப்பிரகாசன் குமாரத்தியாகிய அமிர்தவசனியை அழை

த்துக்கொண்டுபோய் அவனிடம் விடுத்து, ஐயா! யான் உமது புத்திரியின் சிறைமீட்டுக்கொண்டு வந்ததற்கு பதிலுபகாரமாய் என்னை கொல்வதற்காக சேனைகளை யனுப்பியதுமன்றி தாங்களும் ஓடிவந்தீர் ஆயினும் பெரிதல்ல இதோ யான் சொன்னவாக்கியப்படியே உமது குமாரத்தியாகிய அமிர்வசனியை யழைத்துக்கொண்டுவந்தேன் இனி நீங்கள் என்னுடன் சமர்புரிவீராகில் உங்களையெல்லாம் இந்த அஸ்திரத்தினலேயே வென்று ஜெயம்பெறுவேனென்று சொல்லி வாய்மூடுமுன் வீரப்பிரகாசன் மனமகிழ்ந்து ஆ! எனது கண்ணைப்போன்ற மருமகனே உன்னை யாவரோவென்று யான் கவனியாமல் சண்டைசெய்யவந்தேன் இதனை மன்னிப்பீரென்று பணிந்து யாவரையும் தனது அரண்மனைக் கழைத்துக்கொண்டு போயினன்.

---

## Scene. 3.

இடம். மணிபுரத்தின் அரண்மனை.

வீரப்பிரகாசன், வீரகாந்தன், ஞானேந்திரி, அமிர்தவசனி,

ஜோதிடன், வீணுகானன், வைசியன்.

வீரகாந்தன் சந்தேகித்து இவனுரோ தெரியவில்லையே நமது மைத்துனனுக்கு மருமகனெனப் புகல்கின்றனே யவையும் அரண்மனையிற் சென்றபிறகு விசாரித்துக் கொள்வோமென்று அவர்களுடனே அரண்மனையிற்சென்றான். அப்படியிருக்கையில் வீரப்பிரகாசன் யாவரையும் அரண்மனையி லழைத்துக் கொண்டுவந்த பிறகு, சுயம்பாகிகள் அன்னபதார்த்தம் யாவும் சித்தப்படுத்தியான பிறகு அரசனுக்குத் தெரிவித்து அரசனுத்திரவின்படியே யாவரும் போஜனசாலையிற்சென்று விருந்தருந்தியபிறகு அவரவர்க்கிசைந்த மஞ்சத்திற்போய் சயனித்துக்கொண்டிருந்து பிறகு அருணோதயத்திலெழுந்து ஸ்நானபானநேமநிஷ்டையாவு முடித்துக்கொண்டு புலகாரபக்ஷண மருந்தியானபிறகு அன்றையதினம் இராஜகொலுவில்லாமல் அரசன் யாவரையும் வசந்தமண்டபத்தில் வரவழைத்து சந்தோஷவார்த்தை யாடிக்கொண் டிருக்கையில் வீணுகானனும் தனது கரத்தில் வீணையேற்றி தனது துணைவர்களாகிய வைசியருடனே வந்து அந்த வசந்தமண்டபத்தில் ஓர்புரமாய் உட்கார்ந்திருந்தனன்.

இவர்கள் இவ்விதமா யிருக்கையில் வீரப்பிரகாசனானவன் ஞானேந்திரியைப்பார்த்து அப்பா! எனது ஆசை மருமகனே தாங்கள் எவ்விதமாய் அந்த சந்நியாசியை வென்று இந்த பெண்களையெல்லாம் அழைத்துக்கொண்டு வருகலாயினீரென்று கேட்க அன்பின்னாவேசமாயிருக்கும் அம்மாது சிரோன்மணி புகல்வதாயினள்.

ஞானேந்திரி:—அரசே! யான் அந்த சந்நியாசிக்கு ஞானோபதேசஞ் செய்து தபசிலேயி லுட்கார வைத்துவிட்டு இந்தப்பெண்களை யழைத்துக்கொண்டு வருகையில் நீங்களனைவரும் என்மீது சண்டைசெய்ய வந்தீர், மற்ற விபரமனைத்தும் உமதுமனதிற்கே தெரியும்.

வீரப்பிரகாசன்:—ஞானேந்திரா யான் மர்மமுணராமல் யாவனோவென்று நினைத்தேனல்லாமல் நீயென்று எனக்குத் தெரிந்திருந்தால் யான் சண்டைக்குவரமாட்டேன். இனி உனக்கே இந்த எழுபது பெண்களையும் எனது குமாரத்தியாகிய அமிர்தவசனியையும் விவாகஞ் செய்துவைத்து மனமகிழ்வேன்.

வீரகாந்தன்:—மைத்துனரே! இவன் யார் எனக்கின்னனென்று தெரியவில்லையே.

வீரப்பிரகாசன்:—மைத்துனா! நமது அமிர்தவசனியை ஓர் மாயசந்நியாசி அபகரித்துக்கொண்டுபோனான். அச்சமயம் அந்தப்பெண்ணை யார் அழைத்துவந்தாலும் அவர்களுக்கு இந்தப்பெண்ணைக் கலியாணஞ்செய்து வைப்பேனென்று சொன்னேன் அந்தவாக்கியப்படியே சென்று அந்த மாயசந்நியாசியையும் ஜெயித்து அவனிடமிருந்த இந்த எழுபது இராஜகுமாரத்திகளையும் நமது அமிர்தவசனியையும் அழைத்துக்கொண்டு வந்தான் இவன் இவ்வளவு சிறுவயதா யிருந்தாலும் சகல வித்தையிலும் சிறந்திருக்கின்றான்.

வீரகாந்தன்:—ஆ! அப்படியா! யான் யாவனோ வென்றல்லவோ பார்த்தேன்; இவ்விதமா யிருந்தால் யான் வெகுவாய்ச் சந்தோஷமடைந்து, இவனுக்கு வேண்டிய வெகுமதியனைத்தும் கொடுத்து மனமகிழ்வேனே? நல்லதிருக்கட்டும், இத்தகை யசுத்த வீரன் நமது நகரிலிருந்தால் நமக்கு சமயம் வாய்க்கும்போதெல்லாம் துணையாயிருப்பான்.

வீரப்ரகாசன்:—மைந்தனே! இந்த ஞானேந்திரனை நமது சேனாதிபதியாகவே நியமித்திருக்கின்றேன். இவனே மெத்த விஸ்வாசமுடையவன். எனது குமாரத்தியாகிய அமிர்தவசனியை மாயசந்நியாசி யெடுத்துக்கொண்டு போனபோது தனது மனையாளை அழைத்துக்கொண்டுவந்து பெண்ணே யான் இராஜகுமாரத்தியை அழைத்துக்கொண்டு வருகிற வரையிலும் நீ இவர்களுக்கு சொந்த புத்திரியா யிருப்பாயென்று தனது மனையாளுக்குச் சொல்லிவிட்டு அந்தப்பெண்ணை எங்கள் முன்விடுத்து அரசே! யான் அந்த மாயசந்நியாசியை வென்று உமது குமாரத்தியை அழைத்துக்கொண்டு வருகிற வரையிலும் இந்தப் பெண்ணை உமது குமாரத்தியைப்போல் பார்த்துக்கொண்டிருப்பீரென்று மனதைரியஞ் சொல்லிவிட்டுப்போய் அவன் வாக்குத்தத்தை நிறைவேற்றும்படியாய் அந்த சந்நியாசியை ஜெயித்து நமது அமிர்தவசனியுடனிருந்த இராஜகன்னிகைளையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கின்றான். ஆகையால் நாமும் அவனை விடக்கூடாது. அவனும் நம்மைவிட்டுப் பிரியமாட்டான். இவனே எனது சொந்த மருமகனாயமைந்திருக்கிறானென தீர்மானித்தேன் ஆயினும், உமது கருத்தென்ன?

வீரகாந்தன்:—ஆ! அதற்கென்ன தடை உமது மருமகனானல் எனது புத்திரனாகின்றான். இதனால் எனக்கும் சொந்தமே ஆய்விட்டது. இனி காலதாமதம் செய்யாமல் கலியாணகாரியத்தை நிறைவேற்றுவீர்,

என, புகன்றவை யுணர்ந்த வீரப்பிரகாசனும் சம்மதித்து, தனது மந்திரியை யழைத்து எனது குமாரத்திக்கும் ஞானேந்திரனுக்கும் கலியாணவைபவம் நடத்தும்பொருட்டு சகல தேசத்தரசர்களையும் வரவழைப்பாயென்று தெரிவிக்க மந்திரியும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்துக்கொண்டு அரண்மனையின் கணக்கப்பிள்ளையினால் திருமணபத்திரிகை எழுதுவித்து அதைத்தூதர்களிடம்கொடுத்து சகல தேசத்தரசர்கட்குங் கொடுத்துவிட்டு வரும்படியாய் ஆக்ஞாபித்தனன். அவர்களும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து பலதேசங்களிலும் அந்தந்த தேசத்தின் அரசர்களிடம் நிருபத்தைக்கொடுத்துவிட்டு தமது அரசனாகிய வீரப்பிரகாசன் மனக்குறிப்

யையும் புகன்றுவிட்டுத் தமது தேசத்திற்குப்போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

இங்ஙனம் நிற்க, மணிபுரத்தின் தூதுவரால் கிடைத்த திருமணப்பத்திரிகையைக் கண்ணுற்ற சகல தேசத்தரசரும் அதனைவாசித்துப்பார்த்து மனமகிழ்ந்து தமது சேனைசைன்யங்களுடனே புறப்பட்டு பிரயாணமாவதற்குத் தயாரானார்கள், அச்சமயம் அங்கவங்ககலிங்க, காஸ்மீர, நேபாள, மலையாள, பப்பர, கர்னாடக சிந்து, பாஞ்சால, சின, பர்மா, குடகு, கொச்சி, சேர, சோழ, பாண்டியதேசமென்று சொல்லப்படும். இராஜாக்களுடன் இன்னும் இந்த பரதகண்டத்தில் இருக்கப்பட்ட அரசர்களில் யாதொருவரும் மீதில்லாமல் அவரவர்களுடைய மந்திரியின் வசத்தில் செங்கோலைக்கொடுத்துவிட்டு தாங்கள் வருகிறவரையிலும் இராஜரீகம் செய்துக்கொண்டிருக்க வேண்டுமென்று ஆக்ஞாபித்துவிட்டு, யாவரும் ஒருமிக்கத் திரண்டு கடல்பொங்கி வருவதுபோல தமது தேசங்களை விடுத்து ஆரண்யமார்க்கமாய்ச்சென்று மணிபுரத்தில் வருகலாயினர்.

இவர்கள் வருவதைக்கண்ணுற்ற வீரப்பிரகாச ராஜனானவன் மனமகிழ்ந்து, தான் அதிகாநந்தமாய்ச் சிங்காரித்து வைத்திருக்கும் நந்தவனத்தில் யாவரையும் வரவழைத்து அவரவர்க்கிசைந்த விடுதியிலிருக்கச் செய்துவிட்டு மணவறைப்பந்தல் ஜோடித்து, வேதவேதியரனைவரையும் வரவழைத்து யாவரும் மனோல்லாசமாயிருக்கையில் வருங்காலம், நிகழ்காலம், சென்றகாலமென்னும் திரிகாலக்கியானமும் தேற்சியா யுணர்ந்த ஓர் ஜோதிட கணித வல்லோன் தனது வறுமைநோயகலும்பொருட்டு மணிபுரத்திற்சென்றால் திரவியம் சேகரஞ்செய்துக்கொள்ளுவோமென தனது ஜோதிடகணித ஆரூடத்தினால் அறிந்துக்கொண்டு தனது சிஷ்யர்களுடனே அரண்மனையில் வருகலாயினன். அவனைக் கண்ணுற்று மந்திரி பிரதானியரனைவரும் யாவரென விசாரிக்க தான் அரசனைக் காணவேணுமென்று வேண்டிக்கொண்டதினால் அரசனும் அவனை யாரென விசாரிக்க தான்வந்த காரியத்தைப் புகலவாயினன்.

ஜோதிடன்:—அரசே! யான் தென்தேசம் ஜோதிட கணித நூற்பிரகாரம் திரிகால லக்ஷணமும் தேற்சியாய்ப் புகல்வேன். எனது சமர்த்தை தாங்கள் தெரிந்துகொள்ள வேணுமாயின் இப்போதே தெரிவிக்கின்றேன்.

வீரப்ரகாசன்:—சரி! அப்படியானால் எனது குமாரத்திக்கும் ஞானேந்திரனுக்கும் விவாகம் நடத்தப்போவதினால் அவ்விருவருடைய பேர்பொருத்தம் இராசிலக்ஷண மனைத்தும் விவரமாய்ப் புகல்வாய்,

ஜோதிடன்:—அரசே! தாங்கள் சொன்ன அவ்விருவருக்கும் விவாகமாகாது.

வீரப்ரகாசன்:—இஃதென்ன ஆச்சரியம்? யாவும் சித்தமாய் விட்டதே இவ்விதமிருக்க நீ விவாகமாகாதென்று சொன்னால் யாவரேனும் நம்புவதற்கிடமாகுமா?

ஜோதிடன்:—அரசே! உமது மருகனென தாங்கள் மதித்திருக்கும் பெயர் உண்மையில் ஸ்திரீயாகும் தனது கால வித்தியாசத்தினால் ஆண்பிள்ளைரூபம் பெற்றிருக்கலாயிற்று, இதனை இன்னும் சற்றுநேரத்தில் கவனித்துக்கொள்வீர் ஆனால் இவ்விஷயத்தைத் தமது மனதில் வைத்துக் கொண்டிருப்பீர். யானும் இங்ஙனமே இருந்து உமக்கு உண்மையைத்தெரிவிக்கின்றேன்.

என, ஜோதிடன் புகன்றதை யுணர்ந்த வீரப்பிரகாசன் ஆச்சரியமடைந்தவனா யிருக்கையில், வீணாகானனும் தனது சங்கீத கச்சேரியை இராஜசபையில் நடத்தி வெகுமதி பெறவேணுமெனும் எண்ணத்தினால் தனது வீணையைக் கரத்திலேந்திக்கொண்டு தனது நேயர்களுடனே பிரயாணமாகி இராஜ சபையில் வந்தனன். அச்சமயம் வந்த விருந்தினரனைவரும் பசிதணியும்படியாக சுயம்பாகிகள் அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜனஞ் சமைத்துவிட்டு அரண்மனையின் தூதர்களிடந்தெரிவிக்க அவன் மந்திரி பிரதானியரனைவரும் விருந்துக்கு எழுந்தருளவேணுமென்று யாவரும் போஜன சாலையிற்சென்று அவரவர்க்கிசைந்த ஆசனத்திலுட்கார்ந்து சுகபோஜனம் புசித்தானபிறகு யாவரும் காற்றுவாடை வீசுதற்கினிமை பொருந்திய வசந்தமண்டபத்திற்போ யமர்ந்து தாம்பூலந் தரித்துக்கொண்டு, அத்தர், புனுகு, ஜவ்வாதெனும் வாசனாதிகளை திருமேனியி லணிந்துக்கொண்டு மனோல்லாசமா யிருக்கலாயினர்.

இங்ஙனம் இவர்கள் நிலை இவ்விதமா யிருக்கையில் வீணாகானனும் தனது நேயர்களுடனே வசந்த மண்டபத்தில் வந்துட்கார்ந்து

தனது கரத்திலிருக்கும் வீணையைமீட்டி சுதிசேர்த்து தான் பிறந்தது முதல் இந்த வசந்தமண்டபத்தில் வந்து யாசகம் பெற்றுக்கொண்டுபோகும் வரையிலும் நடந்த சமாச்சாரங்களனைத்தும் கீர்த்தனையாயமைத்து ஆனந்த பைரவி ராகத்தில் பாடிக்கொண்டிருந்தனன். அச்சமயம், அங்குவந்திருந்த சகலதேசத்தின் அரசர்களும், வீரப்பிரகாசனும் மற்றுமுன்னோரும் அந்தப் பாட்டைக்கேட்டு மனோஉல்லாசமடைந்தவர்களாய் இவன்யாவனோ இராஜகுமாரனைப்போற் காண்கிறது, கஷ்டகாலம் வந்தால் எத்தனை யசுத்தவீரரும் இவ்விதமே கஷ்டமடைவார்கள், சுகம்பெறுவதற் கிசைந்த நற்காலம் வந்தால் சகல கஷ்டமும் நீங்கி சுகம்பெற்று வாழ்ந்து தெய்வானுகூலத்தினால் சுகானந்தமா யிருக்கலாமென்று பேசிக்கொண் டிருந்தார்கள். ஆனால் அவர்களுடனே ஆண்பிள்ளை வேஷமாய் தரித்து வந்திருக்கும் ஞானேந்திரியானவள் தனது மணாளன் இதோ வந்துவிட்டாரென்று மனமகிழ்ந்து வனதேவதை உபதேசித்த ஸ்திரீமந்திரத்தை உச்சரித்து பெண்ணுருபமாகி உடனே விஞ்ஞானன் பாதத்தில் போய்விழுந்து பணிந்து சொல்வதாயினள்.

ஞானேந்திரி;—பிராணபதியே! தாங்கள் என்னை விட்டுப் பிரிந்தபடியினாலல்லவோ உமக்கிவ்வளவு கஷ்டகாலம் வந்தது, இனி பகவானுடைய கிருபையால் நமது கஷ்டமெல்லாம் போய்விட்டது இனி அஞ்சவேண்டாம் வருவீர்.

என, அழைத்துக்கொண்டு வருகையில் சபையோரனைவரும் ஆச்சரியமடைந்து இதென்ன மாயஜாலவித்தையைப்போல் இருக்கின்றதேயென்று ஆச்சரியமடைந்தவர்களா யிருந்தார்கள். அப்பால் ஞானேந்திரி தமது உண்மையை சகல தேசத்தரசர் முன்னிலையில் நடந்த சமாச்சாரங்களனைத்தும் விபரமாய்ச் சொல்லும்போது யாவரும் கேட்டு சந்தோஷமானார்கள். அச்சமயம் வீரப்ரகாசன் ஜோதிடகணித வல்லோன் சொன்ன ஆருடம் சரியாயிருக்கின்றதென்று மனமகிழ்ந்து அவனுக்குவேண்டிய வெகுமதியனைத்தும் கொடுத்து சந்தோஷப்படச்செய்துவிட்டு விஞ்ஞானனுக்கு இராஜ உடுபாவனை உடுத்தி தங்களுடன் சமானமாய் உட்கார வைத்துக்கொண்டு அவனுக்கு பலவிதத்திலும் தைரியஞ்சொல்லி அவனுடைய சவிஸ்தாரமனைத்துங் கேள்வியுற்று ஆனந்தமுற்றிருந்தனன். அன்றைய பகலந்த சுபமங்களத்தினாலே கழித்து அந்திப்பொழுதானவுடனே யா

வரும் விருந்தருந்தி அவரவர்க்கிசைந்த மஞ்சத்திற் சயனித்து அருணேதயமான பிறகு யாவரும் விழித்தெழுந்து ஸ்நானபான நேமநிஷ்டை யனைத்தும் முடித்துக்கொண்டு பலகாரபக்ஷணம் செய்து பசியாறினபிறகு ஞானேந்திரியின் உத்திரவுபடியே கமலநாயகி அமிர்தவசனி இன்னும் தன்னால் சிறை மீட்டுவந்த எழுப[illegible]பெண்களையும் வீணுகானனுக்கு கலியாணஞ் செய்யும்படியாக ஒப்புக்கொண்டு மணவரைப்பந்தலில் சிங்காரமாய் ஜோடித்து அந்த எழுபத்திரண்டு பெண்களுக்கும் வீணுகானனுக்கும் மங்களஸ்நானஞ் செய்துவித்து ஆடையாபரணங்களாற் சிங்காரித்து மணவரைப் பந்தலில் உட்காரவைத்து வேதவேதியர் சுகிபவாவென்று ஆசீர்வதித்திடவும் வீணுகானன் அந்த எழுபத்திரண்டு பெண்களுக்கும் மங்கிலியங்குட்டி மனமகிழ்ந்தனன்.

அப்பால் சகலதேசத் தரசர்களும் விருந்தமுதருந்தி அவரவரிருப்பிடமேகினர். வீணுகானன் தனது பத்தினிகளுடனே சுகானந்தமாய் வாழ்ந்திருந்தனன், அ[illegible] வீரகாந்தனும், வீரப்பிரகாசனும் சந்தோஷகரமாய் [illegible]ழ்ந்திருந்தார்கள்.

வீணுகானன் ஞானேந்திரி
[illegible]ற்றுப்பெற்றது.

---


## ராஸ்கோப் லீவர் கெடியாரம்.



5 வருஷ உத்திரவாதப்பத்திரம் கொடுக்கப்படும். இக்கெடியாரமானது உறுத்த சாமான்களால் செய்யப்பட்டது. பார்வைக்கு கம்பீரமாயும் அழகாயும் உள்ளது முரட்டு வேலைகள் செய்பவர்களுக்கு வெகு அநுகூலமானது இதை தரித்துக் கொண்டு எவ்வளவுதூரம் ஓடினும் எவ்வித முரட்டான வேலை செய்தாலும் நிற்காமல் போகும் ஆயிரம் கணக்கான கெடியாரங்கள் செலவா[illegible]கிறது உடனே ஆர்டர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

சங்கிலியுடன் விலை ரூபா 3.

தனலட்சுமி அண்டு கம்பெனி, சௌகார்பேட்டை போஸ்டு மதிராஸ் யென்று யெழுதவும்.